Koviloor Digital Library

பி.ஸ்ரீ.

ஆழ்வார்கள் வரலாறு

3

Acc No 26733

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-2

ஆழ்வார்கள் வரலாறு

(மூன்றாம் பாகம்)

குலசேகர ஆழ்வார்

பி.ஸ்ரீ

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 26733

ஜெனரல் பப்ளிஷர்ஸ்
ப. எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை
மயிலாப்பூர், சென்னை - 600 004

Koviloor Digital Library

உரிமைப் பதிவு
முதற் பதிப்பு - 2002
இரண்டாம் பதிப்பு - 2010
மூன்றாம் பதிப்பு - 2013

© பதிப்பாளர்

விலை: ரூ. 70-00

Typesetting : Amaravathi & Co., Chennai
Printed at : Logha Offset Printers, Chennai - 14

Koviloor Digital Library

4-2

முகவுரை

சங்ககாலத்துக்குப் பிறகு தமிழ் நாட்டை உய்விக்க வந்த பெரியோர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும். புலமைச் சிறப்பினால் இயற்கையையும் மனிதப் பண்பையும் ஓவியமாக்கிக் காதலையும் வீரத்தையும் சிறப்பித்துப் பாடினார்கள் சங்ககாலப் புலவர்கள். பின்வந்த தெய்வப் புலவர்களாகிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் அருளை வளர்த்த பெருமக்கள். அவர்கள் காலத்தில் திருக்கோயில்கள் விளக்கம் பெற்றன. இறைவழிபாடு ஏற்றமுடையதாயிற்று. கடவுட் பாடல்களில் தமிழர் கருத்து ஆழப் பதிந்தது.

ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்தருளிய பாடல்கள் திவ்யப் பிரபந்தம் என்னும் பெயரோடு வழங்கி வருகின்றன. அவற்றை வைணவ உலகம் வேதமாகப் போற்றுவதோடு பல வகையில் விளக்கங்கூறிக் காலக்ஷேபத்தால் வளர்த்து வருகிறது. ஆயினும் சம்பிரதாயத்துக்கே சிறப்பளிப்பவர் களிடையே உலவும் வரையில் திவ்யப்பிரபந்தத்தின் அழகை யாவரும் உணர்ந்து இன்புற இயலாது. இதனை நன்கறிந்த அன்பர் பி.ஸ்ரீ. அவர்கள் தமிழர் யாவருமே அறியும்படி திவ்யப்பிரபந்தங்களைப்பற்றியும் ஆழ்வார்களைப்பற்றியும் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதிவருகிறார். அவற்றைத் தமிழ்நாட்டார் வரவேற்றுப் படித்துப் பயன்பெற்று வருகின்றனர்.

இப்போது ஆழ்வார்களைப் பற்றித் தொடர்ந்து பல நூல்களை எழுதும் திருத்தொண்டில் ஈடுபட்டிருக்கிறார். இதற்கு முன் முதலாழ்வார் மூவரையும் பற்றி, ''மூவர் ஏற்றிய மொழி விளக்கு'' என்னும் புத்தகத்தையும், திருமழிசையாழ் வார், திருப்பாணாழ்வார் என்னும் இருவரையும் பற்றி,

Koviloor Digital Library

''தொண்டக் குலமே தொழுகுலம்'' என்னும் புத்தகத்தையும், தொண்டரடிப்பொடி ஆழ்வாரைப்பற்றி, ''துயில் எழுப்பிய தொண்டர்'' என்னும் புத்தகத்தையும் எழுதி வழங்கியிருக்கி றார். ''அடி சூடிய அரசு'' என்ற இந்த நூலில் குலசேகர ஆழ்வாரைப் பற்றி எழுதியுள்ளார்.

சேர மன்னராகிய குலசேகரப்பெருமாள் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். முடிசூடு மன்னனாக இருப்பதை விடத் திருமாலின் அடிசூடும் அரசாதல் சிறந்ததென்றும், அதைவிடப் பாகவதர்களின் அடிசூடும் அரசாதல் மிகச் சிறந்ததென்றும் உணர்ந்து பகவானிடம் பித்தராய்ப் பேயராய் நின்று அருளின்பத்தை நுகர்ந்தவர். அவருடைய திருப்பாடல்கள் அவர் உள்ளத்து உணர்ச்சிகளைத் தெள்ளத்தெளியக் காட்டுகின்றன.

குலசேகரப் பெருமாளின் வரலாற்றைக் குருபரம்பரை கூறுகிறது. வியாக்கியானக்காரர்கள் சில குறிப்புக்களை உதவியிருக்கிறார்கள். அவருடைய பக்திச் சிறப்பை அவர் பாடியருளிய பெருமாள் திருமொழி தெளிவாக்குகிறது. வைணவ நூல்களிலும் பிற தமிழ் நூல்களிலும் பலகாலமாக ஈடுபட்டு, இக்கால மக்களுக்கு விளங்கும் வகையில் சமரச மனப்பான்மையோடு பொருளை விளக்கும் ஆற்றல் பெற்றவர் பி.ஸ்ரீ. அவர்கள். தமிழ் இலக்கியத்திலுள்ள புதை பொருளையும் இனிய சுவையையும் தெளிவாகவும் இனிமை யாகவும் எடுத்துக்காட்ட முன்வந்த பல எழுத்தாளர்களில் இவர் பழைய ஜாம்பவான். சைவ நூல்களையும் உலகத்துப் பேரறிஞர்களின் கருத்துக்களையும் ஓதி உணர்ந்தவராதலின் இவருடைய கட்டுரைகளில் அவை இடையிடையே வந்து மணக்கும்.

இந்த நூலில் குலசேகர ஆழ்வாருடைய வரலாற்றையும் அவருடைய திருமொழியையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறார் இவ்வாசிரியர். நிகழ்ச்சிகளை அழகாகச் சொல்லியிருப்ப

Koviloor Digital Library

தோடு பல இடங்களில் நாயன்மார்களின் வரலாற்றையும் ஒப்புமை காட்டுகிறார். முடிசூடும் அரசைக் காட்டிலும் அடிசூடும் அரசே பெரிதெனக் கருதினார் குலசேகரர். அந்தத் திறத்தில் கூற்றுவ நாயனாரும் இவரும் ஒத்தவர்கள் என்று கூறும் பகுதி படித்துச் சிந்தித்து இன்புறுவதற்குரியது. 'திருவரங்கத்துக்கு நாளைப் போவோம், நாளைப் போவோம்' என்ற பேரார்வத்தோடு இருந்தார் குலசேகர ஆழ்வார் என்னும் போது, திருநாளைப் போவாரை நினைப்பூட்டுகிறார். குலசேகரப் பெருமாளுக்கும் சேரமான் பெருமாளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும் தனியே ஓர் அத்தியாயத்தில் ஆராய்கிறார்.

குலசேகரப் பெருமாளுடைய திருப்பாசுரங்களில் உள்ள கருத்தை அழகாக மல்லிகை மாலையைத் தொடுத்தாற்போல எடுத்துரைக்கும் ஆற்றலை இந்நூலில் பல இடங்களில் காணலாம். குலசேகரர் வரலாற்றையே அப்பாசுரங்களின் வாயிலாக எடுத்துக் காட்டுகிறார். ராமனையும் கிருஷ்ணனையும் குலசேகரர் பாடி அநுபவித்திருக்கிறார். அந்தப் பாசுரங்களை நன்றாக அநுபவித்த பி.ஸ்ரீ. இந்த நூலில் நாமும் அநுபவிக்கும்படி செய்கிறார். இத்தகைய பகுதிகளில் பல இடங்களில் வியாக்கியானத்திலுள்ள நுட்பமான பகுதிகளை எடுத்து விளக்கித் தம்முடைய எழுத்திலே பின்னும் சுவையை ஏற்றியிருக்கிறார்.

சம்பிரதாயமாக வழங்கிவரும் சில செய்திகளைக் குருட்டு நம்பிக்கை என்று மறுக்காமலும், அவற்றை அப்படியே சொல்லாமலும் சமற்காரமாக ஒரு போக்குக் காட்டி எழுதியிருக்கிறார். குலசேகரரைக் கௌஸ்துபமணியின் அம்சம் என்று வைணவர்கள் கொண்டு பாராட்டுவார்கள். 'பகவான் திருமார்பை அணிசெய்யும் கௌஸ்துபமாணிக்கமே இப்படிக் குழந்தை வடிவில் வந்திருக்கவும் கூடும். அவன் அற்புதன்; அவனது அற்புத மாயைகளை அறிவார் யார்' என்று

Koviloor Digital Library

பக்தர்கள் தமக்குள்ளே பேசிக் கொண்டனர்' என்று இவர் எழுதுகிறார். இப்படி எழுதிவிட்டு,

''மார்பில் அணிவதற்கே - உன்னைப்போல்
வைர மணிகள் உண்டோ!''

என்ற பாரதியின் வாக்கை எடுத்து இணைத்திருப்பது எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கிறது!

இராமன் வில் இறுப்பதற்கு முன்னால் சீதையைக் கண்டான் என்றும் அவளும் அவனைக் கண்டாள் என்றும் இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினரென்றும் கம்பன் பாடுகிறான். இந்தக் கருத்துக்கு வித்து,

''செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக் காகச்
சினவிடையோன் சிறையிறுத்து''
''வேய்போலும் எழில்தோளி தன்பொருட்டா
விடையோன்றன் வில்லைச் செற்றாய்''

என்பவற்றில் அமைந்திருப்பதாக இந்த அறிஞர் எடுத்துக் காட்டியிருப்பது பாராட்டுவதற்குரியது. இப்படியே குலசேகரர் வாக்கிலும் கம்பன் கவிதையிலும் ஒப்புமையாக உள்ள சிலவற்றைக் காட்டுகிறார்.

படிக்கும்போது அலுப்புத்தட்டாமல் இருக்கவேண்டு மானால் எழுத்தில் தெளிவு வேண்டும்; தெளிவு பொருள் விளங்க உதவுமேயன்றி படிக்கும் ஆர்வத்தைத் தூண்ட இனிமையாகச் சொல்லவேண்டும். தெளிவு, இனிமை என்ற இரண்டும் பி.ஸ்ரீ. அவர்களின் எழுத்தில் இருப்பதை ஒவ்வொரு பக்கமும் காட்டுகிறது.

தமிழ் மக்கள் யாவருமே படிக்கவும் இன்புறவும் பயன் பெறவும் ஏற்ற புத்தகம் இது.

கி.வா. ஜகந்நாதன்

Koviloor Digital Library

ராஜரிஷியான குலசேகராழ்வாரின் வாழ்க்கைச் சித்திரத்தையும், குணச் சித்திரத்தை யும் இந்நூலில் கண்டு கொள்ளலாம். அன்று மலை நாட்டில் பெய்த பக்தி மழையை இன்றைத் தமிழர்களும் தங்கள் வாழ்க்கைய்யை வளமுறச் செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

Koviloor Digital Library

பொருளடக்கம்

1.	முடியா? காதலா?	9
2.	ஆட்சியும் கனவுக் காட்சியும்	15
3.	திருமலை யாத்திரை	19
4.	அரசரை ஆண்ட அன்பர்கள்	23
5.	பயங்கர சோதனை	31
6.	செவியால் கண்ணால் பருகுகிறார்	37
7.	குலசேகர ராமாயணம்	43
8.	பாசுரங்களில் குலசேகரன்	56
9.	'நாடு துறந்தீர்; உலகம் ஆள்வீர்!'	66
10.	பாதை கண்டார்	81
11.	திருமலை காட்டிய வழி	90
12.	தில்லையில் குலசேகரர்	100
13.	குலசேகரர் கண்ட காதல் வெள்ளம்	110
14.	ஆழ்வாரின் தாயன்பு	117
15.	யாத்திரை பூர்த்தியானது	128
16.	குலசேகரப் பெருமாளும் சேரமான் பெருமாளும்	137
17.	பக்தி உலகிற்குக் குலசேகரர் செய்தி	143
18.	பெருமாள் திருமொழி	149

Koviloor Digital Library

குலசேகர ஆழ்வார்

1. முடியா? காதலா?

குழந்தைகளுக்குக் கற்கண்டு என்றால் விருப்பம் அதிகம். 'பாப்பா, உனக்கு இந்த வயிரமணி வேணுமா, கற்கண்டுக்கட்டி வேணுமா?' என்று இரண்டையும் காட்டி னால், 'கற்கண்டுதான் வேணும்' என்று எடுத்துக்கொள்ளும் கள்ளங் கபடறியாத பாப்பா. பொன்னையும் மணியையும் காட்டிலும் ஒரு கனி குழந்தையின் கவனத்தைக் கவர்ந்துவிடும்.

காதலும் பக்திக் காதலும்

குழந்தை பெரியவனாகிறான். இளைஞனாகிக் கட்டிளங்காளைப் பருவத்தை எட்டுகிறான். இப்பொழுது இவன் உள்ளத்திலே காதல் உணர்ச்சி இடம் பெறுகின்றது. கனியையோ கற்கண்டையோ இவன், தான் உண்ணுவதைக் காட்டிலும் தன் காதலிக்குக் கொடுத்து அவள் உண்ணக் கண்டு மகிழ்வெய்துகிறான். அழகான பூக்களையோ பூமாலை களையோ கண்ணுற்றால், அவள் கூந்தலில் சூட்டி அழகு பார்க்க வேணும் என்று ஆசைப்படுகிறான்.

> பின்னிய கூந்தல்
> பேதையின் இளமுகம்
> என்உளத்(து) இருந்(து) இங்(கு)
> இயற்றுவ(து) இப்பணி!

என்ற மனநிலையுடன் காதலிக்காகப் பணி புரிவதை இன்பமாகவே கருதுகிறான்.

Koviloor Digital Library

அதிகார ஆடம்பர வைபவங்களைக் காதலித்துக் காதலியைத் துறப்பவரும் உண்டு. தனிமுடி கவித்து உலகை ஆளவேண்டும் என்ற ஆசையிலே காதலை மறப்பவரும் துறப்பவரும் உண்டு. புத்தர், இராமாநுஜர் ஆகியோர் யதிராஜர் களாகி உலகத்திற்குப் பணி புரிவதற்காகத் தங்கள் மனைவி யரைத் துறந்து சென்றனர் என்பது சரித்திரப் பிரசித்தம்.

காதலுக்காக முடி துறந்தவர்களும் உண்டு. அரச வம்சத்தில் பிறந்திராத சாதாரணப் பெண் ஒருத்தியை மணந்து கொண்டால் அரசன், தன் பதவியைத் துறக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படக்கூடும் அல்லவா? அந்த நிலையில் சில அரசர்கள் எப்படியாவது தங்கள் காதலையும் காதலியையும் மறந்துவிட முயல்வதும் உண்டு. எனினும் வேறு சிலரோ சாதாரணத் தலைப்பாகையைக் களைந்து விடுவதுபோல், மணிமுடியைத் தள்ளிவிட்டுக் காதல் வாழ்வே அரச வாழ்விற்கும் மேலான வாழ்வு என்று கருதி ஒழுகுவதையும் காண்கிறோம்.

பக்தர்களுக்கோ பக்திதான் எல்லாவற்றுக்கும் மேலானது என்று தோன்றுகிறது. பக்தகுலமே மேலான ராஜகுலம் என்பதும், பக்திக் காதலே மேலான காதல் என்பதும் பக்தர் கொள்கை. குழந்தைக்குக் கனிபோல், கற்கண்டுபோல், சாதாரணக் காதலர்களுக்குக் காதலும், பேராசை கொண்டவர் களுக்குப் பெரும் பதவியும் தோற்றமளிக்கின்றன என்பது பக்தர் கருத்து.

இறைவனைச் சரணமாக அடைந்தவர்களுக்கு வாழ்க்கை, அன்பு மயம் ஆகிவிடுகிறது. அன்பு மயமான வாழ்க்கை இன்பமயமானதுதானே? பக்தி இல்லாத வாழ்க்கை இனிமை இல்லாததே என்பது பக்தர் கொள்கை.

இது குறித்து அப்பர் சுவாமிகள் பின்வருமாறு பாடுகிறார்:

Koviloor Digital Library

கனியினும், கட்டி
பட்ட கரும்பினும்,
பனிம லர்க்குழல்-
பாவைநல் லாரினும்,
தனிமுடி கவித்(து)
ஆளும் அரசினும்,
இனியன் தன்அடைந்
தார்க்(கு)இடை மருதனே!

(பனிமலர்க்குழல் - குளிர்ந்த பூக்களைச் சூடியிருக்கும் கூந்தல். பாவைநல்லார் - அழகிய பெண்கள். தன்அடைந் தார்க்கு - தன்னைச் சரணம் என்று அடைந்தவர்களுக்கு. இடைமருதன் - திருவிடை மருதூரில் கோயில் கொண்டி ருக்கும் சிவபெருமான்.)

இறைவனைச் சரணமாக அடைந்து வாழும் அடியார் களை அவன் அடி சார்ந்தவர்கள் என்றும், அவன் அடிசூடிய தொண்டர்கள் என்றும் குறிப்பிடுவது வழக்கம். அடியார்களை 'அடி சூடிய அரசர்கள்' என்றும் சிறப்பித்துப் பேசலாம். முடிசூடிய அரசர்களிலும் அடிசூடியவர்கள் உண்டு. இவர்களில் முடிதுறந்து 'அடிசூடும் அரசே அரசு' என்று கருதி ஒழுகியவர்களும் உண்டு.

கூற்றுவ நாயனாரும் குலசேகரரும்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் கூற்றுவ நாயனார் முடிசூடும் அரசைக்காட்டிலும் அடி சூடும் அரசே பெரிதெனக் கருதினார். இவர் போர் முனையில் தோள் வலி காட்டிப் பகைவர்க்குக் கூற்றுவனாகத் தோன்றிய ஒரு சிறந்த வீரர் ஆவர். சிவபெருமான் திருப்பெயரை நாவிலும், வாளைக் கையிலும் கொண்டு வாழ்க்கை நடத்தியவர். சிவனடியார் தொண்டிலும் விசேஷ விருப்பம் உள்ளவர்.

அரசப் பெருஞ் செல்வம் எய்தப் பெற்றதும், இந்த வீரர் முடிசூட்டிக்கொள்ள விரும்பினார். முடிதானே அரசர் திருவின்

Koviloor Digital Library

அறிகுறி? சோழ மன்னர்களுக்குப் பரம்பரையாக முடி சூட்டியவர்கள் தில்லைவாழ் அந்தணர்கள். அவர்களே தம்மையும் முடிசூட்டி வைக்க வேண்டும் என்பது இந்தக் கூற்றுவ வேந்தர் விருப்பம்.

அந்த அந்தணர்களோ, 'சோழர்களின் அந்தப் பழைய குல முதல்வர்களுக்கு அன்றி வேறு எவருக்கும் நாங்கள் முடிசூட்டோம்' என்று மறுத்துவிட்டனர். பிறகு அவர்கள் இந்த அரசர் குடை நிழலில் குடிகளாகவும் வாழ விரும்பாமல், சேர மன்னனுக்கு உரிய மலைநாட்டுக்குப் போய்விட்டார்கள். அவர்களில் ஒரு குடும்பம் மட்டும், தக்க சமயம் வாய்க்கும் போது சோழ மன்னன் ஒருவனுக்கு முடி சூட்ட வேண்டும் என்று அந்த மணிமா மகுடத்தைப் பேணிப் பாதுகாப் பதற்காகத் தில்லையில் தங்கிவிட்டது.

இது தெரிந்த கூற்றுவர், மனம் தளர்ந்து நடராஜாவின் திருவடிகளில் சரணம் அடைந்தார். அன்று இரவில் தூங்கப் போகும் தருணத்தில் இறைவனைத் தியானித்த வண்ணம், 'அடியேனுக்கு மணிமுடி வேண்டாம்; உன்னுடைய மலரடியே முடியாகக் கிடைத்தால் போதும்; அதுவே பெரும் பேறு' என்று தமக்குள் தாமே சொல்லிக்கொண்டார். பிறகு உறங்கிவிட்டார்.

அம்பலத்துள் ஆடுகின்ற தம்பிரானார் கனவிலே தோன்றினார்; 'உன் முடிமேல் என் அடிமலரைச் சூட்டுகிறேன்; உன்னுடைய அருளாட்சியில் உலகம் செழித் தோங்கும்' என்று அருளினார். தமது நோக்கத்தை இறைவர் இனிது நிறைவேற்றி வைத்தார் என்ற பெரு மகிழ்ச்சியுடன் துயிலுணர்ந்தெழுந்தார் நாயனார்.

பேரரசராக இருந்தும், 'முடிசூட்டப் பெற்றோம் இல்லையே?' என்ற வருத்தம் சிறிதும் இன்றி வையம் காத்தளித்தார் கூற்றுவனார். இக்கதையை ஒருவாறு நினைவூட்டுகிறது குலசேகராழ்வாரின் கதையும்.

 Koviloor Digital Library

முடிசூடிய பேரரசராக வாழ்ந்த குலசேகரர் அடியார்க்கு அடியராகி,

திருமகளோ(டு) இனிதமர்ந்த
செல்வன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடம் தன்னுள்
அரசமர்ந்தான் அடிசூடும்
அரசை அல்லால்,
அரசாக எண்ணேன் மற்(று)
அரசு தானே!

(திருமகளோடு - லட்சுமியோடு. தில்லைநகர் - சிதம்பரம்.) என்று தமது இதயத்தை அப்படியே திறந்து காட்டுகிறார்.

கூற்றுவனாரைப்போல் குலசேகரரும் ஒரு பெரு வீரராவர்.

குடைவிளங்கு விறல்தானைக்
கொற்ற ஒள்வாள்
கூடலர்கோன் கொடைக்குல சேகரன்

(விறல்தானை - வலிமையுள்ள சேனை. கொற்ற ஒள்வாள் - வெற்றி புரியும் ஒளி வாய்ந்த வாளாயுதம்.)

என்ற குலசேகராழ்வார் வாக்கிலிருந்தே இவரது வீரச் சிறப்பும் வெற்றிச் சிறப்பும் நன்கு புலனாகும்.

கூற்றுவ நாயனார் நடராஜாவின் பெயரை நாவில் தரித்ததுபோல், குலசேகரர் அரங்கன் திருநாமத்தை நவில்வதே நாவின் பேறு எனக் கருதி ஒழுகினார். அடியார் தொண்டில் இருவருக்கும் விருப்பம் அதிகம்.

'முடி ஒன்றும் ஒழிய அரசர் திருஎல்லாம் உடையர் ஆயினார்' என்பது கூற்றுவ நாயனாரைக் குறிக்கும் சேக்கிழார் வாக்கு. அவர் கடைசிவரை முடிசூடாமலே அரசு புரிய நேர்ந்து

Koviloor Digital Library

விட்டது. கடைசியாக முடி சூடவேண்டும் என்ற ஆசையை அறவே துறந்து, இறைவன் அடிசூடும் அரசராகிச் சிங்காசனத் தில் இருந்து அரசு புரிந்த வண்ணம் இறைவன் அடியார்களுள் சிறந்ததோர் அடியாராகத் திகழ்ந்தார்.

குலசேகரரோ முடி மன்னராக இருந்தவர். 'வானவர் தம்பிரான் பாதமலர் சூடும்' ஆசை இவரை ஆட்கொண்டது. அரசப் பெருவாழ்வு ரசமில்லாத வாழ்க்கை, மெய்யில்லாத வாழ்க்கை என்று தீர்மானித்தார்.

யானைக் கழுத்தகத்தின் மேல் பவனி வருவதும், கொற்ற வெண்குடைக் கீழ் மன்னர் மன்னனாகி வீற்றிருப்பது மாகிய முடியரசு வேண்டாம் என்று துறந்து, திருவரங்கத்திலே அணிஅரங்கன் திருமுற்றத்திலே பல்வேறு வகுப்பினரான தொண்டர் குழுவில் கலந்துகொண்டு ஆடிப் பாடித் தொண்டாற்றுவாராயினர்.

பக்திக் காதலால் முடிசூடும் ஆசை துறந்து அரசு புரிந்தவர் கூற்றுவ நாயனார். குலசேகராழ்வாரோ முடி துறந்து தொண்டரோடு தொண்டராகக் கலந்துவிட்டார்.

குலசேகரர் கதை அடியார்களின் வரலாறுகளில் மிக்க சுவையுள்ள, தனிச் சிறப்பு வாய்ந்த கதையாகும். இக்கதையை நாம் இனி விரிவாகத் தெரிந்துகொள்வோம்.

Koviloor Digital Library

2. ஆட்சியும் கனவுக் காட்சியும்

மலைவளம், நிலவளம், நீர்வளங்களையுடைய கொல்லி நகரத்தை ஆண்டுகொண்டிருந்த வஞ்சி வேந்தனான திடவிரத பூராஜதேவனின் செல்வப்புதல்வர் நம் குலசேகரர். அவன் நன்னெறியாளன்; நல்ல புத்தியும் பக்தியும் உள்ளவன்.

நீண்ட நாளாகத் தனக்கு மக்கட்பேறு சித்திக்கவில்லையே என்று வியாகுலப்பட்டுத் தன்னுடைய சமஸ்தானத்துப் பண்டிதர்களை நோக்கி, 'நாம் இதற்கு என்ன செய்வது?' என்று கேட்டான். அதற்கு அவர்கள், 'ஐயனே! பண்டைக் காலத்தில் தசரத சக்கரவர்த்தியும் உம்மைப்போல் சிந்தை கலங்கி, வசிஷ்டர் முதலான முனிவர்களிடம் தமக்குப் பிள்ளை இல்லாத குறையை விண்ணப்பித்துக்கொண்டார். அம்முனிவர்கள் புத்திரகாமேஷ்டி என்னும் வேள்வியைத் திருமாலின் அருளை முன்னிட்டுச் செய்யுமாறு போதித்தனர். சக்கரவர்த்தியும் அப்படியே செய்து 'சக்கரவர்த்தித் திருமகன்' என்று உலகம் போற்றும் புதல்வனைப் பெற்றுப் பெருமகிழ் வெய்தினார். நீயும் அப்படியே செய்து, திருமாலின் அருளுக்குப் பாத்திரனாக முயல்வாய்; அப்போது உன் குறை தீரவும் கூடும்' என்று பதில் சொன்னார்கள்.

பிறந்ததும் வளர்ந்ததும்

வஞ்சி வேந்தன் அப்போதே பிள்ளைப்பேறு பெற்று விட்டதாக மனமகிழ்ந்து சற்குண சம்பன்னர்களான திருமாலடியார்களை வரவழைத்து அவர்களையும் கலந்துகொண்டு பகவானுக்குப் பிரீதியாகப் புத்திரகாமேஷ்டி வேள்வியைக் குறைவறச் செய்து முடித்தான். இறைவனது இன்னருளால் ராணி நாதநாயகி கர்ப்பவதியாகிப் பத்து மாதமும் பூர்த்தியான

Koviloor Digital Library

அளவில் 'சேர குலத்துக்கு ஒரு தீபம் தோன்றியது!' என்று சொல்லும்படி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். இக் குழந்தைக்குக் 'குலசேகரன்' என்று பெயரிட்டார்கள்.

குழந்தையைப் பார்த்தவர்கள், 'நமது ராஜாவுக்கு ஒரு ஜீவரத்தினம் கிடைத்துவிட்டது!' என்றார்கள். 'மக்களுள் மாணிக்கமாக வளரப்போகிறான் இவன்' என்று முகத்தைப் பார்த்தே குறி சொன்னார்கள் சோதிடக் கலைஞர்கள்.

'பகவான் திருமார்பை அணி செய்யும் கௌஸ்துப மாணிக்கமே இப்படிக் குழந்தை வடிவில் வந்திருக்கவும் கூடும். அவன் அற்புதன்; அவனது அற்புத மாயைகளை அறிவார் யார்?' என்று பக்தர்கள் தமக்குள்ளே பேசிக் கொண்டனர். அரசனும் அரசியும் குழந்தையை நோக்க நோக்க அவர்கள் உள்ளத்திலே ஏற்பட்ட உவகையை என்னென்பது? இந்த உணர்ச்சிகளை,

மார்பில் அணிவதற்கே - உன்னைப்போல்
வைர மணிகள் உண்டோ?
சீர்பெற்று வாழ்வதற்கே - உன்னைப்போல்
செல்வம் பிறிதும் உண்டோ?

என்ற புதுமைக் கவிஞரின் வாக்கிலே ஒருவாறு காணலாம்.

கல்வி மாட்சியும் ஆட்சியும்

குலசேகரருக்குக் குருமுகமாகக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தனர். சாதாரணக் கல்வியில் பயிற்சி பெற்றதுடன் இவர் இதிகாச புராணங்களையும் வேத வேதாங்கங்களையும் கசடறக் கற்றார். வேதாந்தமும் கற்று அந்த நூல்களின் சாரத்தையும் கிரகித்துக் கொண்டார்.

கடல் நீரை ஆவி ரூபமாகக் கிரகித்துக்கொள்ளும் கதிரவனைப்போல் குலசேகரரும் தாம் கற்ற நூற்பொருள்களை யெல்லாம் ஞான ரூபமாகக் கிரகித்துத் தமது பக்தியுள்ளத்திலே சேமித்துக்கொண்டார். குருவும், தம்முடன் கற்றுவரும்

Koviloor Digital Library

மாணவர்களும் அதிசயிக்கும்படி இவர் கல்வியறிவில் நிகரற்ற தேர்ச்சி பெற்றார். நெறிமுறை தவறாத அறிவுடையவர் என்று இவருடன் பழகியவர்களெல்லாம் போற்றுவாராயினர்.

அறிவிலும் அழகிலும் ஆண்மையிலும் ஒருங்கே சிறந்து விளங்கிய குலசேகரரைக் கண்டு, பெற்ற மனம் பூரித்துப் போயிற்று. யௌவனம் வந்துவிட்டதால் திருமணஞ் செய்து பார்க்க வேண்டும் என்று தாய் ஆசைப்பட்டாள். திருமண விழாவுடன் முடிசூட்டு விழாவையும் நடத்திவைக்க விரும்பினார் தந்தையார்.

ராஜ்யவாசிகள் ஆனந்தக் கடலாட, அருகில் இருந்தவர்கள் இவரது தோற்றம் என்ற சுந்தர சேவையில் ஈடுபட்டு அதிசயத்தில் மூழ்க, குலசேகரர் ரூப சௌந்தரியமும் குணசௌந்தரியமும் உள்ள ஓர் அரசிளங் குமரியை மணந்து கொண்டு, அவளுடன் அரியணை அமர்ந்து ராஜ்ய பரிபாலனம் செய்யத் தொடங்கினார்.

இவர் துரைத்தனம் நடத்தும் முறையே இவரது மதிநலத்தை நன்கு புலப்படுத்தியது. மக்கள் துன்பம் தம் நெஞ்சிலே பட, நாட்டை ஆண்டு, இன்ப வாழ்வு அனைவர்க்கும் கிடைக்கும்படி அல்லும் பகலும் உழைத்து வந்தார்.

இந்த ஆட்சி முறையை அருகில் இருந்து கவனித்து வந்த திடவிரத பூராஜதேவன், 'மக்கள் கலி தீர்ந்து பெருவாழ்வு வாழ்கிறார்கள்; நாமும் கலிதீர்ந்து கதி அடைய வழிதேடப் போவோம்' என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டான். பிறகு தன் மனைவியுடன் வீட்டையும் நாட்டையும் துறந்து போய்விட்டான்.

பெற்றோரைப் பிரிந்த குலசேகரர் முதலில் சற்றுக் கவலைப்பட்டபோதிலும் அதிவிரைவில் சமாளித்துக் கொண்டு மன அமைதியுடன் நாட்டிலே கல்வியும் செல்வமும் நற்குண நற்செயல்களும் பெருகுமாறு அரசு புரியலானார். சிறியதைப் பெரியது நலியாதபடியும் - அதாவது, 'சின்ன

Koviloor Digital Library

மீனுக்குப் பெரிய மீன் இரை' என்ற குற்றம் நேராதபடியும் அறிவாளிகளையும் சாதுக்களையும் அறிவில்லாதவர்களும் ஒழுக்கமில்லாதவர்களும் நித்தியாதபடியும் மக்களை நெறிப்படுத்தி ஆட்சி செலுத்துவாராயினர்.

'கனவென்ன கனவே!'

இப்படி ஆண்டுகொண்டு வாழ்ந்து வரும்பொழுது தமிழகத்தின் வட எல்லையாகிய திருமலையில் கோயில் கொண்டிருக்கும் பெருமானை வழிபட்டுத் திரும்பிய யாத்திரிகர் சிலர் அரசரைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் வாயிலாகத் திருமலையின் அருமை பெருமைகளையும், அந்தப் பெருமானது பெருங் கருணையையும் இவர் கேள்விப் பட்டார். அந்த யாத்திரிகர்கள் விடைகொண்ட பின்பும் இவருக்குத் திருவேங்கடத்தின் நினைவுகள் அடிக்கடி வந்தன.

ஒருநாள் இவர் சொப்பனத்திலே அப்பெருமானையும் தரிசித்தார். அவன் தன் பரம கிருபையால் தம்மைப் பரம சாத்விகர் ஆகுமாறு கடாட்சித்ததாகவும் தோன்றியது. ஒரு கணத்திலே அவன் தன்னுடைய சொரூபத்தையும் கல்யாண குணங்களையும் எல்லையற்ற செல்வங்களையும் காட்டி மறைந்தது போலவும் தோன்றியது.

குலசேகரர் திடுக்கிட்டு நித்திரை கலைந்தெழுந்து, படுக்கையில் வீற்றிருந்தபடியே, 'என்ன ஆனந்தமான கனவு!' என்று எண்ணமிட்டார். 'இவ்வளவு சுலபனா திருவேங்கடத்து எந்தை!' என்று அதிசயித்தார். அவனை அடையப் பெறாதவர் களுக்கு அவர்களுடைய கடின இருதயமேதான் இடையூறு என்று கருதினார்.

Koviloor Digital Library

3. திருமலை யாத்திரை

கனவிலே கிடைத்த ஆனந்தம் உள்ளத்தை முழுக் காட்டிக் குளிர்விக்க, அந்த உள்ளம், 'திருவேங்கடவனுக்கு நாம் செய்யும் கைம்மாறு ஒன்றும் இல்லையே!' என்ற நினைப் புடன் திருமலையை நோக்கி ஓடலாயிற்று. இந்த நிலையில் உடம்பு ஒரு கற்சிலைபோல் அசையாது கிடந்தது.

ஒரு பக்தி அநுபவம்

அருணோதயம் ஆகிவிட்டது. இவரை வழக்கப்படி பள்ளியுணர்த்தும் இசைப்புலவர்கள் வீணை முதலிய கருவிகளை நெடுநேரம் மிழற்றியும் இவர் எழுந்து வர வில்லை; குரல் கொடுக்கவும் இல்லை. அவர்கள் அச்சமுற்று அமைச்சர்களிடம் போய்ச் செய்தி சொன்னார்கள். அவர்களும் அப்போதே வந்து குரல்கொடுத்துப் பார்த்தார்கள். பதில் ஒன்றும் கிடைக்கவில்லை.

பிறகு அரசி வந்து மெதுவாக உள்ளே போய்ப் பார்த்தாள். ஏதோ ஒரு தெய்வத் திருக்கோலத்தைச் சேவிப்பது போலத் தோன்றியது அவளுக்கு. அவள் உடனே தன் அந்தரங்கத் தோழிகளைக் கூவி அழைத்தாள். அவர்களும் வந்து பார்த்துத் திகைத்து அப்படியே நின்றுவிட்டனர்.

கடைசியாக அமைச்சர்களும் உள்ளே வந்து பார்த்தார்கள்; கலங்கி நின்றார்கள். கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தன. கைகள் திருமலையிருந்த திசை நோக்கித் தொழுத நிலையில் காணப்பட்டன. அவர்க ளெல்லாம் அங்கே வந்து நின்று ஒருவரோடு ஒருவர் கலந்து பேசிக் கொண்டிருந்தது ஒன்றுமே குலசேகரரின் காதில் விழவில்லை.

Koviloor Digital Library

இந்தச் செய்தி, கொல்லி நகரெல்லாம் மின்னல் வேகத்தில் பாய்ந்து பரவ, பொது ஜனங்கள் கடல்போலத் திரண்டு அரண்மனை வாசலில் மொய்த்துவிட்டனர். அவர்கள், 'எங்கள் அரசர்பிரான் எங்கே? எங்கள் தவப்பயனுக்கு என்ன நேர்ந்துவிட்டது?' என்று கூச்சலிட்டனர்.

அப்பொழுது உள்ளேயிருந்த அமைச்சர்களில் சிலர் வெளியில் வந்தனர்; ஆனால் வாய்திறந்து சொல்ல வகையற்று விழித்தனர். மக்களோ பொறுமை இழந்து, இனி உள்ளே புகுவதுதான் தருமம் என்று ஒருவரை ஒருவர் இடித்துக் கொண்டு புகுந்தனர்.

இந்த ஆரவாரத்திலே குலசேகரர் தெளிந்தெழுந்து, தம்மைச் சூழ்ந்திருக்கிறவர்களை நோக்காமலே வெளியில் வந்தார். தமக்கு ஏற்கெனவே தெரிந்திருந்த ஒரு பக்தரை அந்தக் கூட்டத்தில் கண்ணுற்றதும், அவரை ஒருபுறமாக அழைத்துக் கொண்டு போய், ''தோழரே! சிறியேனையும் ஒரு பொருளாக மதித்துத் திருமலை நின்ற ஜோதி தன்னுடைய தரிசனத்தைத் தந்தருளப்பெற்றேன். என்ன பேறு பெற்றேன்!'' என்றார்.

அதற்குள் அங்கும் வந்து சேர்ந்துவிட்ட ஜனங்களின் காதில் இந்த வார்த்தை அரைகுறையாக விழுந்துவிட்டது. ''நமது அரசருக்கு என்ன, பைத்தியமா?'' என்று அவர்கள் பேசத் தொடங்கிவிட்டனர்.

குலசேகரரோ தம்முடைய பக்த நண்பரிடம், ''இந்த அரசப் பெருஞ்செல்வம் பெரு நெருப்பல்லவா? 'கொள்' என்று கிளர்ந்து எழுகின்ற செல்வமெல்லாம் அல்லலுக்கு இடந்தான்!'' என்று சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது அமைச்சர்களும் அங்கு வந்து சேர்ந்து, ''சில முக்கியமான ராஜ்ய காரியங்களைக் கவனிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

குலசேகரர் திருமலை எம்பெருமானுடைய மங்கள குணங்களைச் சிந்தித்துக்கொண்டே யானைமீது ஏறிக் கொலு

Koviloor Digital Library

மண்டபத்திற்குப் போனார். வழியிலே திருமலைக்குச் செல்லும் ஒரு பாகவதரைக் கண்டதும் யானையிலிருந்து பளிச்சென்று இறங்கிக் காலில் விழுந்து அவரிடம் சிறிது நேரம் உரையாடிய பின்பே மறுபடியும் யானைமீது ஏறிக்கொண்டார்.

யாத்திரைக்கு முன்னும் பின்னும்

சேற்றில் ஒட்டாத பிள்ளைப்பூச்சி போலவும், தாமரை இலையில் ஒட்டாத நீர்த்திவலைபோலவும், ஓட்டில் ஒட்டாத புளியம்பழம் போலவும் குலசேகரன் சிங்காதனத்தில் வீற்றிருந்து, உள்ளத்தைத் திருமலைவாழ் ஜோதிக்கு இருப்பிட மாக்கி வைத்து, வழக்கம்போல் ராஜ்ய பாலனத்தை மேற்கொண்டார்.

எப்படியாவது திருமலைக்குப் போய்வரவேண்டும் என்றால், ஓய்வும் ஒழிவுமின்றி அரச காரியங்கள் அதிகரித்த வண்ணமாக இருந்தன. எனினும் இவர் அவசர காரியங்களை இராப்பகலாகக் கவனித்து, ஒருவாறு முடித்துக்கொண்டு திருமலை யாத்திரைக்குச் சித்தமாகிவிட்டார்.

திருமலையை நெருங்க நெருங்க, ஏதோ ஒரு பெருஞ்சுமையை நெஞ்சிலிருந்து தள்ளிவிட்டது போன்ற உணர்ச்சி மேலிட்டது. திருமலைக் காட்சிகளெல்லாம் பேரின் பமாகத் தோன்றின. திருவேங்கடத்து எந்தையைக் கண்டதும் காதலித்துக் களித்து அடிபணிந்து ஆனந்தக் கூத்தாடினார்.

'இந்த மலைச்சுனையில் மீனாய்ப் பிறப்பதுகூடப் பெரும் பாக்கியம்!' என்று எண்ணமிட்டார். 'வானாளும் செல்வந்தான் இப்பெருமானின் தரிசனச் சிறப்பிற்கு ஈடாகுமா! என் மண்ணரசோ இத்தகைய பேரின்பத்திற்கு இடையூறாவது' என்று நினைத்தார். இறைவன் புகழைப் பாடிப் பரவசராகித் திரும்பினார்.

ராஜ்ய காரியங்களில் மறுபடியும் சிந்தை செலுத்த லானார். இப்பொழுது திருவரங்கத்திற்குச் செல்லவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

Koviloor Digital Library

அணி அரங்கன் திருமுற்றத்து அடியார்களைக் குறித்துக் கேள்விப்பட்டிருந்தார். அவர்களுடைய கூட்டம் பாகவத பொதுக்கோஷ்டி என்பதையும் அறிந்திருந்தார். அந்த 'இன்ப மிகு பெருங் குழு'வில் கலந்து, தொண்டாற்றும் காலம் என்றுதான் கூடுமோ?

இத்தகைய மனநிலையில் இருக்கும் குலசேகரரை அந்த அடியார் குழுவைச் சேர்ந்த சிலர் பார்க்க வந்தார்கள். 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கிட்டது' போன்ற உணர்ச்சி யுடனும், விண்ணவர்களே கால் நிலந்தோயச் சிறுமா மனிதராகித் தமக்கு அருள் புரியவேண்டுமென்றே தாம் இருக்கும் இடம்தேடி வந்துவிட்டார்கள் என்ற உணர்ச்சியுட னும் இவர் அவர்களை எதிர்கொண்டு சென்றார்.

அந்த அடியார்கள் அடிகளில் முடிசேர விழுந்தார். அவர்கள் வாழ்த்த எழுந்து அவர்களைக் கொலுமண்டபத்திற்கு அழைத்துப்போய் ஆசனங்களில் அமரச்செய்தார். ஆராத காதலால் எழுந்த அனலைச் சோராத பக்தியால் தணித்துக் கொண்டு, ஆனந்தக்கண்ணீர் ததும்ப அவர்களை நோக்கி, ''பெரியோர்களே! அடியேனை ஆண்டிடுவீர்'' என்று வேண்டிக் கொண்டார்.

Koviloor Digital Library

4. அரசரை ஆண்ட அன்பர்கள்

திருவரங்க யாத்திரையின் ஆசை

அரசர், 'செவிநுகர் கனி' களாக அநுபவித்தார் அவர்கள் நிகழ்த்திய கதா காலட்சேபங்களை. அவர்களைப் பிரிய மன மில்லாமல், ''இனி நான் போகவொட்டேன்!'' என்றார். அவர்கள் முகமலர்ச்சியுடன் சம்பிரதாய ரகசியங்களான பல உண்மைகளை எடுத்துரைத்தார்கள். அரசர் அவர்களை நோக்கி, ''என்னை ஆண்டிடுவீர்; விற்கவும் பெறுவீர்கள்'' என்றார்.

'பெருந் தமிழர்கள்' என்றும், 'செந்தமிழ் பாடுவார்' என்றும் சொல்லப்பட்ட முதலாழ்வார் மூவரும் ஏற்றிவைத்த மொழி விளக்கிலே எத்தனையோ ஐயங்களைப் போக்கிக் கொள்ளலாம் என்பதை அந்த அடியார்கள் வாயிலாக அறிந்து கொண்டார். முதலாழ்வார்களின் சீடரான திரு மழிசைப் பிரானின் பக்தி அநுபவங்களையும் அடியார்கள் எடுத்துக் காட்ட, அவற்றையும் பயன்படுத்திக்கொண்டார்.

பாண்பெருமாள் அருளிய பத்துப் பாடல்களை அவர்கள் பாடிக்காட்ட, அவற்றையும் அநுபவித்தார். தொண்டரடிப் பொடியாழ்வாரின் பூமாலைத் தொண்டும் பாமாலைத் தொண்டும் திருவரங்கத்திற்கே ஒரு புதிய சோபை தந்திருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டியதும், அத்தகைய தொண்டக்குலத்தினருடன் ஆடிப்பாடிக் கலந்து தொண்டாற்று வதையே தமது வாழ்க்கைக்கும் குறிக்கோளாகக் கொண்டார்.

இந்த ஆறு தொண்டர்களின் திவ்யப் பிரபந்தங்களையும் அந்த அடியார்கள் வாயிலாகக் குலசேகரர் தெரிந்துகொண்டு, அவற்றை வாசித்தும் கேட்டும், அவர்களை வணங்கியும் வழிபட்டும் பரம பக்தராகிவிட்டார். இந்த அறுவரும்

Koviloor Digital Library

பாடியிருக்கும் திருவரங்கத்தின் மகிமை இவர் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அந்த அடியார்கள் வாயிலாகவே திருவரங்க மான்மியத்தையும் உள்ளவாறு தெரிந்துகொள்ள விரும்பினார்.

திருவரங்கத்தின் மகிமை குறித்தும், க்ஷேத்திர உற்பத்தி குறித்தும், ஸ்ரீரங்க விமானம் குறித்தும், ஸ்ரீரங்க தத்துவம் குறித்தும் அவர்கள் செவிவழிச் செய்தியாகவும் கவிவழிச் செய்தியாகவும் பல விஷயங்களைக் குலசேகரருக்குத் தெரிவித்தார்கள். காவிரி, கொள்ளிடம் என்ற உபய காவிரியால் மாலையிடப்பெற்ற நித்தியவசந்தமான சோலையில் காவிரி அலைக்கையால் அடிவருடப் பள்ளிகொள்ளும் திருவரங்க ராஜனின் அருமை பெருமைகளைக் குலசேகரருக்குச் செவி குளிர அகம் குளிர எடுத்துரைத்தார்கள்.

முதலாழ்வார்களிலும் முதலாழ்வாரான பொய்கை யாரைக் கருவிலே திருவுடையராக்கி ஆட்கொண்டது 'பூலோக வைகுந்த' மான திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் பெருமானின் திருவருள்தான் என்று சொல்லி,

கருவரங்கத் துள்கிடந்து
கைதொழுதேன் கண்டேன்
திருவரங்கம் மேயான்
திசை

என்ற பொய்கையார் வாக்கை ஆதாரமாகக் காட்டினார்கள்.

பூதத்தாழ்வாரின் ஈடுபாடு அவரது இஷ்டமூர்த்தியை 'மனத்துள்ளான், வேங்கடத்தான், மாகடலான்' என்று கூறிவிட்டு,

நினைப்பரிய நீள்அரங்கத்(து)
உள்ளான்

என்றும் 'தேவாதிதேவன்' என்றும் சிறப்பித்துப் பேசுகிறது என்றார்கள்.

Koviloor Digital Library

'தேனார் திருவரங்கம்' என்று பேயாழ்வார் பேசுவதைக் குறிப்பிட்ட பின், பேயாரின் அருமைச் சீடரான திருமழிசைப் பிரான்,

அரும்பொரு ளாய்நின்ற
அரங்கனே!

என்று தம் பெருவிருப்பம் தோன்ற அழைத்துப் பேறு பெற்றதை எடுத்துக் காட்டினார்கள்.

திருவரங்கத்தின் நில, நீர் வளங்களிலும் பக்தி வளத்திலும் ஒருங்கே நெஞ்சைப் பறிகொடுத்த திருமழிசைப் பிரானின் திருச்சந்த விருத்தத்தை அவர்கள் ஓதிவரும்போது, 'பொன்னி சூழ் அரங்க'த்தில் திருமழிசையாருக்குக் கிடைத்த விசேஷ அநுபூதிச் செல்வம் குலசேகரரின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்தது.

அற்ற பற்றர் சுற்றி வாழும்
அந்தண்நீர் அரங்கமே

என்ற வாக்கிலே பாராட்டப்பெறும் அந்தப் 'பகவர்' என்ற பக்தர் குழாம் வளமார்ந்த திருவரங்கத்திலே தழைத்து வருவதை ஊகித்து உணர்ந்துகொண்டார் குலசேகரர்.

அந்தத் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களே இவரது பாக்கியவசத்தால் இவரைத் தேடி வந்து, தங்கள் ஞான பொக்கிஷத்தின் நெடுங்கதவைத் திறந்துகாட்டி, 'அரசே! ஆசை தீர அள்ளிக்கொண்டு ஞான அரசராக விளங்குவீர்!' என்று சொல்லுகிறார்களல்லவா? இதை நினைக்க நினைக்கக் குலசேகரர் உள்ளத்தில் ஆனந்தம் பொங்கியது.

அவர்கள் பாணரைப் பாண்பெருமாளாக்கிப் பழ மறையின் உட்பொருளைப் பாடுவித்த அரங்கநகர் அப்பனின் அருளை நினைப்பூட்டி 'அமலனாதிபிரான்' என்ற அந்தச் சின்னஞ்சிறு பிரபந்தத்திலே எத்தகைய திருவரங்கப் பெருந் தத்துவம், வித்தில் ஆலமரம் அடங்கியிருப்பதுபோல், அடங்கிக் கிடக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினார்கள்.

Koviloor Digital Library

திருப்பாணருக்கு உகப்பான 'அமலன்' 'விமலன்' 'நிமலன்' 'நின்மலன்' 'நீதிவானவன்' என்ற பெயர்களைத் தாமும் வாய்குளிரச் சொல்லிக் குலசேகரர்,

திருவரங்கம் மேயான்
திசை

நோக்கித் தொழுதார்.

தொண்டரடிப்பொடியாழ்வாரின் 'திருமாலை', 'திருப்பள்ளியெழுச்சி' என்ற பிரபந்தங்களையும் அந்த அடியவர்களுடன் ஓதிய குலசேகரர், அரங்கனுக்கே பூமாலையும் பாமாலையும் சூட்டிப் பெரும் பேறு பெற்ற அப்பெரியாரின் வாழ்க்கைக் கதையையும் அவர்கள் வாயிலாகத் தெரிந்துகொண்டார். தொண்டரடிப்பொடிகளின் வாக்கிலே பிரதிபலித்த திருவரங்கம் இவர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது.

ஸ்ரீரங்க மான்மியத்தை ஸ்ரீரங்கத்து அடியார்கள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, குலசேகரருக்கு ஸ்ரீரங்க யாத்திரை செய்யவேண்டும் என்ற ஆசை அதிகரித்தது. அந்தத் தலத்திலே நித்தியவாசம் செய்து தொண்டாற்றிவரும் அன்பர்களின் பாக்கியமே பாக்கியம் என்று எண்ணமிட்டார் குலசேகரர்.

'நாளைப் போவோம்!'

அந்த அன்பர்களில் சிலர், திருவரங்கத்துக்குத் திரும்ப வேண்டும் என்று புறப்பட்டதும் குலசேகரர் தாமும் அந்த யாத்திரைக்குச் சித்தமாகிவிட்டதாகத் தெரிவித்தார். அவர்களோ, அரசர் அன்று பாகவதர்களை ஆராதிப்பதில் ஈடுபட்டிருப்பதால் அதைக் கைவிடுவது சரியல்ல என்று சொல்லிப் போய்விட்டார்கள்.

'அப்படியானால் மறுநாள் ஸ்ரீரங்கத்திற்குப் புறப்படு வோம்' என்று குலசேகரர் தீர்மானித்தார். அன்றைத் தினம்

Koviloor Digital Library

எங்கிருந்தோ புதிய அடியார்கள் வந்து சேர்ந்தார்கள். அரசர் அவர்களுக்கு உணவளிக்கும் பணியில் ஈடுபட்டார். அன்றும் 'மறுநாள் புறப்படுவோம்' என்று தீர்மானம் செய்து கொண்டார்.

ஆனால் பிரயாணப்படும் சமயத்தில் பாகவதர்களின் பெருந்திரள் ஒன்று எங்கிருந்தோ வந்துசேர்ந்துவிட்டது. 'இவர்களை ஆராதிக்கும் கடமையைச் செய்துவிட்டு அடுத்த நாள் நிச்சயமாகப் புறப்படவேண்டும்' என்று எண்ணினார்.

இப்படியே ஈசுவர சோதனையாக யாத்திரை தடைப் பட்டுக் கொண்டே வந்தது. அரசரோ, 'நாளைப் போவோம், நாளைப் போவோம்!' என்று நம்பிப் பல தினங்கள் கழித்து விட்டார். குலசேகரரின் இக்கதைப் பகுதி, 'திருநாளைப் போவார்' என்ற நந்தனாரின் சரித்திரத்தை நினைவூட்டுகிறது.

அ‌ரசர் ஸ்ரீரங்க யாத்திரை செய்யப்போகிறார் என்ற கோஷம் மாத்திரம் நகரெங்கும் ஒவ்வொரு நாளும் பரவி யிருக்கும். அதே சமயம் பாகவதர்கள் வருவதும் போவதும் உண்பதும் உபசரிக்கப்படுவதும் அரண்மனையில் ஒரே கோஷமாகவும் கோலாகலமாகவும் இருக்கும்.

குலசேகரரை வந்தடைந்த பாகவதர்கள் பெரும்பாலும் 'அணி அரங்கன் திருமுற்றத்து அடியார்' களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் ஆவர். இவர்களைப் 'பகவர்' என்று சிறப்பித்துப் பேசுவது உண்டு.

நெறிகாட்டிய 'பாதிரி'கள்

இந்தப் பகவர்கள் எவ்வளவோ காலமாகத் தமிழகத்தில் வாழையடி வாழையென வந்துகொண்டிருந்த திருக்கூட்டத் தினராவர். இவர்கள் திருவரங்கத்தைத் தங்கள் ஞான ராஜதானியாகக் கொண்டு எங்கும் திரிந்து, 'அரங்கநகர் அப்பனுக்கே காதல் செய்யுங்கள்' என்று பலரையும் வேண்டிக் கொள்வார்கள்.

Koviloor Digital Library

வடநாட்டுப் பக்தர் ஒருவர், தாம் போகும் வழியில் எவரைச் சந்தித்தாலும் அவரிடம், ''ஒரு தரம் 'ராதாகிருஷ்ணா' என்று சொல்லப்பா!'' என்று கேட்டுக்கொள்வாராம். ஒரு சமயம் அவர் துணி தோய்த்துக்கொண்டிருந்த வண்ணான் ஒருவனிடம் போய், ''அப்பா, நீ...'' என்று பேசத் தொடங்கினார். அவன் இவருக்கு ஏதோ தேவை இருப்பதாக நினைத்துக் கொண்டு இவர் பேசி முடிப்பதற்குள் குறுக்கிட்டு, ''ஐயா, உமக்கு உணவு தேவையா அல்லது ஏதாவது பொருளுதவி தேவையா? என்னால் இயன்றதைச் செய்வேன்'' என்றான்.

அப்பெரியாரோ, ''எனக்கு ஒன்றும் தேவை இல்லை அப்பா! உன் தேவையை உணர்ந்துதான் அதைப் பூர்த்தி செய்ய விரும்புகிறேன். நீ ராதாகிருஷ்ணனின் திருப்பெயரை ஒருதரமாவது சொல்லிவிட்டு உன் தொழிலைச் செய்து கொண்டிருக்கலாமே என்றுதான் உன்னை வேண்டிக்கொள்ள வந்தேன்'' என்று பதில் சொன்னார்.

அப்படியே திருவரங்கத்து அடியார்களும் பிறரிடம் ஒருவகை உதவியும் எதிர்பார்க்கவில்லை. அரசர்களுடைய தயவையும் எதிர்பார்க்கவில்லை. இறைவனுடைய புகழையே பரப்பி வந்தார்கள். ''அவன் பெருமையே பெருமை; பாவிகாள்! அவன் பாதமலரைச் சூடி வாழுங்கள்; பக்தி நெறி என்ற நன்னெறி பிடித்துச் செல்லுங்கள்'' என்று உபதேசித்து வந்தார்கள்.

இவர்களுக்கு வாழ்க்கை வேறு, உபதேசம் வேறு என்பதில்லை. வாழ்க்கையே உபதேசம், உபதேசமே வாழ்க்கை என்று அனைவரும் வியந்து நோக்கும்வண்ணம் இந்த அடியார்கள் எங்கும் எப்போதும் நடந்துகொண்டார்கள்.

இவர்களுடைய வாழ்க்கையும் உபதேசமும் தோழமையும் தம்மை நெறிப்படுத்தி உய்வித்தன என்று குலசேகரரே ஒப்புக் கொண்டிருக்கிறார்:

Koviloor Digital Library

ஆதி அந்தம் அனந்தம் அற்புதம்
ஆன வானவர் தம்பிரான்
பாத மாமலர் சூடும் பத்தி
இலாத பாவிகள் உய்ந்திடத்
தீதில் நன்னெறி காட்டி எங்கும்
திரிந்(து) அரங்கம்எம் மானுக்கே
காதல் செய்தொண் டர்க்(கு)எப் பிறப்பிலும்
காதல் செய்யும்என் நெஞ்சமே.

(தீதில் நன்னெறி - தீமை கலவாத நல்வழி, பரம ஸாத்விக தர்மம். எம்மானுக்கே - எமது தலைவனுக்கு.)

கடவுள் ஒருவன் உண்டு; அவனே ஆதியும் அந்தமுமாக இருக்கிறான்; அநந்தமாகவும் அற்புதமாகவும் இருக்கிறான். அவனும் அற்புதன்; அவனது அருள் வழியும் அற்புதமானது. இப்படியெல்லாம் கடவுள் உண்மையைப் பிரசாரம் செய்து வந்தார்களாம் அந்தப் பக்த மணிகள்.

உண்மை வடிவமான இறைவனுக்கு முகங்களும் அநந்தமானவை; குரல்களும் அநந்தமானவை. அவருடைய பாதமாமலர் சூடும் சரணாகதி தருமமே பக்தி நெறியின் ஸாராம்சம். இந்தச் சரணாகதி தருமத்தை இந்த அடியார்கள் பரப்பி வந்தார்கள்.

'பாதமாமலர் சூடும்' பக்தி இல்லாதவர்கள் பாவிகள் என்கிறார் குலசேகரர். அவர்கள் வேறு வகையில் எப்படிச் சிறந்திருந்தபோதிலும், குலம் கல்வி செல்வம் ஆகிய வசதிகள் உள்ளவர்களாயிருந்தபோதிலும் அவர்கள் பாவிகளே என்பர்.

பாவிகள் உய்ந்து போகவேண்டும் என்றே உபதேசம் செய்யும் 'பாதிரிகள்' அந்த அடியார்கள் என்பது குலசேகரர் கருத்து. இந்தப் 'பாதிரி'களின் மதம் 'தீதில் நன்னெறி' என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த நன்னெறியைச் சுத்த ஸாத்விக தருமம் என்றும் கூறுவர். இந்தத் தருமிகள், தங்களை ஒருவன் அடித்து விட்டால், ''ஐயோ, பாவம்! அவன் கை வலிக்குமே!' என்று

Koviloor Digital Library

தான் வருந்துவார்களாம். ''எம்மை ஹிம்ஸித்ததால் நரகம் புகக்கூடுமே; இறைவனே! அவனை மன்னித்தருள வேண்டும்'' என்றுதான் பிரார்த்திப்பார்களாம்.

'இந்தத் தீதில் நன்னெறி' உபதேச அளவில் நின்று விடுவதில்லை. இதைத் தங்கள் வாழ்க்கையாலும் பிறருக்குக் காட்டுவார்களாம் இந்த நன்னெஞ்சர்கள்.

இவர்கள் திருத்திப் பணிகொள்வது இன்னாரைத்தான் என்பதில்லை. எங்கும் திரிந்து எவரையும் தீண்டித் திருத்து வார்களாம்; திருத்தித் தங்கள் தொண்டர் குலத்திலே சேர்த்துக் கொள்வார்களாம்.

''ராதாகிருஷ்ணா என்று ஒருதரம் சொல்லு'' என்று வடநரட்டுப் பக்த மணி வேண்டிக்கொண்டதுபோல், இந்தத் தொண்டர்களும், ''அரங்கன் எம்மானுக்கே காதல் செய்யுங்கள்'' என்று வேண்டிக்கொண்டார்கள்; இந்தக் காதல் தவிர இவர்களிடம் வேறு பொருட் காதலுக்கோ புகழ்க் காதலுக்கோ இடமில்லை. தாங்கள் காதலித்த அரங்கனைப் பிறரும் காதலிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

'பாதமாமலர் சூடும் பக்தியிலாத பாவிகள் உய்ந்திட'ப் புறப்பட்டு எங்கும் திரிந்தவர்கள், ''சிங்காதனத்தில் இருந்த பாவியேனும் உய்ந்திடத் தீதில் நன்னெறி காட்டினார்கள்'' என்கிறார் குலசேகரர்.

இத்தொண்டர்களைக் கண்டு இவர்களுடன் நெருங்கிப் பழகியபின் குலசேகரருக்கு மோட்சத்திலுள்ள ஆசைகூடப் போய்விட்டதாம். ''பிறவி யெடுக்கவும் தயார்!'' என்கிறார். ஆனால் எந்தப் பிறவி யெடுத்தாலும் இத்தகைய தொண்டர்கள் மீது காதல் கொள்ளவேண்டும் என்கிறார்.

என்ன நட்புக் காதல் குலசேகரருக்கு, 'அணி அரங்கன் திருமுற்றத்து அடியார்'கள் மீது! இக்காதல்தான், 'ஆரம் கெடப் பரன் அன்பர் கொள்ளார்!' என்று அவர்களுக்காகப் பாம்புக் குடத்தில் இவரைக் கையிடவும் செய்யப்போகிறது!

Koviloor Digital Library

5. பயங்கர சோதனை

தமது இஷ்ட மூர்த்தியை அணிசெய்த விலையுயர்ந்த நவரத்தின மாலையைக் காணவில்லை என்றால், அரசருக்கு எவ்வளவு மனவருத்தம் ஏற்பட்டிருக்க வேண்டும்! அருமையான வேலைப்பாடும், அது தமது ஸ்ரீராம விக்கிரகத்திற்கு மிகவும் பொருத்தமாக அமைந்துவிட்ட அழகும் அந்த மாலையின் மதிப்பை எப்படித் தூக்கிக் காட்டின!

என்ன களவு! என்ன சந்தேகம்!

நவரத்தினமாலை களவு போனதே குலசேகரரைக் கவலைக்கடலுள் ஆழ்த்திவிட்டது; அந்தக் களவுக்கு ஏழைகளான பாகவதர்களே பொறுப்பாளிகளாவர் என்று அமைச்சர்கள் சந்தேகிப்பதையும் தெரிந்துகொண்ட நிலையில் குலசேகரர் பைத்தியம் பிடித்தவர்போல் ஆகிவிட்டார்.

அரசருக்கு இறைவன் அடியவர்கள்மீது துளிகூடச் சந்தேகம் இல்லை. பக்தர்கள் குற்றம் செய்யமாட்டார்கள் என்ற திடநம்பிக்கை உள்ளவர்தாம். ஆனால் அமைச்சர்களின் அபிப்பிராயத்தை மறுத்து, அடியவர்களின் தூய மனப் பான்மையை வெளியிடுவதற்குத் தாம் என்ன செய்யமுடியும்?

அந்தப் பகலிலே, மண்ணும் விண்ணும் ஒருங்கே இருண்டுவிட்டது போலத் தோன்றியது. குலசேகரர் மெய் சோர்ந்து தம் பொன்னொத்த மேனியில் புழுதிபடக் கீழே விழுந்து புரண்டார். அமைச்சர்களும் பிறரும் எவ்வளவோ ஆறுதல் சொல்லிப் பார்த்தும் பயன்படவில்லை.

ராமனுடைய அவதார நாளாகிய நவமியில் விழாக் கொண்டாடும்போது அந்தக் களவு நடந்துவிட்டது. யார்

Koviloor Digital Library

செய்திருக்கக்கூடும்? எவ்வளவோ புலன் விசாரித்தும் திருட்டு வெளிப்படவில்லை; கள்வனைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

அமைச்சர்கள் சொன்னதைத்தான் பொதுமக்களும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். 'பக்தர்களாயிருந்தும் ஏழைகள் ஆனதாலும், அரசர் தங்களைச் சந்தேகிக்கமாட்டார் என்ற கருத்தினரானதாலும், அவர்கள் ஏன் திருடியிருக்கலாகாது?' - இவ்விதமாக ஸ்ரீரங்கநாதனின் தொண்டர்களைக் குறித்துப் பேச்சு எழுந்ததும், 'ஐயோ! இனி அந்த அன்பர்கள் முகத்தில் எப்படி விழிப்பேன்?' என்று திடுக்கிட்டுப் போனார் குலசேகரர். 'இது பகவானுக்குத்தான் பொறுக்குமா!' என்று திகில் அடைந்தார்.

அரசருக்கு ஏதோ ஒரு நோய் வந்துவிட்டதாகவே பலரும் நினைத்தார்கள். அந்த நோய் இன்னதென்று அரண் மனை வைத்தியர்களாலும் கண்டுபிடிக்க முடிய வில்லை.

குலசேகரரோ கலங்குவதும் தேறுவதுமாக இருந்தார். 'ஒரு வேளை அமைச்சர்கள் சொல்வதும் சரியாக இருக்க லாமோ?' என்ற கலக்கம் அல்ல; 'அன்பர்கள் குற்றவாளிகளே அல்லர்' என்ற தமது திடமான நம்பிக்கையை எப்படி மெய்ப்பிக்க முடியும் என்ற கலக்கந்தான். இவர் தேற்றமோ, 'பகவான் தன்னுடைய அன்பர்களை எப்படியும் கைவிட மாட்டான்' என்ற மன உறுதியால் ஏற்பட்டது.

கடைசியாகத் தம்மைத் தைரியப்படுத்திக்கொண்டார். இந்த மனநோயை உதறித் தள்ளினால்தான் அமைதியாகச் சிந்தித்து அவசியமான காரியத்தைச் செய்யமுடியும் என்று துணிந்தார். ஆனால் பழி சுமத்திய அமைச்சர்கள் தங்கள் சந்தேகத்தை உறுதிப்படுத்தினர்.

இதை அறிந்துகொண்டதும், உள்ளத்திலும் உடம்பிலும் ஒருங்கே ஏற்பட்ட சோர்வினால் குலசேகரர் உடனே மயக்க முற்றுக் கிடந்தார். மனக்குகையைக் காரிருள் மூடிவிட்டது.

Koviloor Digital Library

'தெய்வமே இல்லையோ? அன்புருவாகிய அழகன், அருளாளன் என்பதெல்லாம் கற்பனைதானோ?' என்றுகூடத் தோன்றியது. ஆஹா! என்ன பயங்கர அநுபவம்!

அந்த மனச் சோர்வு கதிரவனைப் பற்றிய கிரகணம் போல் மறைந்துவிட்டது. காயம் ஆறிய தழும்புதான் இப்போது உள்ள அச்சமெல்லாம். வானத்தைப் பார்த்தார், அழுதார், தொழுதார்.

சோதனையில் வெற்றி

தெளிவுற்ற வானத்தைக் கண்டு குலசேகரர் உள்ளமும் தெளிந்தது. விண்ணும் மண்ணும் அடியார்களின் குழந்தை உள்ளத்திற்குச் சான்று பகர்வதுபோலத் தோன்றின. ஆனால் இந்தச் சாட்சிகளை அமைச்சர்கள் ஒப்புக்கொள்வார்களா? யார் ஒப்புக்கொண்டால் என்ன, ஒப்புக்கொள்ளாவிட்டால் என்ன? இனி இவருக்குக் கவலையே இல்லை.

இந்த உணர்ச்சி பளிச்சென்று வந்ததா, படிப்படியாக வளர்ந்ததா என்பதுகூட ஒரு புதிராகத்தான் இருந்தது. ஏதோ ஓர் அதிசய மாறுதல் உள்ளும் புறமும் நிகழ்ந்துவிட்டதாகத் தோன்றியது.

நம்பிக்கையே வாழ்க்கையின் உயிர்நிலை. பக்தர்களின் உள்ளம் பக்தருக்குத் தெரிந்துவிட்டது. எவ்வளவு அழகான, மாசற்ற உள்ளம்! அகத்தின் அழகு அவர்களுடைய குழந்தை முகத்தில் எப்படிப் பிரதிபலிக்கிறது! அந்த உள்ளத் தூய்மைக்கும் குண சௌந்தரியத்திற்கும் சான்று தருகின்றன, பறக்கும் பறவைகளும், காற்றில் அசையும் செடி கொடிகளும்!

'அமைச்சர்களும் ஒப்புக்கொள்ளும்படி நாமே சாட்சியாகி, அவர்கள் தூற்றிவிட்ட பழியை நாமே துடைத்துச் சுத்தப்படுத்தி விடுவோம்!' என்று சங்கற்பம் செய்துகொண்ட அரசர், ராஜ சபைக்கு வந்து வழக்கம்போல் கொலு வீற்றிருந்தார். அமைச்சர்களும் சபையினரும் குழுமியிருந்தனர்.

Koviloor Digital Library

குலசேகரரின் முகத்திலே ஓர் அபூர்வ சோபை காணப் பட்டது! 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்ற நிலையில் நெருப்பின் மேல் இருப்பதுபோல் ஆசனத்தில் இருந்தார்கள் மந்திரிகள்.

காவற்காரர்கள் கொடிய விஷமுள்ள சில பாம்புகளைப் பிடித்து ஒரு பெருங்குடத்தில் அடைத்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள் அரசர் முகத்திலே ஒரு புதிய ஒளியையும் எதிர்பாராத கம்பீர நோக்கையும் பார்த்ததும் திகைத்துச் சிறிது நேரம் நின்றுவிட்டு, தாங்கள் கொண்டுவந்த பாம்புக் குடத்தைச் சபை நடுவில் வைத்தார்கள்.

அந்தக் குடத்தைத் தமக்கு அருகே கொண்டுவந்து வைக்கும்படி அரசர் கட்டளையிட்டார். அமைச்சர்களில் ஒருவன் எழுந்து நின்று, ''இந்தப் பாம்புக் குடத்தில் அந்தப் பாகவதர்களில் ஒருவர், 'நாங்கள் நவரத்தின மாலையைத் திருடவில்லை' என்று சொல்லிக்கொண்டே கைவிட்டுச் சத்தியம் செய்து கொடுத்தால் போதும்'' என்று சொன்னான். அப்போது அவன் உடம்பு பதறியது; நாவும் பதறச் சொற்கள் சிதறி விழுந்தன.

சபையில் உள்ளவர்கள் அங்கே வந்து சேர்ந்த பாகவதர் களின் முகங்களைக் கூர்ந்து பார்த்தார்கள். 'இவர்களா திருடர்கள்? குற்றம் சாட்டிய அமைச்சர்களின் முகங்களல்லவா அருளற்றிருக்கின்றன?' என்று நினைத்தார்கள்.

குலசேகரர் எழுந்து நின்றார். பாகவதர்களுக்கு வணக்கம் செலுத்திவிட்டுப் பளிச்சென்று அமைச்சர்களை நோக்கி, ''அந்த ஆபரணத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் எடுத்ததாகச் சொல்லுகிறவர்களில் யாராவது முன்வந்து இந்தக் குடத்தில் கையிட்டுப் பிரமாணமாகச் சொல்லிவிட்டால், அந்த அன்பர்கள் களவாடியது உண்மைதான் எனக் கொள்வோம்?'' என்று கம்பீரமான குரலில் சொன்னார்.

Koviloor Digital Library

அமைச்சர்கள் நடுங்கினார்கள். 'இது என்ன? புலியைக் கிளப்பக் காடு கலைக்கப் போய்ச் சிங்கத்தின் வாய்க்கு இலக்காகிவிட்டதுபோல் ஆயிற்றே!' என்று திக்பிரமை கொண்டிருந்தார்கள். குலசேகரர் முகத்திலோ தெய்வக் குதூகலம் தாண்டவம் ஆடியது.

இவர் உடனே, ''அன்பர்கள் அந்த ஆபரணத்தை ஒரு போதும் எடுத்திருக்கமாட்டார்கள்; சத்தியமே உருவாகிய பகவானுக்கு அன்பர்கள் அல்லவா?'' என்று சொல்லிக் கையை உயர எடுத்துப் பிறகு குடத்திலே அந்தக் கையைவிட்டு அதனுள் கிடந்த பாம்புகளின் தலைகளைத் தொட்டுச் சத்தியம் செய்தார்.

சபை கிடுகிடுவென்று நடுங்கிப் போயிற்று. ஒரு பாம்பு குலசேகரரின் புஜத்தின் வழியே ஊர்ந்து, தோளின்மேல் ஏறுவதைக் கண்டதும், 'ஐயோ!' என்று அலறிவிட்டது சபை. ஆனால் அந்தப் பாம்பு அரசர் தோளின்மேல் இருந்து படத்தை விரித்து, அவர் முடிமேல் குடையாகக் கவிழ்த்து நின்றதாம்.

வேறொரு பாம்பு சீறிக்கொண்டு புறப்பட்டதைப் பார்த்து, பழி விளைத்தவர்கள் ஓட்டம் பிடித்தனர். காவலாளிகள் ஒரு பாம்பாட்டியின் உதவியால் அந்தப் பாம்புகளை மறுபடியும் குடத்தில் அடைத்துக்கொண்டுபோய்விட்டார்கள்.

பிறகு மந்திரிகள் திரும்பி வந்து, பய பக்தியுடன் தாங்கள் அநியாயமாகக் குற்றம் சாட்டிய அந்தப் பாகவதர்களின் அடிகளில் வீழ்ந்து மன்னிப்பு வேண்டினார்கள். அந்த அன்பர்கள் முகமலர்ச்சியுடனும் அகமகிழ்ச்சியுடனும், ''இறைவன் உங்களை மன்னித்தருளும்படி நாங்கள் பிரார்த் திக்கிறோம்'' என்றார்கள்.

அப்பால் அமைச்சர்கள் அரசரின் அடிகளில் விழுந்து உண்மையை வெளியிட்டு அந்த நவரத்தின மாலையையும் அவரிடம் கொடுத்தார்கள். இவரும், ''உங்கள் குற்றத்தைத் திருமகள் கேள்வன் பொறுத்தருள வேணும்'' என்றார்.

Koviloor Digital Library

சபையில் உள்ளவர்களெல்லாம் குலசேகரரின் நியாய புத்தியையும் தியாக புத்தியையும் வாழ்த்தினர். ''இதுவன்றோ உண்மையான வீரம்!'' என்று வாயாரப் புகழ்ந்தார்கள்.

பின்னாளில் மணக்கால் நம்பிகள் என்ற பெரியார் குலசேகரரின் இந்தச் செயற்கருஞ் செயலைப் பாராட்டிப் பாடியிருக்கிறார்.

ஆரம் கெடப்பரன்
அன்பர்கொள் ளார்என்(று) அவர்களுக்கே
வாரம் கொடு,'குடப்
பாம்பில்கை இட்டவன், மாற்றலரை
வீரம் கெடுத்தசெங்
கோல்கொல்லி காவலன், வில்லவர்கோன்,
சேரன் குலசே
கரன், முடிவேந்தர் சிகாமணியே.

(ஆரம் - நவரத்தின மாலை, பரன் அன்பர் - பகவானுடைய அன்பர்கள். கொள்ளார் - எடுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள். வாரம்கொடு - அன்புகொண்டு. குடப்பாம்பில் - பாம்புக் குடத்தில். மாற்றலரை - பகைவரை. செங்கோல் கொல்லி காவலன் - செங்கோலை யுடைய கொல்லி அரசன். வில்லவர் கோன் - வில் வீரர்களுக்குத் தலைவன்.)

பக்த சமுதாயத்திற்கு - ஏன், இன்றைய சமுதாயத்திற்குங் கூட எத்தகைய வழிகாட்டி நம் குலசேகரர்! தமது தூய அன்பினாலும் பெரு நம்பிக்கையாலும் பக்திக் காதலாலும், உண்மையின் இதயத்தை ஊடுருவிக் கண்டுகொண்டார் இவர். இந்த அநுபவம், இந்த வெற்றி இவர் வாழ்க்கையில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கிவிடுகிறது.

Koviloor Digital Library

6. செவியால் கண்ணால் பருகினார்

தமது இஷ்டமூர்த்தியான ராமனுடைய திவ்ய சரித்திரத்தை விரிவாக அரங்கன் திருமுற்றத்து அடியார் வாயிலாகக் கேட்க விரும்பினார் குலசேகரர். அவர்களும் பரம புருஷன் தசரதனுக்குத் திருக்குமாரனாக அவதரித்தருளிய அந்த இதிகாசத்தைக் காலட்சேபம் செய்வதில் விருப்பமுள்ளவர் களாயிருந்தார்கள். அந்தக் காலட்சேபம் கேட்டதில் குலசேகரர் திருவரங்க யாத்திரையையும் ஒருவாறு மறந்திருந்தார்.

கேட்கிறார், பார்க்கிறார்.

வேதங்களால் பரம்பொருள் என்று நிச்சயிக்கப் பெற்றிருக்கும் மெய்ப்பொருளானது ராமநாமத்துடன் அவதரித்தாற் போல, அந்த வேதங்களே வால்மீகி பகவானின் திருவாக்காகிய ராமாயண ரூபமாய்ச் செவிக்கு இனிய செஞ்சொற்களாக வந்து அவதரித்தன என்ற பீடிகையுடன், அந்தப் பாகவதர்கள் தங்கள் காலட்சேபத்தைத் தொடங் கினார்கள். செவியே வாயாகப் பருகிக் களித்தார் குலசேகரர்.

ராமாவதாரம் ஆகிவிட்டது. தக்க வயதில் கல்விப் பயிற்சிக்காக வசிஷ்ட குரு குலத்திற்கு ராமன் முதலான சகோதரர்களை அனுப்பி வைக்கப் போகிறார்கள். சூரிய குலத்துக்கே ஒரு விளக்காய்த் தோன்றியவன் - உலகம் அனைத்தும் விளக்கும் ஜோதி - தானே ஒளி பெறுவதற்கு ஓர் ஆசிரியரிடம் போக நேர்ந்துவிடுகிறது என்றார் காலட்சேபம் நடத்தியவர்.

குலசேகரரோ ராமனைக் குழந்தைப் பருவத்திலேயே கண்டு, கௌசலை தன் பிள்ளையைத் தாலாட்டுவதையும் கண்ணாரக் கண்டு அநுபவித்தார். பிறகு ராமனோடு குருகுலக்

Koviloor Digital Library

கல்வியும் கற்கலானார். அவர்கள் சொன்ன விவரங்கள், சொல்லாத விவரங்கள் எல்லாம் இவர் மனக்கண் முன் தோன்றலாயின.

தாடகை வதம் நடந்தது. விசுவாமித்திர முனிவனின் வேள்வி காத்தான் ராமன். அவர்கள் இப்படிச் சொல்லி வரும்போதே அந்தக் காட்சிகள் மனக்கண்முன் வந்து, 'இந்த யாக ரட்சணம் முதலான காரியங்கள் எல்லாம் உலக ரட்சணத் திற்காகத்தான்!' என்று சொல்வதுபோலத் தோன்றியது.

'சீதா கல்யாணம் நடைபெற்றது. வில் இறுத்துச் சீதையை மணந்துகொண்டான் ராமன்' என்றார் காலட்சேபம் செய்தவர். குலசேகரரோ, 'சீதைக்காகத்தானே வில்லை முறித்தான்; அந்தக் கண்ணழகில் ஈடுபட்டுத்தான் அவ்வளவு சுலபமாகக் காதலன் அந்தப் பயங்கரமான வில்லை முறித்தெறிந்தான்!' என்று மகிழ்வெய்தினார்.

'பரசுராமன் கோபத்தோடு எதிர்ப்பட்டான். அவனைக் கர்வபங்கம் செய்தான் ராமன்' என்று காலட்சேப சுவாமி சொன்னதும், 'அந்த வீரச் செயலும் சீதை காண நடந்தது; அவள் காதலின் மகிமையால் அநாயாசமாக நடைபெற்று விட்டது' என்று எண்ணமிட்டார் குலசேகரர்.

தசரதர் ஆகிறார்!

சக்கரவர்த்தி தன் திருமகனுக்கு முடிசூட்ட விரும்பு கிறான். ஆனால் கைகேயி குறுக்கிட்டுத் தடுத்துவிடுகிறாள். கூனியின் சூழ்ச்சி பலித்துவிடுகிறது. தனயன், கான் புகத் தசரதன் புலம்பும்போது குலசேகரர், தாமே தசரதன் ஆகி விட்டதுபோல் 'என் ராமா! ஓ ராமா! கைகேயி சொற்கேட்டு நன்றாக ராஜ்யத்தை ஆளச் செய்தேன் உன்னை, என் மகனே!' என்றெல்லாம் கதறத் தொடங்குகிறார்.

காலட்சேப சுவாமி திகைக்கிறார்; திடுக்கிட்டுப் போகிறார்! பிறகு இளநகை அரும்பி, 'இப்படியும் ஓர்

Koviloor Digital Library

அநுபவமா!' என்று அதிசயிக்கிறார். அந்தக் கட்டத்தை அப்படியே நிறுத்திவிட்டு, அன்றைக் காலட்சேபத்தை முடித்துக்கொள்கிறார். குலசேகர - தசரதரோ, 'அரும்பாவி சொல் கேட்ட அருவினையேன் என் செய்வேன்!' என்று கதறிக்கொண்டே இருக்கிறார்.

ராமாயண காலத்திற்கே யாத்திரை!

காலட்சேப சுவாமி சாமர்த்தியமாக நகர மாந்தர் சோகம் முதலான சோகக் காட்சிகளை விஸ்தரிக்காமலே, நகரம் துறந்த ராமன் கங்கைத் துறையில் குகனைச் சந்தித்த அந்த நிகழ்ச்சிக்குப் போய்விடுகிறார். அரசு துறந்த கவலை அதிகமாக இல்லாமல் சீதையும் ராமனும் லட்சுமணனும் காட்டில் அநுபவித்த இயற்கைக் காட்சிகளைச் சற்று விரிவாகவே வருணிக்கிறார். பாதுகா பட்டாபிஷேகமும் நடக்கிறது. இதையும் கண் குளிரக் காண்கிறார் குலசேகரர்.

விராதன் வதமாகிறான். தமிழ் முனிவரான அகஸ்தியர் வில் ஒன்று உதவுகிறார் ராமனுக்கு. சூர்ப்பணகையின் அங்க பங்கம் நடக்கிறது. அந்தக் காதல் நாடகம், குலசேகரரின் நகைச் சுவையைத் தூண்டுகிறது.

சூர்ப்பணகை கரதூஷணர்களிடம் ஓடுகிறாள். 'அவர்கள் பதினாலாயிரம் துஷ்ட ராட்சஸர்கள்!' என்று காலட்சேப சுவாமி சொன்னதும், குலசேகரருக்குச் சற்றுக் கவலை ஏற்படுகிறது.

'தம்பி லட்சுமணனைச் சீதாபிராட்டிக்குக் காவலாக வைத்துவிட்டுத் தர்மாத்மாவான ராமன், தான் ஒருவனாகவே அந்தப் பதினாலாயிரம் அரக்கர்களுக்கு எதிரே போரிடச் சென்றான்; இளைத்தால் என் செய்வது?' என்று வால்மீகி பகவான் கலங்குவதாக அமைந்திருக்கும் சுலோகத்தைப் பாடுகிறார் காலட்சேப சுவாமி. குலசேகரரும் அன்பால் அறிவு தடுமாறி, 'அந்த அரக்கர்களால் ராமனுக்கு ஆபத்து

Koviloor Digital Library

விளைந்துவிட்டால் என் செய்வது?' என்று தாமும் உருகி நிற்கிறார்.

பிறகு, 'வாளும் வில்லும் கொண்டு பின் செல்வார் இல்லையே!' என்று கவலைப்படுகிறார். உடனே, 'அடியேன் ஒருவன் இருக்கிறேனே!' என்ற நினைவு வந்ததும், விரைந்து கரி பரி தேர் காலாள் என்ற நால்வகைப் படைகளையும் திரட்டிக் கொண்டு ராமனுக்குப் படைத்துணையாகப் புறப்படவும் துணிகிறார்.

ராமாயணப் பிரசங்கி ஆச்சரியமடைகிறார். 'இதை எவ்விதம் தவிர்ப்பிக்கலாம்?' என்று சிந்தையில் ஆழ்ந்த மந்திரி ஒருவன் தந்திரமாகச் சிலரை ஏவிக் குலசேகரருக்கு எதிரில் போய் ராமன் வெற்றியடைந்துவிட்டதாகச் செய்தி சொல்லும்படி ஏற்பாடு செய்கிறான்.

அவர்களும், படை வீரர்களோடு கிளம்பச் சித்தமாயிருந்த குலசேகரரிடம் ஓடிவந்து, 'சக்கரவர்த்தித் திருமகன்' தான் ஒருவனாக நின்றே அந்த அரக்கர்களையெல்லாம் அதம் செய்துவிட்டு மீண்டு பிராட்டியை அடைந்துவிட்டான். அவள் தழுவிக் கொண்டதால் ராமன் திருமேனியிலிருந்த புண்களெல்லாம் ஆறிவிட்டன!' என்று செய்தி சொல்லுகிறார்கள். அப்போது அந்தப் பொருள் உள்ள சுலோகத்தைப் பிரசங்கியார் பாடி அன்றைக் காலட்சேபத்தை முடித்துக்கொள்கிறார்.

குலசேகரர் திருப்தியுடன் ராஜஸ்தானத்திற்குச் சென்றபின், ராமாயணப் பிரசங்கி இவருடைய மனநிலையை நன்றாக அறிந்துகொண்டுவிட்டதால் இனி ஜாக்கிரதையாகவே காலட்சேபம் நடத்த வேண்டும் என்று தீர்மானித்தார். சூர்ப்பணகை ராவணனிடம் போய்ச் சீதையைக் குறித்துப் பிரஸ்தாபிப்பதையும், மாரீச மாமா மாயமானாகி வருவதையும் ராமன் மானைத் துரத்திப் போவதையும் இடையூறில்லாமல் பிரசங்கித்து முடித்தார்.

Koviloor Digital Library

மறுநாள் அந்தப் பிரசங்கி அரண்மனைக்குச் செல்ல முடியாதபடி ஓர் அசந்தர்ப்பம் ஏற்பட்டது. அவருடைய புதல்வர், ''அப்பா, நான் போய்வருகிறேன்'' என்று அநுமதி பெற்றுக் காலட்சேபம் நடத்த வந்து சேர்ந்தார்; பிரசங்கி அப்போதிருந்த அவசர நிலையில் குலசேகரரின் உள்ள நெகிழ்ச்சி குறித்துத் தம் புதல்வருக்குத் தெரிவிக்க மறந்து விட்டார்.

இளங்கன்றல்லவா? அடக்கம் இல்லாமல் துள்ளிக் குதிக்கும் முறையில் உபந்நியாசம் ஓடிக்கொண்டிருந்தது. படபடப்பாகவே, ''லோககண்டகனான ரா்வணன் ராமபிரான் பிரிந்திருக்கும் சமயம் பார்த்து, திடுக்கென வந்து பிராட்டியை எ்டுத்துக்கொண்டு போய்விட்டானே! வால்மீகி பகவானுக்கு வயிற்றிலே என்னவோ செய்வதுபோலத் தோன்றுகிறது; ரிஷி வயி்ற்றைப் பிடித்துக்கொள்கிறாரே!'' என்று பேசித் தீர்த்து விடுகிறார் இளைஞர்.

குலசேகரர் பளிச்சென்று தம்முடைய ஸ்தானத்தை விட்டு எழுந்து நிற்கிறார். சோகம் சடுதியில் மறைந்து கோபம் மூளுகிறது. அகம் பதைத்து, முகம் வேர்க்க, அங்கங்கள் துடிக்கின்றன. வாளை உருவிக்கொண்டு, ''நான் இந்தக் கணமே போய் அந்தப் பத்துத் தலைகளையும் அறுத்தெறிந்து பிராட்டியைக் கொண்டுவந்து, 'சக்கரவர்த்தித் திருமகன்' மான்வேட்டையிலிருந்து திரும்புவதற்குள் பர்ணசாலையில் சேர்த்து விடுவேன்!'' என்று வீரவாதம் செய்கிறார்.

குதிரைமேல் ஏறிப் புறப்படுகிறார் குலசேகரர். பக்தி, பகுத்தறிவை இப்போது முற்றும் மறைத்துவிடுகிறது. படைவீரர்களும் பின்தொடர்ந்து ஓடுகிறார்களாம். பதில் சொல்வதும், 'ஏன்?' என்று பகுத்தறிவை உபயோகித்துப் பார்ப்பதும் அவர்கள் தொழில் இல்லையே! செய்வதும் சாவதும்தானே அவர்கள் தொழில்!

Koviloor Digital Library

குலசேகரர் இலங்கையை நோக்கி அதிவேகமாகச் சென்று சமுத்திரத்திலும் இறங்கிவிடுகிறாராம். அப்போது சீதாலட்சுமண சமேதனாய், விபீஷணன் தொடக்கமான படைகளுடன் ராமனுடைய காட்சியே அவருக்குக் கிடைத்து விடுகிறதாம். உடனே பிரமை தீர்ந்துபோகிறது.

''அரக்கர்கோனை அழித்து வெற்றிகொண்டு வந்திருக்கிறோம். அந்த வெற்றியில் உலகத்திற்கு எல்லாம் பங்கு உண்டு; ஆழ்வாரே! உமக்கும் அதில் தாராளமாகப் பங்கு உண்டு'' என்று ராமனே சொல்வது போலத் தோன்றுகிறதாம். குலசேகரர் உள்ளம் குளிர்ந்து, பிராட்டி திருவடிகளிலும் பெருமான் திருவடிகளிலும் முடிதாழ்த்திக் கவலை தீர்ந்து, அரண்மனைக்குத் திரும்புகிறார்.

''அயோத்திக்குத் துரிதமாகப் போகவேண்டுமே; இல்லாவிட்டால் பரதன் கதி எப்படியாகுமோ? ஆகவே விடைதரவேண்டும்'' என்று ராமன் சொல்லிவிட்டுப் பிறகு, ''நீர் நம்முடைய திருவரங்கப் பெருநகருக்கு வந்து சேரும்'' என்றும் கட்டளையிட்டு மறைந்துவிட்டானாம். அப்பால் ராமாயண காலட்சேபம் ராம பட்டாபிஷேகத்தோடு பூர்த்தி அடைந்தது.

'இனிமேல் ராஜ்யத்தைத் துறந்து ஸ்ரீரங்க ராஜாவின் கைங்கரியத்தில் ஈடுபடவேண்டியதுதான்; அங்கே அடியார் குழுவில் ஒன்றுபட்டுக் கலந்து போகவேண்டியதுதான்' என்று முடிவு கட்டி அப்படியே அடியார்களுடன் புறப்படவும் சித்தமாகிவிட்டார்.

இவர் தம் புதல்வனுக்குத் தமது தந்தையாரின் பெயரை இட்டிருந்தார். அவனைத் தமக்குப் பின் ஆளும்படி நியமித்து விட்டு, 'எம்பெருமான் திருவரங்கம் எங்கே, எங்கே?' என்னும் தீராத காதலுடன் அரண்மனையிலிருந்து வெளிப்பட்டார்.

Koviloor Digital Library

7. குலசேகர ராமாயணம்

'பெருமாள் திருமொழி' என்ற பெயருள்ள குலசேகராழ்வாரின் பாடல்களில், இவரது ராம பக்திப் பாடல்கள் முப்பத்து மூன்றே. இவை மூன்று பதிகங்களாக அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு பதிகத்திலும் 11 பாடல்கள் காணப்படுகின்றன. இறுதிப்பாட்டு இவர் வாக்கு அல்ல என்று கருதுவோரும் உண்டு.

இந்த மூன்று பதிகங்களிலும் ராம சரிதம் கூறும் பதிகம் இறுதியிலும், இவரது தாலாட்டுப் பாடல்கள் முதலிலும் 'தசரதன் புலம்பல்' என்ற பாடல்கள் நடுவிலும் அமைந் திருக்கின்றன. இப்பாடல்களைப் பார்க்கும்போது, இவர் ராமாயணத்தைச் சாதாரண காலட்சேபமாகக் கேட்டிருக்க மாட்டார்; பகற்கனவுகளாகவே அக்காட்சிகளை அநுபவித் திருப்பார் என்பது புலனாகும்.

ராமனைத் தாலாட்டுகிறார்

முதல் முதல் இவரது தாலாட்டுப் பாடல்களைப் பார்க்கலாம். பெரியாழ்வாரும் கண்ணனுக்குத் தாலாட்டுப் பாடல்கள் பாடியிருக்கிறார். அவர், தாமே யசோதையாகித் தாலாட்டுகிறார். குலசேகரரோ,

மன்னு புகழ்க் கௌசலைதன்
மணிவயிறு வாய்த்தவனே!

என்று தம்முடைய புதல்வனைத் தாலாட்டுவது போலவே தாலாட்டுகிறார்.

என்னுடைய இன்னமுதே!
இராகவனே தாலேலோ!

என்று தாலாட்டுவதையும் பாருங்கள்.

Koviloor Digital Library

எங்கள்குலத்(து) இன்னமுதே!
இராகவனே! தாலேலோ!

என்று இவர் தாலாட்டுவதும் கவனிக்கத்தக்கது.

இந்தத் தாலாட்டுப் பாடல்களிலும் ராம சரிதத்தின் சில நிகழ்ச்சிகள் குறிக்கப்படுகின்றன. 'சக்கரவர்த்தித் திருமகனி'ன் பிறப்பும் தாடகை வதமும் சீதா கல்யாணமும் பிரஸ்தாபிக்கப் படுகின்றன. சிறிய தாயின் சொற்கொண்டு இளையவனோடு கான் புகுந்ததும், அப்போது சுற்றமெல்லாம் சிறிது தூரம் பின் தொடர்ந்ததும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. பரத நம்பிக்குப் பாராளும் செல்வத்தை அருளியதைக் குதூகலம்ாய்ப் பிரஸ்தாபிக்கிறார் குலசேகரர்.

வாலி வதமும் வருகிறது. மலையால் அணைகட்டி மதில் இலங்கை அழித்ததும் ராவண வதம் செய்ததும் ஆகிய முக்கிய நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. ராம சரிதத்தின் ஒன்பது நிகழ்ச்சிகளை இந்தத் தாலாட்டுப் பாடல்களில் காண்கிறோம்.

ராமன், லோகரட்சகனான திருமாலின் அவதாரம் என்பதைக் குலசேகரர் இப்பாடல்களில் வற்புறுத்துகிறார். இந்த அவதார மூர்த்தியை,

அற்றவர்கட்(கு) அருமருந்தே!

(அற்றவர்கட்கு - வேறு கதியற்றவர்களுக்கு.)

என்று அகம் குளிர அழைத்து இறைவனது அதிசய எளிமையை யும் வற்புறுத்துகிறார்.

'க்ணபுரத்து என் கருமணி' என்று இவர் குறிப்பிட்டுக் குழந்தை ராமனைத் தாலாட்டுகிறார். 'கற்றவர்கள் தாம் வாழும் கணபுரம்' என்றும், 'கலைவலவர் தாம் வாழும் கணபுரம்' என்றும் கணபுரத்தின் கலைவளத்தைப் பாராட்டு கிறவர்,. காவிரி நன்னதி பாயும் கணபுரத்தின் நில நீர் வளங்களையும் குறிப்பிடுகிறார்.

Koviloor Digital Library

கணபுரத்தின் அழகையும், அங்கே இவர் கண்ட 'கருமணி'யாகிய ராகவனின் அழகையும் சேர்த்து,

கண்டவர்தம் மனம் வழங்கும்
கணபுரத்(து)என் கருமணியே!

என்று அருமையாகப் பாடுகிறார்.

இந்தக் கணபுரத்துக் கருமணியை அரங்கனாகவும் இந்தப் பதிகத்தில் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

யாவரும்வந்(து) அடிவணங்க
அரங்கநகர்த் துயின்றவனே!

இவர் பாடும் ராமாயணச் சுருக்கம்

ராம சரிதம் முழுவதும் 'பெருமாள் திருமொழி'யின் இறுதிப் பதிகமாக அமைந்திருக்கிறது.

அங்கண்நெடு மதில்புடைசூழ்
அயோத்தி என்னும்
அணிநகரத்(து) உல(கு) அனைத்தும்
விளக்கும் சோதி

வெங்கதிரோன் குலத்துக்(கு)ஓர்
விளக்காய்த் தோன்றி
விண்முழுதும் உயக்கொண்ட
வீரன் தன்னைச்

செங்கண்நெடுங் கருமுகிலை
இராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர
கூடம் தன்னுள்

எங்கள்தனி முதல்வனை, எம்
பெருமான் தன்னை
என்றுகொலோ கண்குளிரக்
காணும் நாளே?

Koviloor Digital Library

(அங்கண் - இடம் அகன்ற. உயக்கொண்ட - உய்யக் கொண்ட. முகிலை - மேகத்தை.)

என்று ராமாவதாரத்தைச் சிறப்பித்துத் தொடங்குகிறது. இப்பதிகம்.

அடுத்த பாட்டிலே தாடகை வதம், வேள்வி காத்தல் ஆகிய நிகழ்ச்சிகளும், அதற்கு அடுத்த பாட்டில் வில் இறுத்துச் சீதையை மணம் புரிந்ததும் பரசுராம கர்வபங்கம் செய்ததும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

சிவதனுசை முறித்துச் சீதையை மணஞ் செய்து கொண்டான் என்ற நிகழ்ச்சியை வால்மீகி ராமாயணத்தில் வாசிக்கும்போது, 'வந்தான், வென்றான், கண்டான்' என்ற மூன்று சொற்களில் முனிவர் பெருமானின் கதைப் போக்கைக் குறிப்பிட்டுவிடலாம். கம்ப ராமாயணத்திலோ அதே நிகழ்ச்சியை 'வந்தான், கண்டான், வென்றான்' என்ற முறையில் அதே மூன்று சொற்களை மாற்றி அமைத்துச் சுட்டிக் காட்டலாம்.

கம்ப சித்திரத்திலே சீதா கல்யாணம் தமிழர்களின் நாகரிகப் போக்கிற்கு இணங்கிக் காதல் மணம் ஆகிறது. இதற்கு ஒரு விதையைக் குலசேகரர் வாக்கிலே காணலா மென்று தோன்றுகிறது.

செவ்வரிநற் கருநெடுங்கண்
சீதைக்(கு) ஆகச்
சினவிடையோன் சிலைஇறுத்து

(சினவிடையோன் சிலை - சிவதனுசு.)

என்ற செய்யுள் அமைப்பு ஊன்றி நோக்கத்தக்கது.

'நெடுங்கண் சீதைக்கு ஆக' வில் இறுத்தான் என்பதிலிருந்து, சீதை காதலால் ராமன் வில் இறுத்தான் என்பதை ஊகித்துக்கொள்ளலாம். 'இருவர் கண்களும் சந்தித்திருக்கக்கூடும்; சீதையின் கண்ணழகிலே ஈடுபட்ட

Koviloor Digital Library

ராமன், அவள் கண்ணால் பணித்த பணியாகக் கொண்டு வில்லை அநாயாசமாக முறித்துவிட்டான்' என்று ஊகம் செய்வதற்கும் இச்செய்யுள் அமைப்பு இடங்கொடுக்கிறது.

இந்தப் பதிகத்தின் நான்காம் பாட்டிலே கைகேயி சொல்லால் நகர் துறந்ததும், கங்கையைக் குகன் தோணியால் கடத்தியதும், தெற்குத் திசையில் போய் வனம் புகுந்ததும், பரதனுக்குப் பாதுகமும் அரசும் அளித்ததும் ஆகிய நிகழ்ச்சிகள் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. குகனைக் குலசேகரர்,

பத்தி யுடைக்குகன்

(பத்தி - பக்தி.)

என்று குறிப்பிடுவர்.

இக்கருத்தை ஒட்டியே கவிச் சக்கரவர்த்தியான கம்பனும்,

பத்தியின் உயிர்ஈயும்
பரிவினன்

அதாவது, பக்தியினால் உயிரையும் கொடுக்கக்கூடிய அன்பை யுடையவன் என்று குகனைக் குறிப்பிடுகிறார்.

இதற்கு அடுத்த செய்யுளில் விராதன் வதம் வருகிறது. அகஸ்தியர் வில்லை உதவியதும், சூர்ப்பணகை அங்க பங்கமுற்றதும், கரதூஷணாதியர் வதமானதும், மாயமான் கொல்லப்பட்டதும் ஆகிய நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. அகஸ்தியரைக் குலசேகரர்,

வண்தமிழ் மாமுனி

என்று தமது தமிழன்பு தோன்றக் குறிப்பிடுகிறார்.

ஆறாவது பாட்டிலே சீதை பிரிவும், அதனால் ராமன் தளர்வு அடைவதும், ஜடாயுவை வைகுந்தம் ஏற்றுவதும், சுக்கிரீவனுடன் நட்புக்கொண்டு வாலி வதம் செய்வதும் அநுமனால் லங்கா தகனம் செய்விப்பதும் ஆகிய நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன.

Koviloor Digital Library

'சடாயுவை வைகுந்தத்(து) ஏற்றி'

என்று குலசேகரர் கூறுவதைக் கம்பன் கூறியுள்ளான்; ராமனுடைய பாதங்களை நோக்கிய வண்ணம் மீளா உலகமாகிய பரம பதத்தை ஜடாயு அடைந்தானாம்.

சமுத்திரத்தை அம்பு போட்டுக் கலக்கியதும், சேது கட்டியதும், மறு கரையை அடைந்ததும், இலங்கை வேந்தனை அரக்கர்களோடு அழித்ததும், அவன் தம்பிக்கு அரசு அளித்ததும் சீதையோடு இனிது அமர்ந்ததும் ஆகிய நிகழ்ச்சிகள் ஏழாம் பாட்டிலே பேசப்படுகின்றன.

பிறகு குலசேகரர், அயோத்திக்கு ராமன் சென்று பட்டாபிஷேகம் செய்துகொண்டதையும், அகஸ்தியர் வாயிலாக ராவணனது வரலாற்றைத் தெரிந்துகொண்டதையும், சீதை வயிற்றிலே பிறந்த பிள்ளைகள் வாயால் ராமன், தன் சரிதை கேட்டதையும் பிரஸ்தாபிக்கிறார்.

அப்பால் சம்புகனைக் கொன்றது முதலான சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறார். பத்தாம் பாட்டிலே ராமன் சராசரங்களை வைகுந்தம் ஏற்றித் தானும் வைகுந்தம் ஏறி வீற்றிருந்ததைச் சொல்லி முடிக்கிறார். பதிகத்தின் பலனை இறுதிப் பாட்டிலே காணலாம்.

தசரதனாகிப் புலம்புகிறார்!

'தசரதன் புலம்பல்' என்ற பதிகம் மிகவும் உருக்கமாக அமைந்திருக்கிறது. குலசேகரர், தாமே தசரதனாகிப் புலம்புகிறார். கவிதைச் சுவையில் இப்பாடல்கள் மிகச் சிறந்தவை.

ராமனுக்கு முடி சூட்ட எத்தனிக்கும்போது, ''நெடுங்கானம் போ'' என்று கைகேயி சொன்னாளல்லவா? 'சிங்காதனத்தின்மேல் இருந்தவனை இறக்கிக் காட்டுக்குத் துரத்திவிட்டாளே!' என்கிறது குலசேகரர் மனோபாவம்.

Koviloor Digital Library

நன்றாக நானிலத்தை
ஆள்வித்தேன், நன்மகனே!
உன்னை நானே!

என்று அலறுகிறது இருதயம்.

கரி பரி தேர் முதலான படைகளைக் கைவிட்டு வனத்திற்குப் போய்விட்டானாம் ராமன். ''சீதையும் லட்சுமணனும் பின்பு போக, ராமன் எவ்வாறு நடந்தானோ?'' என்று கதறுகிறார் குலசேகரர். லட்சுமணனும் சீதையும் நடந்ததுகூட இவர் உள்ளத்தை அவ்வளவாகப் பாதிக்க வில்லை.

நெய்வாய வேல்நெ டுங்கண்
நேரிழையும் இளங்கோவும் பின்பு போக,
எவ்வாறு நடந்தனை? எம் இராமாவோ!
எம்பெருமான்! என்செய் கேனே!

(நெய்வாய - நெய் தடவிய. நேரிழை - பெண்; இங்கே சீதை. இளங்கோ - தம்பியாகிய லட்சுமணன்.)

என்று இவர் புலம்புவதைக் கேளுங்கள்.

தசரதனுடைய காதற் புதல்வனல்லவா? தசரதனுக்கு ராமன்மீது உள்ள அந்தப் பைத்தியமான காதலை அந்த இதயத்திலிருந்து அப்படியே தன் இதயத்திற்குச் சுவீகரித்துக் கொண்டதுபோல் குலசேகரர்,

வல்வினையேன் மனம்உருக்கும்
வகையே கற்றாய்!

என்கிறார்.

'காட்டிலே படுக்கைக்கு ராமன் என்ன செய்வான்?' என்ற கவலையும் வந்துவிடுகிறது குலசேகர - தசரதனுக்கு. தம் அருமைப் புதல்வர் ஜவர்ஹர்லால் நேரு சிறைப்பட்டால் அங்கே வசதியான படுக்கை கிடைக்காதே என்ற கவலை யுடன், மெத்தையில் படுத்திருந்த மோதிலால் நேரு தன்

Koviloor Digital Library

படுக்கையைவிட்டுத் தரையில் சிறிது நேரம் படுத்துப் பார்த்தாராம். குலசேகரரும் அத்தகைய மனநிலையில் இருந்திருக்க வேண்டும்.

ராமனுக்குக் காட்டிலே மெல்லணையா கிடைக்கப் போகிறது?

மெல்லணைமேல் முன்துயின்றாய்,
இன்றினிப்போய் வியன்கான மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக்
கற்றனையோ? காகுத்தா! கரிய கோவே!

(வியன்கானம் - பெரிய காடு. காகுத்தா - ராமனே.)

என்று கதறுகிறார் குலசேகரர். இவர் தம் மெல்லணை துறந்து கல்லணைமீது படுத்து அந்த அநுபவத்தையும் அறிந்திருப்பது போலத் தோன்றுகிறது.

தசரதன், கைகேயிக்குக் கொடுத்த வாக்கிற்குக் கட்டுப் பட்டு, ராமன் காட்டுக்குப் போவதை அனுமதித்தான். ஆனால் சத்தியத்திற்கும் பிள்ளைப் பாசத்திற்கும் ஒரு போர் ஆரம்பமாகிவிட்டது சக்கரவர்த்தியின் உள்ளத்திலே.

சத்தியம் 'போ' என்கிறது; பாசம் 'வா' என்கிறது. 'வா, போ, வா', 'இன்னும் வந்து ஒருகால் கண்டு போ' என்றெல்லாம் தசரதன் முன்பின் முரண்படக் கட்டளை போடுகிறான் ராமனுக்கு. இப்போது சீதா கல்யாண நினைவும் வருகிறது. 'சிவதனுசை முறிக்கும் ஆற்றல் பெற்றிருந்த வீரனைச் சிங்காதனத்தில் அமரச் செய்யாமல் காட்டிலே அலைய விடுகிறோமே!' என்கிறான்.

இப்படி நினைக்கும்போது, சீதை பொருட்டாக ராமன் வில் இறுத்தான் என்றே தசரதன் நினைக்கிறான்:

வேய்போலும் எழில்தோளி
தன்பொருட்டா விடையோன்தன்
வில்லைச் செற்றாய்!

Koviloor Digital Library

(வேய்போலும் - மூங்கில்போன்ற. எழில்தோளி - அழகிய தோள்களையுடைய சீதை. பொருட்டா - பொருட்டாக. விடையோன்தன் - சிவபிரானுடைய. செற்றாய் - முறித்தவனே.) இதிலும் சீதை காதலால் ராமன் வில் இறுத்து வெற்றி பெற்ற குறிப்பைக் காணலாம்.

கண் குளிரக் கல்யாணம் செய்து பார்த்த மகனை ஆசைத் தீரச் சிங்காதனத்திலும் வைத்துப் பார்க்கக் கொடுத்துவைக்க வில்லையே என்று வருந்தும் தசரதன், 'யானைகள் முதலான விலங்குகள் சஞ்சரிக்கிற காட்டுக்கு அவன் போக என்னுடைய நெஞ்சமானது இரு பிளவாகப் பிளந்து போகாமல் இருக் கிறதே; இந்த நெஞ்சுதான் எவ்வளவு வலிமையுடையது. என்றெல்லாம் புலம்புகிறான்.

உண்மையிலேயே தசரதனுடைய துயரங்களை யெல்லாம் குலசேகரர் தம் நெஞ்சிலே அநுபவித்துக் கொண்டி ருக்கிறார். 'வா, போ, வா' என்று தசரதன் அறிவு கெட்டுப் புலம்புகிற அந்த வார்த்தையைச் சொல்லும்போது, ராமனுடைய முன்னழகையும் பின்னழகையும் நடையழகை யும் தசரதனைப்போல் அநுபவித்துக்கொண்டிருக்கிறார். இவரது இஷ்டமூர்த்தி இவர் கண்முன் தோன்றுவதும், கண் மறையப் போவதும், மீண்டும் வருவதுமாய் இருக்கிறான்.

குலசேகரர் அக்காலத்துச் சிறந்த வீரர்களில் ஒருவர். வேல் முதலான ஆயுதங்களை உபயோகிப்பதில் வல்லவர். வேலாயுதத்தின் கூர்மையை அறிந்தவர். 'பகைவர்கள் கையில் ஏந்தும் கூர்மையான வேலின் நுனிபோலக் காட்டிலுள்ள பருக்கைக் கற்கள் (பரல்) ராமன் காலில் தைக்குமே!' என்று வருந்துகிறார்:

பொருந்தார்கை வேல்நுதிபோல்
பரல்பாய மெல்லடிகள்
குருதி சோர

(பொருந்தார் - பகைவர்கள். வேல்நுதி - வேல்நுனி. பரல் - பருக்கைக் கற்கள். குருதிசோர - ரத்தம் பெருக.)

Koviloor Digital Library

என்று புலம்பும்போதே, எதிரிகளின் கூர்மையான வேல் தம் மீது பாய்வது போன்ற உணர்ச்சியையும், அந்தக் கூர்மையான கற்கள் தம்முடைய காலிலே தைப்பதுபோன்ற உணர்ச்சியை யும் ஒருங்கே அடைகிறார்.

'ராமன் மேலே வெயில் உறைக்குமே, அவன் கடும்பசியால் கஷ்டப்படுவானே!' என்பதையும் நினைத்துப் பார்க்கிறார்; அநுபவித்துப் பார்க்கிறார்.

விரும்பாத கான்விரும்பி,
வெயில்உறைப்ப வெம்பசிநோய் கூர, இன்று
பெரும்பாவி யேன்மகனே! போகின்றாய்.

(வெம்பசி - கொடிய பசி, கூர - அதிகரிக்க.)

ராமன் தசரதனை, 'ஐயா!' என்று அழைப்பதற்குப் பதில் 'அம்மா!' என்றே அழைத்தானாம். கணப்பொழுதும் காணா விட்டால் உடனே சுமந்திரனைக் கூப்பிட்டுச் சக்கரவர்த்தி, 'குழந்தையை அழைத்து வா' என்று சொல்வார். அவ்வளவு அன்புள்ள தந்தையை உகப்பின் மிகுதியால், 'அம்மா' என்றே அழைத்தானாம் ராமன்.

அப்படி அழைத்துக்கொண்டே வந்த அந்தக் குழந்தைக்கு ஆபரணங்களை அணிந்திருந்தாள் கௌசலை. அந்த அணிகள் பொருந்திய மகன் மார்பு தன் மார்பிலே அழுந்தும்படி இறுக அணைத்துக்கொள்வானாம் சக்கரவர்த்தி. அந்த ஆலிங்கன போகத்தில் மூழ்காமலும் உச்சி மோந்திடாம லும் அந்த மென்மையான கம்பீர நடையழகையும் முகப் பொலிவையும் காணாமலும் எப்படி இருக்க முடியும்! இது தசரதரது பெரும் பிரச்சினை.

அதே பிரச்சினைதான் குலசேகரருக்கும் இப்பொழுது:

'அம்மா!' என்(று) உகந்(து)அழைக்கும்
ஆர்வச்சொல் கேளாதே,
அணிசேர் மார்வம்

Koviloor Digital Library

என்மார்வத் திடைஅழுந்தத்
தழுவாதே, முழுசாதே
மோவா(து) உச்சி,

கைம்மாவின் நடைஅன்ன
மென்னடையும் கமலம்போல்
முகமும் காணா(து),

எம்மானை என்மகனை
இழந்திட்ட இழிதகையேன்
இருக்கின் றேனே!

(ஆர்வச்சொல் - அன்பு நிறைந்த சொல். அணிசேர் மார்வம் - ஆபரணங்கள் அணிந்த என் மகனது மார்பு. மார்வத்திடை - மார்பிலே. முழுசாதே - உட்புகாதே. மோவாது - மோந்திடாமலும். கைம்மாவின் - யானையின். நடை அன்ன - நடைபோன்ற. எம்மானை - எமது ஐயனான மகனை. இழிதகையேன் - இழிவான செயலைச் செய்தவனான நான்.)

'சுமந்திரனே! வசிட்டனே! இது தகவோ? சொல்லீர் நீரே' என்று குலசேகர - தசரதன் புலம்பும்போது, இந்த ராஜ சபையில் உள்ள புரோகிதரே வசிஷ்டராகவும், மந்திரிகளில் ஒருவனே சுமந்திரனாகவும் காட்சி தருகிறார்கள். உடனே கைகேயியின் நினைவு வர, வசிஷ்டரையும் சுமந்திரனையும் மறந்து, 'கைகேசி!' என்று கூவி அழைத்து, 'இப்படியெல்லாம் அநியாயம் செய்து, நீ என்ன பயன் அடைந்தாய்?' என்று கேட்கிறான் தசரதன்.

'ராமனையும் தம்பியையும் பூவை போலும் மெல்லிய லான என் மருமகளையும் வனத்தில் போக்கினாயே!' என்று கதறுகிறான். 'உன் அன்புக்கு உரிய மகனுக்கு நன்மை விளைக்கும் நோக்கத்துடன்தானே இப்படியெல்லாம் செய்தாய்; ஆனால் நன்மை விளைப்பதற்கு மாறாகப் பழிதானே விளைத்திட்டாய்!' என்கிறான்.

'ராமனை வனத்தில் போக்கி என்னை வானில் போக்கி என் மகனையும் பழியில் மூழ்கச் செய்து நீ பெற்றதுதான்

Koviloor Digital Library

என்ன?' என்று கேட்கிறவன் எவ்வளவு வயிற்றெரிச்சலோடு சொல்ல வந்ததை முடிக்கிறான் பாருங்கள்:

என்பெற்றாய்? கைகேசீ
இருநிலத்தில் இனிதாக இருக்கின்றாயே!

(என் பெற்றாய் - என்ன பயன் பெற்றாய்.)

கைகேயிமீது ஏற்பட்ட வயிற்றெரிச்சல் பரதன்மீதும் மனக்கசப்பாகி அவனைத் தன் மகன் என்றுகூடச் சொல்லிக் கொள்ள விரும்பாமல், 'உன் மகன்' என்று கைகேயியை நோக்கிச் சொல்லுமாறு செய்துவிடுகிறது. குலசேகர - தசரதனின் இந்த மனப்போக்கைக் கம்பனின் கதைப் போக்கிலும் காணலாம்.

ராமன் தன்னையும் தன் அருமையையும் தன்னைப் பெற்ற தாயான கௌசலையின் வருத்தத்தையும் ஒரு பொருளாகக் கொள்ளாமல், தசரதனையும் தசரதனுடைய சத்திய வாக்கையுமே பொருளாகக் கருதி வனம் புகுந்தது தசரதன் நெஞ்சை ரம்பம் போட்டு அறுப்பதுபோல் அறுக்கிறது.

உன்னையும் உன் அருமையையும்
உன்மோயின் வருத்தமும்ஒன்
றாகக் கொள்ளா(து),
என்னையும்என் மெய்யுரையும்
மெய்யாகக் கொண்டுவனம்
புக்க எந்தாய்!

(மோயின் வருத்தமும் - தாயின் வருத்தத்தையும், எந்தாய் - எமது ஐயனே.)

என்று நாடு துறந்து போய்விட்ட ராமனை விளித்துப் பேசுகிறான்.

ராமன் பிரிவால் இவ்வளவு துயரமும் தசரதனுக்கும் கௌசலைக்குந்தானா? - சுமித்திரையும் சிந்தை நொந்து கிடக்கிறாளாம். 'இவ்வளவு துன்பத்திற்கும் காரணம் நானேதான் என்கிறான் சக்கரவர்த்தி.

Koviloor Digital Library

'கூனி சொல் கேட்ட கைகேயி சொல் கேட்ட நானேதான்' என்கிறான். எனவே,

கானகமே மிகவிரும்பி
நீதுறந்த வளநகரைத் துறந்து நானும்
வானகமே மிகவிரும்பிப்
போகின்றேன், மனுகுலத்தார் தங்கள் கோவே!

(மனுகுலத்தார் தங்கள் கோவே - மனுகுலத்திலே பிறந்த அரசர்களில் சிறந்தவனே.)

என்று கதறுகிறான்.

★ ★ ★

தனயன் வனம் புக அதனுக்கு ஆற்றாது தசரதன் புலம்பிய புலம்பல் குலசேகரரையே தசரதனாக்கிப் புலம்பச் செய்துவிட்டதென்றால், ராம சரிதத்தை இவர் எப்படி அநுபவித்திருக்க வேண்டும்! ஏதோ கதைபோலவோ, எந்தக் காலத்திலோ நடந்த ஒரு வரலாறு போலவோ கேட்டுக் கொண்டிருந்தார் இவர் என்று சொல்ல முடியுமா?

எம்பெருமான் தன்சரிதை
செவியால், கண்ணால் பருகுவோம்
இன்னமுதம் மதியோம் அன்றே!

என்ற வாக்கிலேயே இவருக்கு ராமகதை மீதுள்ள மோகம் நன்கு புலனாகிறது.

இத்தகைய மோகத்தை வெளியிடுவன குரு பரம்பரை வரலாறுகளிலே குலசேகரர், ராமாயண காலட்சேபம் கேட்ட வண்ணம் அந்தக் காவிய பாத்திரங்களிலே தாமும் ஒரு பாத்திரமாகக் கலந்துவிட்டதாக வரும் கதைகளெல்லாம்.

Koviloor Digital Library

8. பாசுரங்களில் குலசேகரர்

அரச காரியங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதும் ஸ்ரீரங்க யாத்திரையின் நினைவு வந்துவிடும். ராமாயணம் கேட்டுக்கொண்டிருந்தாலும் அந்த ஸ்ரீராமனை அயோத்தியில் போய்ப் பார்க்க வேண்டுமென்று இவர் விரும்பியதில்லை. தில்லை என்ற சிதம்பரத்திலுள்ள சித்திர கூடத்திலும் ஸ்ரீரங்கத்திலும் தரிசிக்கவேண்டும் என்றே ஆசைப்பட்டார்.

இவர் விரும்பிய வாழ்க்கை

லௌகிக வாழ்க்கையில் கவலைகள் வெள்ளமிட்டன; இந்தக் கவலைகளுக்கெல்லாம் ஒரு மருந்து ஸ்ரீரங்க யாத்திரை தான் என்று கருதினார். கொல்லிநகருக்குத் திரும்பி வந்ததும் மறுபடியும் கவலை சூழ்ந்துகொள்ளுமே என்றால் இவர் உத்தேசித்த யாத்திரை திரும்பி வருகின்ற யாத்திரை அன்று.

> தில்லை வெளியிலே கலந்துவிட் டால்,அவர்
> திரும்பியும் வருவாரோ?

என்றார் நந்தனார் (கீர்த்தனை - நந்தனார்), தம்முடைய நாற்பது வேலி நிலத்தையும் கவனித்துக்கொள்ள அவர் விரைவில் திரும்பி வரவேண்டுமே என்று கவலைப்பட்ட ஆதனூர் வேதியனை நோக்கி. அந்த நந்தனாரின் மனநிலைதான் இப்போது குலசேகரருக்கும்.

திருவரங்கத்திலே அடியார்களின் 'இன்பமிகு பெருங் குழுவு கண்டு' அதிலே தாமும் இசைந்து கலந்துவிட வேண்டும்; அப்படிக் கலந்துவிட்டவர் திரும்பியும் வருவாரோ பழைய வழிக்கு? - இது குலசேகரர் நிலை.

Koviloor Digital Library

'அரசர்க்கு அரசன்' என்ற பதவியைக் காட்டிலும் 'அடியார்க்கு அடியன்' என்ற பதவியே இவருக்குப் பிடித்தது.

ஆடிப்பாடி அரங்க! ஓ! என்(று)
அழைக்கும் தொண்டர் அடிப்பொடி
ஆட நாம்பெறில், கங்கை நீர்குடைந்(து)
ஆடும் வேட்கைஎன் ஆவதே?

(பெறில் - பெற்றால். வேட்கை - ஆசை. என் ஆவது - எதற்காக.)

என்ற வாக்கிலே இவரது பக்தி வாழ்வின் குறிக்கோளைக் காணலாம்.

லௌகிகத்திலே கரைந்து நைந்து சுகங்களை அநுபவிப்பதாக மயங்கித் துன்பத்தையே அநுபவித்துக் கொண்டு காலங் கழிப்பதை விரும்பாமல், பகவானுடைய திவ்ய சரிதங்களை வாசித்தும் கேட்டும், திருப்பெயர்களைச் சொல்லிக்கொண்டு ஆடியும் பாடியும் தொண்டுபுரிந்தும் வாழ்க்கை நடத்தும் அடியார்களோடு கலந்து பொழுது போக்குவதையே இவர் விரும்பினார்.

அடியார்கள் ஆடிப்பாடி அழைக்கும்போதும் பஜனை செய்யும்போதும், இஷ்டமூர்த்தியும் அவர்களுடன் கலந்து கொள்கிறானாம். 'அரங்க!' என்று அழைக்கும்படி அணுகி வந்து நிற்கிறானாம். மறுகணமே, 'ஓ அரங்கனே!' என்று கூப்பிடும்படி அவ்வளவு தூரத்தில் போய்விடுகிறானாம்.

இப்படித் திருவிளையாடல் புரியும் இறைவன் உண்மையில் தொண்டர்களுக்குக் கைகால்களைக் காட்டிலும் நெருங்கிய தொடர்புள்ளவனாக இருக்கிறானாம். மூச்சுக் காற்றைக் காட்டிலும் தொண்டர்களுடன் நெருங்கிப் பழகுகிறவன் இறைவன் என்றாலும் பொருத்தந்தான்.

இப்படி இறைவன் சந்நிதியிலே, 'வாழும் சோம்ப' ராகப் பணிபுரிந்தும் பக்தி புரிந்தும் பொழுதுபோக்கும்

Koviloor Digital Library

தொண்டர்களின் அடிப்பொடியே கங்கைநீரைக் காட்டிலும் தூய்மை வாய்ந்தது என்பது குலசேகரர் உள்ளம்.

திருவரங்கத்திலே ஸ்ரீரங்கராஜ தரிசனத்தைக் காட்டிலும் அடியவர்களின் தரிசனமும் அவர்களோடு கலந்து பணி புரிவதும், அவர்களுக்குப் பணிபுரிவதும் குலசேகரர் உள்ளத்தைக் கவர்ந்தன என்று கருதலாம். 'தொண்டர்க்கு எப் பிறப்பிலும் காதல் செய்யும் என் நெஞ்சமே' என்று சொல்லுகிறாரல்லவா?

'அரங்கன் எம்மானுக்கே காதல் செய் தொண்டர்க்கு... காதல் செய்யும் என் நெஞ்சமே' என்று இவர் கூறுவதால், இந்த அரசர், முடிசூடும் அரசு துறந்து அடியார்களின் அடிசூடும் அரசைப் பெரிதும் காதலித்தார் என்று கருதலாம்.

பித்தர் யார்?

இத்தகைய கொள்கையுடையவரைப் 'பித்தர்' என்று தானே உலகம் சொல்லக்கூடும்? இதற்குக் குலசேகரர் கூறும் பதில் இது:

அத்தன் அச்சன் அரங்கனுக்(கு)
அடியார்க ளாகி அவனுக்கே
பித்த ராம்அவர் பித்தர்அல்லர்கள்;
மற்றை யார்முற்றும் பித்தரே!

(அத்தன் - தந்தை. அச்சன் - சுவாமி.)

பக்திப் பைத்தியம் இல்லாதவர்களே பைத்தியக் காரர்கள் என்பது குலசேகரர் கொள்கை. 'பக்தி காரியமான பித்து இல்லாதவர்கள் அடையப் (முற்றும்) பித்தர்.' 'அக்கலக்கம் இல்லாதே தெளிந்திருக்குமவர் ஸநகாதிகளே யாகிலும் (எப்பேர்ப்பட்ட அறிவாளிகளேயானாலும்) அவர்கள் பித்தர்' என்பது வியாக்கியானம்.

உள்ளொளியாகி நின்று வழி காட்டுகிறானாம் இறைவன் இந்தப் பித்தர்களுக்கு. இவர்களையே

Koviloor Digital Library

மெய்யடியார்கள் என்று அரங்கன் ஒப்புக்கொள்ளும்போது பிறர் 'பித்தர்' என்று சொல்லிவிட்டால் என்ன? 'அரங்கனுக்கே பித்தர்' என்பது உண்மைதானே?

இந்தப் பித்தர்களே உலகத்தில் உள்ளவர்களுக்கு வாழ்க்கைப் பெருங்காட்டினிடையே பெருவழி வகுத்துக் காட்டுகிறவர்கள்.

குலசேகரரைப் பிறர் 'பித்தர்' என்றும் 'பேயர்' என்றும் பேசுவதே,

குடைவிளங்கு விறல்தானைக்
கொற்ற ஒள்வாள்
கூடலர் கோன்கொடைக் குலசேகரன்

(குடைவிளங்கு - அரசாட்சிக்கு அறிகுறியாகக் கொற்ற வெண்குடையுடன் விளங்குகிற. விறல்தான்ன - பராக்கிரமம் உள்ள படைகள். கொற்ற ஒள்வாள் - வெற்றியும் ஒளியும் பொருந்திய வாள். கூடலர்கோன் - மதுரையில் உள்ளவர்களுக்குத் தலைவன். கொடைக் குலசேகரன் - கொடையை இயற்கையாக உடைய குலசேகரன்.)

என்று போற்றுவதைக் காட்டிலும் பொருத்தமாகத் தோன்றியது.

'பித்தனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே!' என்று எவ்வளவு குதூகலமாய்ப் பேசுகிறார்!

பேய ரேஎனக்(கு) யாவரும்; யானும்ஓர்
பேய னேஎவர்க் கும்;இது பேசிஎன்!
ஆய னே!அரங் கா!என் றழைக்கின்றேன்,
பேய னாய்ஒழிந் தேன்எம் பிரானுக்கே!

என்று பேசுவதிலும் எவ்வளவு குதூகலம், பாருங்கள்!

இவரைப் 'பித்தர்' என்றும் 'பேயர்' என்றும் காணாத இடத்திலும் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் கூச்சம்

Koviloor Digital Library

இல்லாமல் இவர் காது கேட்க, முகத்திற்கு முன்பே சொல்லத் தொடங்கிவிட்டார்கள். இவரும் அவர்களைப் 'பித்தர்கள்' என்றும், 'பேயர்கள்' என்றும் நினைத்துக்கொண்டிருந்தார்; இப்போது நேரிலும் சொல்லிவிடுகிறார்.

இவர் அகக்கண்ணாடியில் அவர்களும், அவர்கள் அகக்கண்ணாடியில் இவரும் பேயராகவும் பித்தராகவும் காணப்படுவது உண்மைதான் என்பதைக் குலசேகரர் பகிரங்க மாக ஒப்புக்கொண்டுவிட்டார். தம்மை இகழ்ந்தவர்களைக் கூவியழைத்து, 'வாருங்கள், வந்து பாருங்கள் இந்தப் பேயனை! உங்களுக்கு நான் பேயன்தான்; எனக்கும் நீங்கள் அப்படியே. இது குறித்து நமக்குள் கருத்துவேற்றுமை இல்லை' என்று வாய்விட்டு, மனம்விட்டுப் பேசுகிறார்.

இதற்கு முன்பாவது, 'அவர்கள் என்ன நினைப் பார்களோ நாம் பக்தி செய்யும்போது?' என்ற எண்ணம் கொஞ்சமாவது தோன்றியிருக்கலாம். இப்போதுதான் அவர்கள் கருத்து நன்றாகத் தெரிந்துவிட்டதே! மேலும், எம்பிரானுக்குப் பித்தனாகவும் பேயனாகவும் இருப்பதைப் பாக்கியமாக எண்ணிக்கொண்டிருந்த இவர், தாம் அந்த லட்சியத்தை அடைந்துவிட்டதாக அவர்களே ஒப்புக் கொள்வது குறித்துத் தைரியம் அடைகிறார்; குதூகலம் அடைகிறார்.

நன்னெறிப் பித்தர்!

இந்தத் தைரியத்திலே, இந்தக் குதூகலத்திலே,

அத்தனே! அரங்கா!
என்(று)அழைக் கின்றேன்

என்றும்,

ஆயனே! அரங்கா!
என்(று)அழைக் கின்றேன்

என்றும் சொல்லுகிறார்.

Koviloor Digital Library

கொல்லி காவலன்
கூடல் நாயகன்
கோழிக் கோன்குல சேகரன்

(கொல்லிகாவலன் - கொல்லிநகருக்கு அரசன். கூடல் நாயகன் - கூடல் என்ற மதுரைக்கும் தலைவன். கோழிக்கோன் - உறையூருக்கும் தலைவன்.)

என்று போற்றப்பெறும் நாமா சாதாரண அடியாரைப்போல் நடந்துகொள்வது என்ற அந்தச் செருக்கு ஒரு சிறிதும் இல்லை இவருக்கு.

மதியை வஞ்சிக்கும் முக்குறும்பையும் கடந்து விட்டாரல்லவா? இவருக்குக் குலச்செருக்கும் இல்லை, கல்விச் செருக்கும் இல்லை, செல்வச்செருக்கும் இல்லை.

உண்டியே உடையே
உகந்து ஓடும்இம்
மண்ட லத்தொடும் கூடுவ(து)
இல்லையான்!

(உகந்து ஓடும் - விரும்பிக் கண்டவிடமெல்லாம் ஓடித் திரிகிற. இம்மண்டலத்தொடும் - இந்தப் பூமண்டலத்தில் உள்ள உடைப்பிரியர்களுடனும் உணவுப் பிரியர்களுடனும்.)

என்பது இவர் வாக்கு.

தொண்டர்களுக்கும் உண்டியும் உடையும்வேண்டும்; ஆனால் அவர்கள், 'எங்கே சோறு கிடைக்கும்? எங்கே உடை கிடைக்கும்?' என்று அதே தியானமாகப் பறந்து கொண்டிருப் பதில்லை. 'ராமாயணம் எங்கே உபந்நியசிக்கிறார்கள்? பகவானுடைய புகழை எங்கே கேட்கலாம்? பாகவதர்களை எங்கே பார்க்கலாம்?' என்று காதும் கண்ணும் தினவெடுக்க ஓடிக் களித்துப் பேறு பெறுவார்கள்.

தீதில்லாத நன்னெறியை அறிந்துகொண்டு அந்த நெறியில் ஒழுகுவதே தொண்டர்களின் ஆசை. இந்தத் 'தீதில் நன்னெறி'யைத்தான் தங்கள் வாழ்க்கையாலும் உபதேசத்

Koviloor Digital Library

தாலும் திருவரங்கத்திலிருந்து வந்த அடியார்கள் இவருக்குக் காட்டினார்கள். இதைத்தான், 'பரம ஸாத்விக தர்மம்' என்று குலசேகரரும் பற்றி நின்றார்.

இத்தகைய நெறி, 'உண்டியே உடையே உகந்து ஓடும்' லௌகிக நெறியுடன் முரண்டுபடுகிறதே என்று இவரை நிந்திக்கவும் தொடங்கினார்கள். 'அநியாயமாக நம் மன்னர் ஆண்டிகளுடனும் பரதேசிகளுடனும் பைத்தியமாகத் திரிகிறாரே!' என்றும் சொன்னார்கள்.

ஆரம்பத்தில் ரகசியமாகப் பேசிக்கொண்டார்கள். பிறகு பகிரங்கமாகத் தூற்றினார்கள். 'தீதில் நன்னெறியே நீதிநெறியாக இருக்க அவர்கள் வேறுவிதமாகச் சொல்லு கிறார்களே' என்று கருதிக் குலசேகரர்,

தீதில் நன்னெறி
நிற்கஅல் லாதுசெய்
நீதி யாரொடும் கூடுவ(து)
இல்லையான்

என்கிறார்.

அவர்கள் 'கொங்கர்கோன் குலசேகரன் தனிப்பெரும் பித்தன்!' என்று தூற்றுகிறார்கள். அதையே புகழ்மாலையாகச் சூடிக்கொள்ளும் குலசேகரர்,

அங்கை ஆழி அரங்கன் அடியிணை
தங்கு சிந்தைத் தனிப்பெரும் பித்தனாம்
கொங்கர் கோன்குல சேகரன்

என்று தம்மைத் தாமே அறிவித்துக்கொண்டு திருப்தி அடைகிறாராம், பலச்ருதிப்பாட்டிலே.

சூழ்நிலையை மீறிப்போன வாழ்வு

நாளடைவில் இந்தக் கொங்கர்கோன் பதவி பொறுக்க முடியாத உபத்திரவம் ஆகிவிடுகிறது. 'இந்த மண்ணரசு வேண்டேன், வேண்டேன்' என்று கதறுகிறார். 'இந்தச்

Koviloor Digital Library

சுமையை எப்படித் தள்ளுவோம்? எப்போது தள்ளுவோம்?' என்ற கவலை தெளிவாக வெளிப்படுகிறது, திருவேங்கடம் குறித்து இவர் பாடியிருக்கும் பாசுரங்களில்.

தமக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கெல்லாம் ஒரே பரிகார மாக இறைவனைச் சரணமாக அடைந்தார். ராஜகுலத்துச் செல்வத்தின்மீதும் அதிகாரத்தின்மீதும் வெறுப்பு ஏற்பட்டு விட்டதால் இறைவனைச் சரணமாக அடைவது எளிதாயிற்று. இறைவனது கருணையினாலும் அடியார்களின் உபதேசத் தாலும் பகவான்மீதும் பாகவதர்கள் மீதும் அன்பும் ஆதரமும் அளவின்றி வளரப்பெற்றார்.

ஜீவாத்மா, பரமாத்மாவுக்குச் சகல வகையிலும் அடிமைப்பட்டது என்பதை அடியார்கள் வாயிலாகத் தெளிவாகத் தெரிந்துகொண்டிருந்தார். பிற விஷயங்களில் அடிமைப்படுவதுபோல், இந்த ஆண்டான் அடிமைத்திறத்தில் துன்பமில்லை; இது இன்பமயமானது என்பதை உபதேச வாயிலாகவும் அநுபவ வாயிலாகவும் அறிந்திருந்தார்.

ஜீவாத்மாவை எவ்விதத்திலும் வாழ்விக்கும் பொறுப்பும் கடமையும் எல்லாம் வல்ல இறைவனைச் சேர்ந்தவை என்பதையும், ஜீவாத்மாவின் கடமை அவன் அருளையே நம்பி அன்பர் பணி செய்துகொண்டிருப்பதுதான் என்பதையும் நன்கு உணர்ந்திருந்ததால், இந்தப் பெருவழி பிடித்து ஒழுகுவதற்குத் தமது ராஜ்யத்திலும் அரண்மனை யிலும் உள்ள சூழ்நிலை இடம் கொடுப்பதில்லை என்று கண்டுகொண்டார்.

ராம சரிதம் முதலான கதாகாலட்சேபங்களில் ஈடுபட்டிருக்கும்போது தமது சூழ்நிலையை மறக்க முடிந்தது. ராமாவதாரம்போல் கிருஷ்ணாவதாரமும் இவர் உள்ளத்தைக் கவர்ந்தது. ராம சரிதம் கேட்கும்போதே கால வெள்ளத்தை எதிர்த்துப் போய் அந்தக் காலத்தவருள் தாமும் ஒருவராகி விட்டது போன்ற அநுபவம் ஏற்பட்டதல்லவா? கிருஷ்ணாவ

Koviloor Digital Library

தாரமோ ராமவதாரத்துக்கும் பிற்பட்ட காலத்தில் நிகழ்ந்ததால், அந்தக் காலத்தினராகிக் கண்ணனைக் கண்டு களிப்பதும் எளிதெனக் கருதினார்.

ஆனால் ராம சரிதமோ கிருஷ்ண சரிதமோ கேட்கும் போதுதான் அதே காலத்தினராகி அந்த அவதார மூர்த்திகளைத் தரிசிப்பது போன்ற உணர்ச்சி ஏற்படலாயிற்று. காலட்சேபம் முடிந்தபின், அந்தக் காலத்திற்கும் தமது காலத்திற்கும் இடையே உள்ள நெடுந்தூரத்தை நினைத்து நினைத்து வருந்தினார். 'நாமும் அக்காலத்தில் பிறந்தோமில்லையே; அவதார மூர்த்தியாகிய பெருமானை அக்காலத்தவர்கள்போல் அநுபவிக்கப்பெற்றோமில்லையே!' என்று பரிதவித்தார்.

அவதாரகாலம் என்பது மழைக்காலம் போன்றது. அந்த மழைநீரை அந்தக் காலத்தில்தானே அநுபவிக்க முடியும்? எனினும் புத்திமான்கள் குளம் தோண்டி அந்த மழைநீரைத் தேக்கி வைத்துக்கொள்கிறார்கள் அல்லவா?

அவ்விதமாக அவதாரப் பெருக்கைத் தேக்கி வைத்துக் கொண்ட மடுக்களே திருவரங்கம் போன்ற திருப்பதிகள் என்பர். இந்தக் கருத்தைத்தான், 'அவதாரத்திலே தேங்கின மடு அர்ச்சாவதாரம்' என்ற பேரறிஞரின் மணிவாக்கு இனிது வெளிப்படுத்துகின்றது.

விக்கிரக ரூபமாக இறைவன் காட்சி கொடுப்பதை 'அர்ச்சாவதார'க் காட்சி என்று சொல்லுகிறார்கள். பகவானுடைய அவதாரங்களில் தசாவதாரங்கள் என்ற பத்து அவதாரங்களும் முக்கியமானவை. இந்தப் பத்து அவதாரங் களிலும் ராமவதாரமும் கிருஷ்ணாவதாரமும் அதி முக்கிய மானவை. பதினோராவது அவதாரமாக வியாச முனிவரையும் பன்னிரண்டாவது அவதாரமாக அர்ச்சாவதாரத்தையும் குறிப்பிடுவதுண்டு.

ஜீவாத்மாக்களை வாழ்விக்க மேலிருந்து ஈசுவர சக்தி கீழே இறங்கி வருவதுதான் அவதாரம். ஒரு மடுவில் தவறி

Koviloor Digital Library

விழுந்துவிட்ட குழந்தையைக் காப்பாற்றத் தந்தையோ தாயோ சற்றும் ஆலோசிக்காமல் தாமும்கூட அம்மடுவில் விழுவது போன்றதே பகவானின் அவதாரமும்.

மீன், ஆமை, பன்றி முதலான பிராணி நிலைகளுக்கு இறங்கி வருகின்ற அவதார சக்தி, பக்தர்கள் உகந்த வடிவங்களான விக்கிரகங்களிலும் இறங்கி வந்து அமர்ந்திருந்து மக்களுக்கு அருள்புரிகின்றது என்பது இந்து மதத்தின் முக்கியமான கொள்கைகளில் ஒன்று.

அவதாரங்களில் எல்லாம் எக்காலத்திலும் மக்கள் அடைந்து அநுபவிப்பதற்கு உரியதும் எளியதுமாக இருப்பது அர்ச்சாவதாரம் என்ற கொள்கை, ஆழ்வார்களால் வற்புறுத்தப் படுகிறது. இந்தக் கொள்கை குலசேகரருக்கும் உண்டு.

குலசேகரர் உகந்த திருப்பதிகளில் திருவரங்கமே மிகவும் முக்கியமானது. அடுத்தபடியாக இவருள்ளத்தைக் கவர்ந்தது திருவேங்கடம் என்று சொல்லலாம். தில்லைத் திருச்சிற்றம்பலத்திலே தாம் ராமனைக் காண விரும்புவதாகக் குலசேகரர் பாடியிருக்கிறாரல்லவா? - அந்தத் திருப்பதியும் இவர் உகந்த திருப்பதிகளில் ஒன்றே என்பது திண்ணம். வித்துவக்கோடு என்ற திருப்பதியும் இவர் உகந்ததுதான்.

இத்தகைய திருப்பதிகளில் குலசேகரர் விசேஷமான பக்தி அநுபவங்களைப் பெற்றிருக்க வேண்டும். திருவரங்கத்திலே கிடைத்த அநுபவம், எல்லாவற்றுக்கும் சிகரமாக அமைந்திருக்கக் கூடும்.

எனினும் வித்துவக்கோட்டிலே இவர் தமது வாழ்க்கையைப் புரட்சிகரமாக மாற்றிவிட்ட ஆரம்ப அநுபவங்களை அடைந்தார் என்று கூறலாம்.

Koviloor Digital Library

9. 'நாடு துறந்தீர்; உலகம் ஆள்வீர்!'

என்ன அழகான சோலை! பூஞ்செடிகளில் தளிர்களும் இலைகளுமே எவ்வளவு அழகாயிருக்கின்றன! மலர்கள் மலர்ந்து பரிமளிக்கின்றன. ஆனால் அரசரின் உள்ளமோ பனிவிழுந்த தாமரைபோல் வாடியிருக்கிறது.

துயரத்திற்கு மேல் துயரம் அலைமேல் அலைபோல் வந்து கொண்டிருக்கிறது. 'நாளைப் போவோம், நாளைப் போவோம்' என்று ஸ்ரீரங்க யாத்திரையை எத்தனை நாளாகத் தள்ளித் தள்ளி வைக்க நேர்ந்துவிட்டது! இவ்வளவு பக்தராக இருந்தும் இவருக்கும் துயரம் இருக்கமுடியுமா?' என்று நினைக்கிறது உலகம். 'துயரப்படாமல் தன் அடியார்களைக் காக்க முடியாத ஒரு தெய்வத்தை நம்புவதுதான் எதற்காக?' என்று கேட்பவரும் இருக்கத்தானே இருக்கிறார்கள்!

தாயும் குழந்தையும்

குலசேகரர் உள்ளத்தில் எத்தனையோ நினைவுகள்; உள்மனத்தினுள்ளே எத்தனையோ அநுபவங்கள்! இப்பொழுது 'தாயும் குழந்தையும்' என்று ஒரு நிகழ்ச்சி ஒரு குட்டி நாடகக் காட்சிபோல் அகக்கண்முன் தோன்றுகிறது.

இந்தக் குழந்தையைப் பெறுவதற்கு இவள் நோற்ற நோன்புதான் என்ன? முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்து பெற்ற குழந்தை. தான் அநுபவித்த பிரசவ வேதனையையெல்லாம் மறந்து எப்படி இன்புற்றாள் குழந்தை முகம் கண்டதும்!

இந்தக் குழந்தை துஷ்டத்தனம் செய்ததே என்று இப்போது எவ்வளவு கோபம் வந்துவிடுகிறது! 'பாலைக்

Koviloor Digital Library

கொட்டிப் பட்டுச் சேலையை அழுக்காக்கி என்ன பாடு படுத்துகிறது!' என்ற கோபத்திலே, 'இதை அரிந்து போட்டு விட்டால் தொல்லை தீரும்!' என்றுகூடத் தோன்றுகிறது பெற்ற தாய்க்கு. 'என்ன ஹிம்ஸை! தூரப் போ!' என்று குழந்தையைத் தன்னிடம் வரவிடாமல் விலக்கித் தள்ளுகிறாளாம்.

இப்படித் தாய் கோபித்து வெறுத்துத் தள்ளியும் குழந்தை என்ன செய்கிறது? அந்தத் தாயின் காலையே கட்டிக்கொண்டு அழுதுகொண்டிருக்கிறது. அந்த இளங்குழந்தைக்கு வேறு கதி ஏது?

'அந்தக் குழந்தை வேறு யாருமில்லை, அடியேன்தான்!' என்கிறார் குலசேகரர், சோலை சூழ்ந்த கோயிலில் பகவானைத் தரிசிக்கும்போது.

தருதுயரம் தடாயேல்உன்
சரண்அல்லால் சரண்இல்லை.
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ்
வித்துவக்கோட்(டு) அம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய்
அகற்றிடினும் மற்(று) அவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி
அதுவேபோன்(று) இருந்தேனே.

(தருதுயரம் - நீயே எனக்குத் தந்த துயரத்தை. தடாயேல் - நீயே தடுக்காவிட்டாலும். உன் சரண் அல்லால் - உன் திருவடிகளே அன்றி. சரண் இல்லை - எனக்கு வேறு புகல் இல்லை. விரை குழுவும் - வாசனை மிகுந்திருக்கும். மலர்ப் பொழில் சூழ் - பூக்களையுடைய சோலைகளாலே சூழப் பட்ட. வித்துவக் கோட்டு அம்மானே - வித்துவக்கோடு என்ற திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் சுவாமியே. அரிசினத்தால் - அரிந்துவிடக் கருதும் அவ்வளவு பெருங் கோபத்தால். குழவி - குழந்தை.)

Koviloor Digital Library

துயரத்தை இறைவன் தடுத்தாலும் தடுக்காவிட்டாலும், அவன் காலைக் கட்டிக்கொள்வதைத் தவிர அடியார்க்கு வேறு கதி இல்லை என்கிறார். தமக்கு வந்துகொண்டிருக்கும் துன்பங்களெல்லாம் தம்மைத் தங்கமாகச் சோதித்தெடுக்க வைத்திருக்கும் நெருப்பே என்பது குறிப்பு.

'ஈன்ற தாய்' என்று இறைவனைக் குறிப்பிடுவதில் எவ்வளவோ புதைபொருள் காணலாம். 'ஈன்ற தாய் என் கையாலே பெறுகைக்கு நோன்பு நோற்கையும், பத்து மாஸம் சுமக்கையும் ப்ரஸவவேதனைப் படுகையும் என்ற இவை யெல்லாம் உடையவள் என்கை' என்பது வியாக்கியானம். அடியவர்களைப் பெறுவதில் இறைவன், குழந்தை பெறுவதில் தாய் படும்பாடுபடுகிறான் என்பது குறிப்பு.

அடியவர்களின் துயரத்தை இறைவனால்தான் போக்க முடியும், 'ஒரு குருவி பிணைத்த பிணையல் ஒருவரால் அவிழ்க்கப் போகிறதில்லை; ஒரு ஸர்வசக்தி பிணைத்த பிணையை எலியெலும்பனான இவன் அவிழ்க்கவென்றால் முடியுமோ? அவன் தன்னையே (அவனையே) கால்கட்டிப் போக்கும் இத்தனையிறே' என்ற அறிஞர் வாக்கிலே குலசேகரரின் அருள்வாக்கிற்கு ஒரு புதைபொருள் கண்டுகொள்ளலாம்.

காதலியும் காதலனும்

வேறொரு காட்சி மனக்கண்முன் வருகிறது குல சேகரருக்கு. இல்லறம் நடத்துகிறார்கள் காதலனும் காதலியும். அவளுக்கு அவன் மீதுள்ள காதல் தெய்வபக்தி போன்றது. அவனும் அவள்மீது காதல் கொண்டிருப்பவன்தான்.

எனினும் ஒருநாள் அவனுக்குப் பெருங்கோபம் வந்து விடுகிறது. அவள் எவ்வளவோ இனிமையான காரியங்களைச் செய்துகொண்டிருந்தாலும் குற்றம் காணும் மனப்பான்மை யுடன், கண்டார் இகழும்படி அவளைக் கண்டிக்கிறான்

Koviloor Digital Library

இப்போது. அவளோ அவன்மீது தனக்குள்ள காதலையே நினைத்துக் கொண்டு அவன் காலண்டை விழுந்துகிடக்கிறாள்.

'அந்தக் காதலி அடியேன்தான்' என்று விண்ணப்பம் செய்துகொண்டு, குலசேகரர்,

விண்தோய் மதில்புடைசூழ்
வித்துவக்கோட்(டு) அம்மாநீ
கொண்(டு)ஆளாய் ஆகிலும்உன்
குரைகுழலே கூறுவனே!

(விண்தோய் மதில் புடைசூழ் - விண்ணளாவிய மதில்கள் எப்புறமும் சூழப்பெற்ற. வித்துவக் கோட்டு அம்மா - வித்துவக்கோடு என்னுமிடத்தில் எழுந்தருளியிருக்கிற சுவாமியே! நீ கொண்டு ஆளாய் ஆகிலும் - நீ ஆட்கொள்ளாமல் உபேட்சித்தாலும். குரைகழலே - ஒலிக்கின்ற வீரக்கழலை யுடைய உன் திருவடிகளையே.)

என்று உறுதி கூறுகிறார்.

அரசனும் குடிகளும்

அரசன், மாலையும் கழுத்துமாகக் கொலுவிருக்கிறான். 'குடிகளைப் பாதுகாப்பதற்கென்றே தனிமாலை தரித்திருக் கிறான்' என்று நம்புகிறார்கள். ஆனால் அந்த அரசன் தன் கடமையைச் சரியாகச் செய்யவில்லை.

குடிகளோ, 'அவன் துயரங்களைச் செய்தபோதிலும் அந்தச் செங்கோலையே எதிர்பார்த்து வாழ்வோம்' என்ற நம்பிக்கையுடனும் ராஜபக்தியுடனும் இருக்கிறார்கள்.

''அடியேனும், 'கோல்நோக்கி வாழும் குடி' போல் இருக்கிறேன்'' என்கிறார் குலசேகரர் பகவானை நோக்கி.

''என் போன்றவர்களைக் கடாட்சிப்பதற்கென்றே பரமபதத்தை விட்டு வித்துவக்கோட்டில் வந்து தங்கியிருக்கும் நீ தன் கடமையைச் செய்யாத அரசனைப்போல் இருந்து

Koviloor Digital Library

விட்டாலும், நான் எப்போதும் உன் கோல் நோக்கி வாழும் குடி.தான்!'' என்கிறார்.

'வான் நோக்கி வாழும் உலகெலாம்; மன்னவன் - கோல் நோக்கி வாழும் குடி' என்ற குறளின் நினைவு, குலசேகரருக்கு மேலே சொன்ன காட்சியைத் தோற்றுவித்திருக்க வேண்டும்.

மருத்துவனும் நோயாளியும்

மருத்துவன் வருகிறான் நோயாளியிடம். கத்தியைக் கொண்டு அறுக்கிறான்; ஊசியைக் காய்ச்சிச் சூடு போடுகிறான் (அந்தக் காலத்து ரணசிகிச்சை இது). எனினும் நோயாளிக்கு அந்த மருத்துவனிடம் கோபம் இல்லை; வெறுப்பு இல்லை. காதல்தான் உண்டாகிறது.

'மாளாத காதல் அது' என்று அதிசயமாய்ப் பார்க்கிறார் குலசேகரர். ஒரு நோயாளிக்கு மருத்துவனிடம் அவ்வளவு காதல் என்றால், வாழ்க்கைப் பிணிகளுக்கெல்லாம் ஒரு வைத்தியனாகிய பகவானிடம் அடியாருக்கு எவ்வளவு காதல் இருக்க வேண்டும்! அத்தகைய காதலைத் தம் உள்ளத்திலேயே கண்டுகொள்கிறார் குலசேகரனார்.

'வித்துவக்கோட்டு அம்மா! நீ தருகின்ற துயரமெல்லாம் என் வாழ்க்கைப் பிணியைப் போக்கி எனக்குப் பூர்ண ஆரோக்கியம் தரப்போகிற ரண சிகிச்சைதான்!' என்கிறார்:

வாளால் அறுத்துச்
சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ
யாளன்போல், மாயத்தால்
மீளாத் துயர்தரினும்,
வித்துவக்கோட்(டு) அம்மா! நீ
ஆளா உன(து) அருளே
பார்ப்பன் அடியேனே.

(மீளாத்துயர் - நீங்காத துன்பம். ஆளா - ஆளாக.)

Koviloor Digital Library

இறைவன் சோதனையாகத் தருகின்ற துன்பமெல்லாம் மாறுவேடம் பூண்டு வந்திருக்கும் நன்மைதான், இன்பம்தான் என்பது தொண்டர் கொள்கை. எனவே, 'நீ துன்பம் செய்யச் செய்ய அடியேன் நன்றியறிவுடன் மேன்மேலும் அன்பு செய்து வருவேன்!' என்ற பிரதிக்ஞை செய்துகொள்கிறார்.

'மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா!' என்கிறார் வேறொரு ஆழ்வாரும். அன்பர்களுக்கு அன்பனாகிய இறைவன் துயரம் விளைப்பானா? - எனவே அவன் மீளாத்துயர் தரினும் அதையும் ஒரு சிநேக காரியமாகவே மாளாத காதலுடன் பார்க்க வேண்டும் என்கிறார் குலசேகரர்.

அது துயரமாகத் தோன்றுவதே மாயந்தான் என்கிறார். உண்மை என்பது துக்க வடிவிலே அவன் காட்டும் மெய்யன்பு தான். இதை உணர்ந்தவர்களுக்கு இறைவன் வழி காட்டுவான்.

'நீ விளைக்கும் துயரங்களுக்கிடையே ஓர் அன்புப் பெருவழியை எனக்கு வகுத்துக் காட்ட வேண்டும்' என்று பிரார்த்திக்கிறார் குலசேகரர். 'உனது அருளையே எதிர் பார்த்து நிற்கிறேன்' என்கிறார். இந்த அருளையே கண்ணாக இசைத்துக் கொண்டு பார்க்கும்போது, வழி தெரியாமல் இருக்குமா?

கப்பலில் ஒரு காட்சி

இப்போது கடலிலே ஒரு காட்சி தெரிகிறது. ஒரு கப்பல் போய்க்கொண்டிருக்கிறது, அலையெறிகின்ற கடலி னிடையே! மரக்கலத்தினுடைய பாய்மரத்தின்மீது பெரிய தொரு பறவை உட்கார்ந்திருக்கிறது.

அந்தப் பறவை கரைக்கு அருகே மரக்கலம் நின்ற போது அந்தப் பாய்மரத்தின்மீது ஏறிக்கொண்டது. கரையைவிட்டு வெகுதூரம் போய்விடுகிறது மரக்கலம். பறவை எவ்வளவு நேரம் பாய்மரத்தின்மீது உட்கார்ந்திருக்க முடியும்?

Koviloor Digital Library

இடையிடையே பாய்மரத்திலிருந்து பறந்து போகத் தான் போகிறது; ஆனால் மறுபடியும் திரும்பி வந்து பாய் மரத்தின் மீதே உட்கார்ந்துவிடுகிறது.

எந்தத் திசை நோக்கிப் பறந்து பார்த்தாலும் கரை காணப்படவில்லை. மேலே முடிவில்லாத வானம், கீழே கரை காணாத நீர்; களைப்பாற இடமெங்கே? எனவே திரும்பி வந்து, தான் முன்பு இருந்த அந்தப் பாய்மரத்திலேயே தங்கி விடுகிறது. அது பெரியதொரு பறவையானதால் நெடுந்தூரம் பறக்கவும் முடியவில்லை.

'அந்தப் பறவையே நான்!' என்று விண்ணப்பம் செய்துகொள்கிறார் குலசேகரர், தமது வித்துவக் கோட்டு அம்மானிடம்:

எங்குப்போய் உய்கேன், உன்
இணையடியே அடையல் அல்லால்?
எங்கும்போய்க் கரைகாணா(து)
எறிகடல்வாய் மீண்(டு) ஏயும்
வங்கத்தின் கூம்(பு)ஏறும்
மாப்பறவை போன்றேனே!

(உய்கேன் - பிழைத்துப் போவேன். இணையடி - இரண்டு திருவடிகள். எறிகடல்வாய் - அலை எறிகிற கடலினிடையே. மீண்டு ஏயும் - திரும்பி வந்து, தான் முன்பு பொருந்தியிருந்த. வங்கத்தின் - மரக்கலத்தின். கூம்பு - பாய்மரம். மாப்பறவை - பெரிய பறவை.)

இறைவன் என்ற பாய்மரத்தை விட்டு எந்தத் திசையில் பறந்து பார்த்தாலும் கால் பாவ இடம் கிடைக்கவில்லையே, கரை காணவில்லையே என்பது இவரது ஏக்கம். இந்த ஏக்கத்திலேயே, கரை காண்பதற்குப் பாய்மரத்தைத்தான் நம்ப வேண்டும் என்ற நம்பிக்கையும் கிடைத்துவிடுகிறது.

குலசேகரர் காலத்திலே தமிழர்கள் திரைகடல் ஓடித் திரவியம் தேடியதுடன் வெளிநாடுகளில் தங்கள் கலை

Koviloor Digital Library

களையும் பண்பாட்டையும் பரப்பி வந்தனர். கடலிலே அலைகளைக் கிழித்துக்கொண்டு செல்லும் மரக்கலங்களை இவர் கூர்ந்து பார்த்திருக்கிறார் என்பதற்கு, பாய்மரத்து உச்சியிலே தங்கும் பறவையே சான்று தருகிறது!

சூரியனும் செந்தாமரையும்

இவர் காலை வேளையில் மலரும் செந்தாமரையைப் பார்த்துப் பார்த்து அநுபவித்திருக்கிறார். ஆகாசத்திலே தோன்றுகிற சூரியனைக் கண்டுதானே சிரிக்கிறது செந் தாமரை? சேற்றிலிருக்கிறது இந்தப் பூ; சூரியனோ எவ்வளவோ உயரத்தில் வானத்திலே இருக்கிறது. எனினும் என்ன அதிசய உறவு!

'சூரிய வெப்பந்தானே இப்பூவை மலரச் செய்கிறது என்று கருதி நாம் செந்தழலைச் செந்தாமரைக்கு அருகே கொண்டு வந்து வெப்பம் கொடுத்துப் பார்த்தால் தாமரையின் முகம் மலருமா? வாடித்தானே போகும். இதுதான் எனது நிலையும்' என்கிறார் குலசேகரர்.

இந்த விண்ணப்பம் அழகான கவிதையுருவம் பெற்று வருகிறது:

செந்தழலே வந்(து) அழலைச்
செய்திடினும், செங்கமலம்
அந்தரம்சேர் வெங்கதிரோற்(கு)
அல்லால் அலராவால்;
வெந்துயர்வீட் டாவிடினும்
வித்துவக்கோட்(டு) அம்மா!உன்
அந்தமில் சீர்க்(கு) அல்லால்
அகம்குழைய மாட்டேனே!

(அழல் - வெப்பம். அந்தரம் சேர் - ஆகாசத்தில் தோன்றுகிற. வெங்கதிரோற்கு - வெப்பமான கிரணங்களை உடைய சூரியனுக்கு. அலரா - மலரமாட்டா. வெந்துயர் -

Koviloor Digital Library

கடுந்துயரம். வீட்டாவிடினும் - தீர்க்காவிட்டாலும். அந்தமில் - முடிவில்லாத. சீர்க்கு - சிறந்த குணங்களுக்கு. அகம் குழைய - உள்ளம் உருக.)

செந்தாமரைக்குச் சூரிய ஒளி போன்றது அன்பர்களின் உள்ளத் தாமரைக்கு இறைவனது கல்யாண குணாதிசயம். சூரியன் வெப்பத்தைக் கொடுத்தாலும் தாமரை மலருவது சூரிய முகம் கண்டுதான். அப்படியே வெந்துயரைத் தந்த போதிலும் இறைவனது குணாதிசயத்திற்குத்தான் தனது அகம் குழையும் என்கிறார். சந்திரன் குளிர்ச்சியைத் தந்தாலும் தாமரை மலருவதில்லை; அப்படியே பிறர் தயவை எதிர்பார்த்துத் தொண்டருள்ளம் குழைவதில்லை என்பது குறிப்பு. பிறருடைய தட்ப வெப்ப நிலைகளில் எதுவும் தொண்டர்களைப் பாதிப்பதில்லை என்பது உய்த்துணரப் படும்.

பயிரும் மேகமும்

பசுமை தங்கிய பயிர்களையும் இவர் கூர்ந்து பார்த்திருக்கிறார். தம் மக்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருளைத் தருகின்ற பயிர்களைப் பார்க்காமல் இருந்திருக்க முடியுமா? மேகம் மழை பொழியாமல் உபேட்சித்த போதிலும் பயிர்கள், 'கருநிறம் கொண்டு மேகம் எப்போது கிளம்புமோ வானத்திலே?' என்று எதிர்பார்த் திருக்கின்றனவாம்.

இவரும் மழை முகம் காணாது வாடும் பயிர்போல் இருக்கிறார். 'வானம் வறண்டதுபோல் உன் உள்ளம் அருள் பொழியாது வறண்டு போனாலும் என் சித்தம் உன்னையே நோக்கியிருக்கும்!' என்கிறார்.

தமது ஆத்மதாபத்தை வெளியிடுவதற்கு என்ன அருமையான உபமானம்!

Koviloor Digital Library

எத்தனையும் வான்மறந்த
காலத்தும் பைங்கூழ்கள்
மைத்(து) எழுந்த மாமுகிலே
பார்த்திருக்கும்!

- (வான் - வானம், மேகம். பைங்கூழ்கள் - பசுமை தங்கிய பயிர்கள். மைத்து - கருநிறங் கொண்டு. மாமுகிலே - பெரிய மேகங்களே.)

என்ற உபமானத்திலே இவரது தாபத்துடன் அருளுக்காக ஏங்கியிருக்கும் தாகத்தையும் காண்கிறோம்.

தமது ராஜ்யத்திலே நெற்கதிர் நிறைந்த வயல்களையும், காடுகாடாய்ச் செழித்துக் கிடந்த வேறு பயிர் பச்சைகளையும் பார்த்திருக்கிறார். அந்த நினைவு வந்ததும், அந்த வயல்களை யெல்லாம், சோலைகளையெல்லாம் உடம்பாகக்கொண்டு உயிரென உலாவிவரும் நதியின் நினைவும் வருகிறது.

ஆறும் கடலும்

வான் மறந்தாலும் தான் மறவாது பயிர் எதிர்பார்த் திருக்கும் அந்த மழைமுகம் (மைத்தெழுந்த மாமுகில்) பகவானுடைய திருநிறத்தை ஞாபகப்படுத்துகிறது. அந்த மேனியழகு மட்டுமா? அகத்தின் அழகான அருளும் ஞாபகத்திற்கு வருகிறது.

மிக்(கு) இலங்கு முகில்நிறத்தாய்!

(மிக்கு இலங்கு - மிகுதியாய் விளங்குகிற. முகில் - மேகம்.)

என்று வாய்குளிரத் தம் இஷ்டமூர்த்தியை அழைக்கும்போதே மேகத்திலிருந்து நீரைப் பெற்றுவரும் ஆறுகள் போய்ச் சங்கமமாகும் கடலின் ஞாபகம் வருகிறது.

வெள்ளமிட்டு வரும் ஆறுகளெல்லாம் பள்ளமுள்ள இடமெங்கும் பரவி ஓடினாலும் முடிவில் கடலில்தானே

Koviloor Digital Library

சென்று சேர்கின்றன;.வேறு ஓரிடத்திலும் ஆறுகள் புகலிடம் பெறுவதில்லையே! தம் உள்ளமாகிய ஜீவநதி சென்று சேரவேண்டிய கடல், இறைவனது சீர்தான், சிறப்பான குண சௌந்தரியந்தான் என்கிறார் குலசேகரர்.

மேகம் ஆறுகளின் உற்பத்திக்குக் காரணம். ஆறுகள் கடலிலே புகலிடம் பெறுகின்றன. கடல் நீர் ஆவியாகி மேகமாகிறது. இப்படி ஓர் இயற்கை நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. இதை நினைவில் வைத்துக்கொண்டு, இப்போது குலசேகரர் வித்துவக்கோட்டு அம்மானுக்குச் செய்துகொள்ளும் விண்ணப்பத்தைக் கேட்கலாம்:

தொக்(கு)இலங்கி ஆறெல்லாம்
பரந்(து)ஓடித் தொடுகடலே
புக்(கு) அன்றிப் புறம்நிற்க
மாட்டாத; மற்(று) அவைபோல்
மிக்(கு) இலங்கும் முகில்நிறத்தாய்!
வித்துவக்கோட்(டு) அம்மா! உன்
புக்(கு) இலங்கு சீர்அல்லால்
புக்கிலன்காண், புண்ணியனே!

(தொக்கு இலங்கி - வெள்ளம் திரண்டு விளங்கி. தொடுகடலே - ஆழ்ந்த கடலிலே. புக்கு அன்றி - புகுந்து அல்லது. புறம் நிற்க மாட்டாத - ஒதுங்கி நிற்க மாட்டாத. புக்கு இலங்குசீர் அல்லால் - புகுந்து விளங்குகிற உனது கல்யாண குணங்கள் தவிர. புக்கிலன் - மற்றோரிடத்தில் புகுந்து நிற்க மாட்டேன்.)

மேகம் இவருக்குத் திருமாலை நினைவூட்ட, அவனது கல்யாண குணங்களைக் கடல் நினைவூட்ட, இவர் தம்மை ஆறாகப் பாவித்துக்கொள்வது ஊன்றிக் கவனிக்கத்தக்கது. திருமாலின் மேனியழகும் அருளழகும், தாபமும் தாகமும் கொண்டிருக்கும் அடியார்களின் அகக்கண்ணுக்கு மேகம் போலத் தோன்றி, 'எப்போது மழை பெய்யுமோ?' என்று

Koviloor Digital Library

வானம் பார்க்கும் குடியானவனுக்குக் கருமேகம் அளிக்கின்ற ஆறுதலையும் ஆனந்தத்தையும் அளித்து உதவுகின்றன என்பதும், இறைவனது கல்யாண குணங்கள் அடியார்களைத் தம்முள் முழுக்க முழுக்க இழந்துபோகச் செய்கின்றன என்பதும் இப்பாட்டின் புதைபொருளாகும்.

மேகம் கடலுக்கும், கடல் மேகத்திற்கும் காரணமாகும்; அப்படியே இறைவனுடைய ரூபசௌந்தரியமும் குண சௌந்தரியமும் ஒன்றையொன்று தழுவி அமைந்திருக்கின்றன என்பதையும் இப்பாட்டின் உட்பொருளாகக் கருதலாம்.

இத்தகைய சிந்தனைகளுக்கிடையே, அலைகடலில் அமுதம் பிறப்பதுபோலப் பிறந்திருக்கிறது இவரது அமுத வாக்கு. அரச காரியங்களிலே, உலக வியாபாரங்களிலே எவ்வளவு தூரம் அலைந்து திரிந்தாலும் முடிவாகப் பரமகதி பரமன்தான் என்பது இவர் விண்ணப்பத்தின் திரண்ட பொருள்.

'ஆறு போய்ச் சேராவிட்டால் கடலுக்கு என்ன குறைவு? ஆறு சேர்ந்ததால் ஒரு நிறைவும் புலனாவதில்லையே. இதுவே உன்னுடைய நிலைமையாயினும், என்னுடைய நிலைமையோ வேறு; ஓரிடத்திலும் நிற்க முடியாமல் உன்னுடைய கல்யாண குணக்கடலில் ஆழ்ந்து விடுவதுதான், சங்கமிப்பதுதான்' என்கிறார்.

எனினும், 'நான் உன்னை அன்றி இலேன் கண்டாய் - நாரணனே, நீ என்னை அன்றி இலை' என்ற உண்மையையும் இவர் அறியாதவரில்லை. ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் என்ற முந்நீரும் சேர்ந்துதானே கடலாகும்?

இவரை விரும்புகிறது செல்வம்!

கடைசியாக ஒரு விநோத சிந்தனை, ஒரு பெரிய கடல் அலைபோல் இவருள்ளத்திலே வந்து மோதுகிறது. இவர் தமது அரசுரிமைச் செல்வத்தை, 'வேண்டாம், வேண்டாம்' என்று

Koviloor Digital Library

சொல்லச் சொல்ல, அந்தச் செல்வமோ, 'உம்மையே நான் வேண்டுகிறேன்!' என்று சொல்லுகிறதாம். அதுபோலப் பகவான், 'வேண்டாம், வேண்டாம்' என்று தம்மைப் புறக் கணித்தாலும் தமக்கு வேண்டியவன் அவனேதான் என்கிறார்.

முதல்முதல் தாயும் குழந்தையும்போல இறைவனுக்கும் தமக்கும் உள்ள உறவு என்றார். பிறகு காதலனுக்கும் காதலிக்கும் உள்ள உறவை எடுத்துக்காட்டினார். அரசனுக்கும் ராஜபக்தியுள்ள குடிகளுக்கும் உள்ள தொடர்பைக் குறிப் பிட்டார். மருத்துவனுக்கும் நோயாளிக்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டினார். பாய்மரத்திற்கும் அதன்மீது தங்கிய பறவைக்கும் உள்ள தொடர்பையும் எடுத்துரைத்தார். சூரியனுக்கும் செந்தாமரைக்கும் உள்ள உறவையும், மேகத்திற்கும் பயிர் பச்சைகளுக்கும் உள்ள உறவையும் காட்டினார். அப்பால் கடலுக்கும் நதிக்கும் உள்ள உறவைச் சுட்டிக் காட்டினார். கடைசியாகத் தமக்கும் செல்வத்திற்கும் உள்ள தொடர்பையே இறைவனுக்கும் தமக்கும் உள்ள தொடர்பாகக் காட்டுவது அதிசயந்தானே!

'நாங்கள் செல்வத்தை விரும்புகிறோம்' என்பதுதான் உலகத்தில் பெரும்பாலான மக்களின் மனநிலை. ஆனால், 'செல்வமே எங்களை விரும்புகிறது; எங்களைச் சார்ந்து பயன்பட விரும்புகிறது!' என்ற மனநிலையுடன் நடந்து கொள்ளும் சிற்சிலரும் உலகத்தில் இல்லாமல் இல்லை.

பெருமக்கள் பொருளைப் பிரமாதப்படுத்துவதில்லை. பொருள்தான் பெருமக்களைச் சார்ந்து, பெருமைபெற வேண்டும், நல்வழிப்பட வேண்டும். இந்த உண்மையைப் பக்தர் அல்லாதவர்களும் உணர்ந்திருக்கிறார்கள்; பக்தர்கள் மனநிலையோ,

செல்வன் கழல்ஏத்தும்
செல்வம் செல்வமே!

என்பது.

Koviloor Digital Library

'முதல்முதல் இறைவனது பரமபத ராஜ்யத்தை நாடுங்கள். பிறகு எல்லாச் செல்வங்களும் தாமே உங்களை வந்தடையும்; அதாவது, நீங்கள் விரும்பாமலே உங்களைச் சார்ந்து தாம் பயன்பெறுவதற்காக வந்து சேரும்' என்பது கிறிஸ்து பெருமானின் அருள் வாக்கு. பகவானைச் சரணமாக அடைந்தால், அவன் மறுமைப் பெருஞ் செல்வத்துடன் இம்மைச் செல்வத்தையும் தன் அடியார்களுக்கு அருள் கூர்ந்து உதவுவதுண்டு என்பது பக்தி மதத்திற்கே பொதுவான ஒரு கொள்கைதான்.

கவிச்சக்கரவர்த்தியான கம்பனும்,

காமம் யாவையும் தருவதும்
அப்பதம் கடந்தால்
சேம வீடுறச் செய்வதும்,

இறைவனுடைய திருநாமத்தின் மகிமையாகும் என்று பிரகலாதன் வாயிலாகக் கூறியுள்ளான். ஆழ்வார்களுக்கும் இக்கருத்து உடன்பாடுதான்.

இது குலசேகரருக்கு அநுபவ வாயிலாகத் தெரிந்திருக்கக் கூடும். தம் அநுபவத்தை வைத்துக்கொண்டே குலசேகரர் இந்த விண்ணப்பத்தைச் செய்துகொண்டார் என்று ஊகிப்பது தவறாகாது:

நின்னையே தான்வேண்டி,
நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும்
செல்வம்போல், மாயத்தால்
மின்னையே சேர்திகிரி
வித்துவக்கோட்(டு) அம்மானே!
நின்னையே தான்வேண்டி
நிற்பன் அடியேனே.

(நீள் செல்வம் - பெருஞ்செல்வம். மின்னையே சேர் திகிரி - மிக்க ஒளியைக்கொண்டுள்ள சக்கராயுதம்.)

Koviloor Digital Library

தமது 'நீள்செல்வ' மாகிய பேரரசைத் துறந்து வெளியேற விரும்பியதும், அமைச்சர்களும் வேறு அதிகாரிகளும் பிரமுகர்களும், 'நீரே எங்கள் மன்னராக இருக்கவேண்டும்' என்று திரும்பத் திரும்பப் பிரார்த்தித்துக்கொண்டார்கள் எனக் கருதலாம். இவர் சிறிதும் இணங்காதது கண்ட பின்பே இவரைப் 'பித்தர்' என்றும் 'பேயர்' என்றும் தூற்றியிருக்கக் கூடும்.

இப்போது தமது சங்கற்பத்தை முடிவாக வெளியிட்டுக் கொள்கிறார். வித்துவக்கோட்டு அம்மானின் சந்நிதியிலே எத்தனை பேர், தாம் செல்வனாகவேண்டும், அரசனாக வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்! செல்வமோ, 'நீதான் வேண்டும்' என்று என்னை இழுத்துக்கொள்ளப் பார்த்தது. உன் மாயத்தால் நீ என்னை உபேட்சித்தாலும் நானோ உன்னையே அடைய விரும்பி இங்கு வந்து நிற்கிறேன்' என்கிறார்.

'பகவானே! நீ என்னை உபேட்சித்தபோதிலும் எனக்கு வேறு பற்றோ, புகலிடமோ இல்லாததால் நான் உன் திருவடி களையே சரணமாக அடைகிறேன். எனக்கு வழிகாட்டி அருள வேணும்' என்பதுதான் இந்தப் பதிகத்தின் சாரமான கருத்து.

'கொற்றவேல் தானைக் குலசேகரன்'

என்ற, 'பேரும் வேண்டேன், புகழும் வேண்டேன், செல்வமும் வேண்டேன்' என்றவரை இறைவன்,

ஒன்றுமே வேண்டாது
உலகனைத்தும் ஆளுவர்காண்!

என்றவாறு உலகம் உய்யத் தோன்றிய மெய்யன்பர்களின் திருக்கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சங்கற்பம் செய்கிறான்.

'முடிதுறந்தேன், நாடுதுறந்தேன்' என்று வந்தவருக்கு, 'ஆழ்வாரே உலகனைத்தும் ஆள்வீர்!' என்று இறைவன் அருள்சுரந்து அதற்குரிய வழியையும் காட்டுகிறான்.

KOVILOOR ANDAVAR
26733

Koviloor Digital Library

10. பாதை கண்டார்

இயற்கையும் தன்னைச் சிங்காரித்து கொண்டிருக்கிறது. பெண்களும் தங்களைச் சிங்காரித்துக்கொண்டு குதூகலமாக இருக்கிறார்கள். பயிர்கள் செழித்திருக்கின்றன; பழங்கள் பழுத்திருக்கின்றன. செல்வத்தின் அதிதேவதைக்கும் காதலின் தெய்வத்திற்கும் ஒரே மகிழ்ச்சி.

பூஞ்சோலைகளில் வண்டுகள் முரலப் புள்ளினங்கள் பாடுகின்றன. மயில்கள் ஆட மான்கள் மருண்டு விழிக் கின்றன. மண்ணும் விண்ணும் ஒரே உவகைப் பெருக்கில் கலந்துவிட்டது போலக் காண்கின்றன.

குலசேகரர் வழி

குலசேகரரோ களிறு (யானை) ஒழிந்து, தேர் ஒழிந்து, மா (குதிரை) ஒழிந்து, காடு புகுந்த ராமனைப்போல் நாடு துறந்து போகிறார். 'ராமன் அரசு துறந்தானே' என்று கதறிய இருதயம், தான் அரசு துறந்ததைக் குறித்துப் பெருமகிழ்வு எய்துகின்றது.

'கூர் ஆர்ந்த வேல் வலவன் கோழியர்கோன், குடைக் குலசேகரன்' ஒரு பதவியும் இன்றி 'அடியார்களின் அடித்தூள்' என்ற நிலையில் தொண்டிலே தன்னை முற்றும் இழந்துவிட வேண்டும் என்ற சங்கற்பத்துடன் போய்க்கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

தொண்டரடிப்பொடி ஆழ்வார் குறிப்பிடும், 'வாழும் சோம்ப'ருள் ஒருவராகத்தான் வாழ வழி தேடுகிறார் குலசேகரர். ஆனால் குலசேகரர் குலசேகரராகத்தான் வாழப் போகிறார். ஆம்; ஆழ்வார்கள் பன்னிருவரில் குலசேகரர் தமக்கெனக் கண்டுகொண்ட வழி ஒரு தனிச் சிறப்புடைய தாகும்.

Koviloor Digital Library

எடிசன் என்ற விஞ்ஞானி மற்றவர்களைப் போலாவது மற்ற விஞ்ஞானிகளைப் போலாவது வாழ்க்கை நடத்த வில்லை. குறைந்த பட்சம் எட்டுமணி நேரம் உறங்க வேண்டு மென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள் அல்லவா? எடிஸன் நான்கு மணி நேரமே தூங்கினார். இவர் இந்த நாலு மணி நேரத்திற்குள், சிலர் பத்துமணி நேரம் உறங்கியும் பெறாத பயனைப் பெற்றுக்கொண்டார்.

டார்வின் என்ற விஞ்ஞானி அக்காலத்தில் நிலவிய கொள்கைகளை அப்படியே ஒப்புக்கொள்ளாமல் தனிமை நாடிச் சென்று ஆராய்ச்சி செய்வதும், நீண்ட தியான சிந்தனை களில் மூழ்கிக் கிடப்பதுமாகக் காலங் கழித்தார். டார்வின் டார்வினாக வாழ்ந்ததன் விளைவுதான் விஞ்ஞான உலகில் இன்று ஆதிக்கம் செலுத்தும் நவீன பரிணாம வாதக் கொள்கை.

அமெரிக்கப் பாதிரியும் பேச்சாளருமான ஹென்றி வார்டு பீச்சர், சொற்பொழிவாற்றலுக்கு வகுத்துள்ள விதிகளை மீறித் தம் வழியே சென்று அமெரிக்காவின் மிகச் சிறந்த பேச்சாளராகிவிட்டார். ஒரு சமயம் ஒரு பெண்மணி அவரை நோக்கி, 'தாங்கள் மரபை ஒட்டிச் சொற்களை உபயோகிக் காமல் பேசிவிடுகிறீர்களே!' என்று குறை கூறினாள். அவரோ, 'நான் சொற்களுக்கு அடிமை அல்ல, ஆங்கில பாஷைக்கு அடிமை அல்ல; ஆண்டவனுக்கே அடிமை, பாஷைதான் எனக்குப் பணி செய்ய வேண்டும்' என்று பதில் சொல்லி விட்டார்.

பக்தரான குலசேகரரும் தமது வழியே செல்ல விரும்பி, இறைவன் அருளால் அந்த வழியைக் கண்டுபிடிக்கிறார். பெரியோர்களெல்லாம் பிறருக்கும் வழி காட்டுகிறார்கள்; ஆனால் ஒருவர் வழியை அப்படியே மற்றவர் பின்பற்ற வேண்டுவதில்லை; அப்படிப் பின்பற்றுவதும் பொருந்தாது.

சமயத்துறையிலும், 'அவரவர் விதிவழி அடைய நின்றனரே' என்ற நம்மாழ்வார் வாக்கு எவ்வளவு

Koviloor Digital Library

உண்மையானது! 'விதிவழி' என்றால் தாம் தாம் செய்த கருமங்களின் பயனாக இன்பத்தையோ, துன்பத்தையோ அடைவதுபோல், நமக்குரிய பக்தி வழியையும் கண்டு கொள்கிறோம் என்பதல்ல. அவரவர் பக்குவத்திற்கு இசைய இறைவன் காட்டும் வழியைத்தான் அடியார்கள் 'விதிவழி' என்பர்.

குலசேகரருக்கும் மற்ற ஆழ்வார்களைப்போல் இறைவன் வழி காட்டுகிறான். அவன் காட்ட இவரும் அவர்களைப்போல் வழி கண்டுகொள்கிறார். அந்த வழியை இவர் கண்டுகொண்ட ரகசியந்தான் என்ன?

அந்த ரகசியத்தைப் பொதுவாகப் 'பெருமாள் திருமொழி' என்ற இவர் பாசுரங்களில் காணலாம்; சிறப்பாக வித்துவக் கோட்டு அம்மானையே வேண்டி நிற்கும் இந்தப் பதிகத்தில் காணலாம். இப்பாடல்களைப் பாட வேண்டும்; கேட்க வேண்டும்; சிந்திக்க வேண்டும்; வணங்கி வழிபட்டுத் தெளிந்து குலசேகரர் வழி கண்ட ரகசியத்தைக் கண்டுகொள்ள வேண்டும்.

எறும்பு தன் இருப்பிடத்திற்கு எப்படி வழி காண்கிறது? எறும்புகள் கூட்டங் கூட்டமாகச் சாரி சாரியாகப் போகும்; ஒடுக்கமான வழி ஒன்றில் ரசாயன முறையில் ஒரு வகை மாறுதலைச் செய்துகொண்டே போகுமாம். அதனால் அதைச் சரியான வழி என்று அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒவ்வோர் எறும்பும் உணர்ந்துகொள்ள முடிகிறது.

பக்தர் கூட்டம் நமது ஐம்புலன்களுக்கும் அப்பாலுள்ள ஒரு சக்தியால் வழிகாண்கிறது எனலாம். பக்தர்கள் செல்லும் வழியும் ஒடுக்கமானது என்றும், சிலரே அந்த வழியைக் கண்டு கொள்வார்களென்றும் கிறிஸ்துவ வேதம் தெரிவிக்கிறது. பக்தர்கள் தாம் போகும் வழியை, ஒருவகை ரசவாத முறையில் பொன்வேய்ந்த புனித வழியாகச் செய்திருக்கிறார்கள்.

Koviloor Digital Library

எறும்புக்கூட்டம் போன வழியை அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒவ்வோர் எறும்பும் கண்டுகொள்வதுபோல, பக்தர் திருக்கூட்டம் சென்ற வழியை அந்தத் திருக்கூட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் கண்டுகொள்வர்.

குலசேகரர், முதலாழ்வார்களும் திருமழிசையாழ்வாரும் தொண்டரடிப்பொடியாழ்வாரும் திருப்பாணரும் பற்றி ஒழுகிய வழியைத் தெரிந்துகொண்டார். அதை ஒட்டி இவர் தமக்கெனப் புதியதொரு வழியையும் வகுத்துக்கொண்டார். இந்த வழியைத்தான் இவர் பாசுரங்களில் காண்கிறோம்.

எப்படிக் கண்டு பிடித்தார்?

திருவேங்கடத்தின் மகிமையையும் திருவரங்கத்தின் மகிமையையும் தெரிந்துகொண்டதும் அந்த யாத்திரைகளைத் தமது ஜீவயாத்திரைக்கு விசேஷ அறிகுறிகள் என்று தீர்மானித்தார். தம் நாட்டிலே, தம் தலைநகரிலே இருந்துகொண்டு சிங்காசனத்தில் கொற்றவெண்குடை நிழலில் வீற்றிருப்பதும், யானைமேல் பவனி வருவதும், அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் கலந்து ஆலோசிப்பதும், சிற்றரசர் வணங்கக் கப்பம் பெறுவதும், வணங்காதவர்களை அடக்கி ஒடுக்கப் படையெடுத்துச் செல்வதும் ஆகிய காரியங்களையே திருப்பித் திருப்பிச் செய்து கொண்டிருப்பது, செக்குமாடு போல் ஒரே இடத்தில் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருப்பதுதான் என்று தீர்மானித்தார்.

தமது வாழ்க்கை யாத்திரைக்கு ஒரு வழி கண்டுகொள்ள வேண்டும் என்று எண்ணியவருக்குச் செக்கு மாட்டின் நிலை பயனற்றதென்று புலனாகிவிட்டது. திருவரங்கத்திற்குச் செல்ல விரும்பியவர் அவ்வூர் அடியார்களைக் கண்டதும், அந்தத் திருவரங்கப் பெருநகரே தம்மைத் தேடி வந்துவிட்டதுபோன்ற உணர்ச்சியை முதல் முதல் அடைந்தார்.

அந்த அடியார்களோடு பொழுது போக்குவதும், அவர்கள் வாயிலாகக் கதாகாலட்சேபங்கள் கேட்பதும்,

Koviloor Digital Library

அவர்களோடு தம் இஷ்டமூர்த்தியான ராமனை வழிபடுவதும் முதல் முதல் பேரின்பமாகவே இருந்தன. அவர்கள் காட்டிய 'தீதில் நன்னெறி' தமக்கும் வாழ்க்கையில் வழிகாட்டும் என்று நம்பினார்.

ஆனால் இவரது பக்திக்காதல் லௌகிக விஷயங் களிலேயே மூழ்கிப் 'பொருளே பரம்பொருள்' என்று வாழ்க்கை நடத்தியவர்களுக்குத் தலைவேதனையாகிவிட்டது. அவர்கள் செய்த சூழ்ச்சிகளும் விளைத்த இடையூறுகளும், முடிசூடும் அரசைத் துறந்துதான் அடிசூடும் அரசை அடைய முடியும் என்ற முடிவிற்கு இவரைச் செலுத்திவிட்டன.

'திருவரங்கத்திற்கு நாளைப் போவேன், நாளைப் போவேன்' என்று இருந்தவருக்குச் சிங்காதனத்தில் இருப்பது முள்மேல் இருப்பாகவே இருந்தது. எனவே இவர் சுட்ட சட்டியைக் கைகீழே போட்டுவிடுவதுபோல் மணிமுடியைத் தள்ளிவிட்டுப் புறப்பட்டார்.

நோயாளி மருத்துவமனை நாடி வருவதுபோல வித்துவக்கோடு என்ற திருப்பதிக்கு வந்து சேர்ந்தார். தான் பிரிந்திருந்த தாயைக் கண்ட சேய்போல் வித்துவக்கோட்டு அம்மானைக் கண்டு களிப்புற்றார்.

'வித்துவக்கோடு' என்பதற்கு 'வித்வான்கள் கூடிய இடம்' என்று பொருள். குலசேகரர் அந்த வித்வான்களை ஆதரித்த வள்ளலாகத்தானே இருந்திருக்கவேண்டும். எனினும் இப்போது அவர்களுடைய கல்விச் செருக்கோ சாமர்த் தியங்களோ இவருக்குப் பிடிக்கவில்லை. அவர்களுக்குத் தெரியாமலே வித்துவக்கோட்டு அம்மானை ஏகாந்தமாகத் தரிசித்துத் தமது நிலைமையை விண்ணப்பித்துக் கொண்டார் என்று சொல்லவேண்டும்.

இறைவனுக்குத் தம் இதயத்தைத் திறந்து காட்டியதும், 'விளக்கு அறியா இருட்டறையில் விழுந்து கிடந்து அழுது விம்முகின்ற' குழந்தைக்கு விளக்கும் கையுமாகத் தோன்றிய

Koviloor Digital Library

தாய்போலப் பகவான் காட்சியளித்தான். மனச்சோர்வு போய்விட்டது.

'நான் அவன் குழந்தை' என்று நினைத்தவர், 'நான் அவன் காதலி' என்றும் பேசத் தொடங்கினார். வித்துவக் கோட்டின் மலர்ப்பொழிலும் மாமதிலும் சோலையில் சந்தித்த காதலனுடைய நினைவையும், அந்தக் காதலனின் உறுதியான பாதுகாப்பில் நாம் இருக்கிறோம் என்ற உணர்ச்சியையும் உண்டாக்கின.

அவன் தம்மை ஒருபோதும் தள்ளிவிடமாட்டான், இகழமாட்டான், தன்னைத் துன்பப்படுத்தமாட்டான் என்ற நம்பிக்கை ஒரு புறம்; அப்படி அவன் அகற்றிவிட்டாலும், பிறர் சிரிக்க வைத்தாலும், மீளாத் துயர் தந்தாலுங்கூட அவன் தானே கதி நமக்கு என்ற நம்பிக்கை ஒருபுறம்.

இத்தகைய மகாவிசுவாசம் ஆட்கொண்டதும் இவர் ஒரு புது மனிதராகிவிட்டார். பழைய துயரமெல்லாம் இன்பமாக மாறிவிடுகிறது. 'நம்பிய பாய்மரம் பழுதே அல்ல' என்ற திடநம்பிக்கை தம் புது வாழ்க்கைக்கு ஓர் இன்றியமையாத அடிப்படையாக அமைவதைக் காண்கிறார்.

தம்மீது உட்கார்ந்த அந்தப் பறவையைத் தாங்கும் பாய்மரம்போல் அவன் தம்மைத் தாங்கிக்கொண்டிருக்கிறான்; குழந்தை படுக்கும் தொட்டிலின் கீழே தானும் படுத்துக் கொள்ளும் தாய்போல் இருந்து தம்மைப் பாதுகாத்து வந்திருக்கிறான் என்ற உணர்ச்சி ஏற்பட்டதும், தாம் தமக்குரிய வழியே செல்லும்போது அவன் பாதுகாப்பான் என்ற நிச்சய புத்தி ஏற்பட்டுவிடுகிறது.

அவன் இப்படி அண்மையிலிருந்து தாங்கிக் கொள்ளாமல் எங்கேயோ தூரத்தில் இருந்துகொண்டு வெப்பத்தைக் கொடுத்தபோதிலும், தம்முடைய அகமும் முகமும் அவனைக் கண்டுதான் மலர்ச்சி பெறும்; அவன் எங்கே இருந்தாலும், தூரத்தில் இருந்தாலும் சமீபத்தில்

Koviloor Digital Library

இருந்தாலும், வழிகாட்டுவான் என்ற அசையாத நம்பிக்கை ஏற்பட்டுவிடுகிறது.

மழைமுகம் நோக்கும் பயிர்போல் அவன் கருணையையே உள்ளம் நோக்கியிருந்தது என்பதையும், அந்தக் குணசௌந்தரியக் கடலிலே முங்கி முழுகும்போதுதான் துன்பம் தொடராது இன்பம் கிடைக்கும் என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டபின், 'திருமாலே!'நின் அடியை வந்திப்பார் காண்பர் வழி' என்ற பொய்கையார் வாக்கின் உண்மையும் நன்கு புலனாகிவிடுகிறது.

வித்துவக்கோட்டு அம்மானின் சந்நிதியிலே ஓர் அதிசய மாறுதல் தமக்கு ஏற்பட்டிருப்பதை இவர் நன்கு உணர்ந்து கொண்டார். அந்த மாறுதல் திடீரென்று இந்தச் சந்நிதியிலேயே ஏற்பட்டதுபோலத் தோன்றியபோதிலும் அது படிப்படியாக இவர் அறிந்தும் அறியாமலும் வளர்ந்து வந்திருப்பதுதான். இந்த மாறுதலின் விளைவாகத்தான் இவர் தமக்குரிய பாதையைக் கண்டுகொண்டார்.

சிறப்பியல்புகள்

பொய்கையாழ்வார் கண்டுகொண்ட வழியை ஞான பக்தி என்று குறிப்பிடலாம். தமது ஞானபக்தியால் அவர் 'ஓர் உத்தமன் உளன்; அவன் என்றும் உளன்; எங்கும் உளன்; விசேஷமாக உள்ளத்திலே உளன்' என்று கண்டுபிடித்தார்.

பூதத்தாழ்வாரும் ஞானபக்தரே. எனினும் இவரது ஞானபக்தியில் ஞானத்தைக் காட்டிலும் பக்தி அல்லது அன்பு அதிக அளவில் காணப்பட்டது. பொய்கையார் இறைவனைக் காண ஏற்றிவைத்த மொழி விளக்கைப்போல் பூதத்தார் ஏற்றிவைத்த மொழி விளக்கையும் 'ஞானச்சுடர் விளக்கு' என்று கூறலாம். எனினும் இந்த ஞானச்சுடர் விளக்கு ஸாராம்சத்தில் அன்புச் சுடர் விளக்கேதான்.

பேயாழ்வாரின் மொழிவிளக்கை வைராக்கியச் சுடர் விளக்கு என்று கூறுவது பொருந்தும். பொய்கையாரின்

Koviloor Digital Library

வழியையும், பூதத்தாரின் வழியையும் தெரிந்துகொண்டு இவர் தமக்கென வகுத்துக்கொண்ட வழியில் எப்படியாவது உள்ளுருகி மெய்ம்மை காண வேண்டும் என்ற வைராக்கியத்தைக் காணலாம்.

பொய்கையாரின் சீடரான திருமழிசையார் தமக்கென வகுத்துக்கொண்ட வழியிலே மறந்தும் புறந்தொழாத வைராக்கியத்தோடு,

நான்உன்னை அன்றி
இலேன்கண்டாய், நாரணனே;
நீஎன்னை அன்றிஇலை

என்ற ஞான வைராக்கியத்தையும் காண்கிறோம்.

திருப்பாணரின் வழியிலே இறைவன், 'அமலன், விமலன், நிமலன், நிர்மலன், நீதிவானவன்' என்ற திருப் பெயர்களுக்கு உரியவனாகித் தன்னைச் சரணமாக அடைந்தவர் களைத் தூய்மையாக்கும் பெருநெருப்பாக இருக்கிறான் என்ற உண்மையும், சுத்தமாயிருப்பது என்பது, 'ஒருவன் தான் சுத்தனாயிருப்பதுடன் பிறரையும் சுத்தமாக்குவதுதான்' என்ற உண்மையும் புலனாகின்றன.

தொண்டரடிப்பொடியாழ்வாரின் வ்ழியிலே சாதி, செல்வம், கல்வி என்ற முக்குறும்பையும் கடந்த தொண்டக் குலமே ராஜகுலம் என்ற உண்மையும், தொண்டன் தொண்டிலும் முனைந்து நிற்காமல் தொண்டர்களின் பாததூளாக மறைந்து நின்று தொண்டாற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்ற உண்மையும் புலனாகின்றன.

இவற்றையெல்லாம் அறிந்துகொண்ட குலசேகரர் தாம் தமக்கெனக் கண்டுபிடித்த புதிய வழியிலே எவ்வளவு அழகான பக்தியநுபவங்களை அநுபவிக்கிறார், புலன்களுக்கு எட்டாத அதிசய அழகுகளையும் உண்மைகளையும் காண்கிறார்!

Koviloor Digital Library

அழகிலே தெய்வ உண்மை காண்பதுபோல் சோகத்திலும் காண்கிறார். சமய உண்மை யுணர்வின் இதயத்தையே கண்டுபிடித்து, அதையே தமது தொண்டுகளுக்கும் பக்திக்கும் உயிர்நிலையாக்கிக் கொள்கிறார்.

எல்லையற்ற அன்பு மயமான மகாசக்தியை எவ்வளவு பணிவுடன் நோக்குகிறார்! சிறியதிலும் பெரியதிலும் சரிநிகர் சமானமாக அந்த மகாசக்தியைக் காண்கிறார். அறிவின் சிகரத்தையும் உணர்ச்சியின் பேராழத்தையும் குலசேகரர் வாக்கிலே காண்கிறோம்!

இவர் கண்ட பாதை தமது பக்திக்கும் பகுத்தறிவிற்கும் ஒருங்கே பொருத்தமானதுதான்; இந்த நவீன விஞ்ஞான யுகத்திற்கும் பொருந்துவதுதான்.

நாம் குலசேகரர் பாதையை அப்படியே பின்பற்ற முடியாது. அப்படியே பின்பற்றவேண்டியதும் இல்லை. நமக்கென்று ஒரு வழி வகுத்துக்கொள்வதற்குக் குலசேகரரையும் ஒரு வழிகாட்டியாகக் கொள்ளலாம்.

குலசேகரரின் பாதையைக் காட்டும் பாசுரங்கள் இன்றைய கலைஞர்களுக்கும் ஒரு நல்விருந்து; அநுபூதிக் கலையில் சிரத்தை உள்ளவர்களுக்கோ ஒரு பொக்கிஷம்.

Koviloor Digital Library

11. திருமலை காட்டிய வழி

நம்பிக்கையை உயர்த்திப் பாரமார்த்திக எண்ணங் களை எழுப்பி வாழ்க்கைஸ்ய அழகு செய்து வளமுறச் செய்யவே பெரிய பெரிய கோயில்களும் கோபுரங்களும் கட்டப்பெற்றிருக்கின்றன. அழகான தலங்களிலும் காடு களிலும் மலைகளிலும் இயற்கையின் மகோன்னத மாட்சி கண்டு அங்கே தெய்வ மாட்சியையும். சிறப்பாகத் தரிசித் தார்கள் நம் முன்னோர்கள்.

மலைகளும் திருமலையும்

மலைச்சிகரங்கள் எத்தனை ஆயிரம் ஆண்டுகளாகக் கம்பிரமாய் நிமிர்ந்து நிற்கின்றன! உலகத்திலே எத்தனையோ கோடீசுவரர்கள், சக்கரவர்த்திகள், சர்வாதிகாரிகள், ராவணேசுவரர்கள் ராட்சஸ மாட்சியுடன் பேயாட்டம் ஆடினார்கள்; போராட்டம் ஆடினார்கள்; இருந்த இடமும் தெரியாமல் மறைந்து போனார்கள், கால வெள்ளத்தின் அலைகளிலும் சுழிகளிலும்!

ஆனால் மலைகள் அசையாமல் தவம் செய்துகொண்டே கோபுரம் தாழ்வதையும், குப்பைமேடு உயர்வதையும், முடிகள் மண்மேல் புரளுவதையும் பார்த்துக் கொண்டிருக் கின்றன! மனிதனுடைய உயர்ந்த லட்சியத்திற்கு அறிகுறியாக நின்று அவனுடைய பயபக்தியைத் தூண்டுகின்றன! மலைபோல் நிலை கலங்காது நின்று, எந்தவிதமான கவலையும் இல்லாமல் இடையூறுகளை எதிர்த்துப் போராடி லட்சியத்தை அடைய வேண்டுமென்பது மலைகள் மனிதனுக்குக் கற்பிக்கும் மகத்தான பாடம்.

Koviloor Digital Library

இத்தகைய மலைகளையும் மலைசார்ந்த இடங்களையும் முருகக் கடவுளின் விசேஷ ஸ்தலங்களாக்கினார்கள் தமிழர்கள். 'இன்பக் குமரனுடைய தந்தையார் விரும்பி வசிக்கும் குன்று' என்று ஒரு குன்றைக் குறிப்பிடுகிறார் நக்கீரதேவர். 'மனக் கவலை தீர்ப்பான் மலை' என்கிறார். விசேஷமாக மலைகளிலும் மலைச்சிகரங்களிலும் இருந்து ஈசுவரன் மனக்கவலை தீர்க்கிறான் என்பது கருத்து.

திருமாலும் திருப்பதி முதலான மலைகளிலும் காடுகளிலும் வாசம் செய்துகொண்டு நமது மனக்கவலைகளையும் நோய்களையும் தீர்க்கிறார் என்பர். கேட்ட வரம் அளிக்கும் தெய்வங்களும், அவற்றின் கீர்த்தியும் நாடு நகரங்களைவிட்டுப் போய்விட்டாலுங்கூட, அவை மலைகளையும் காடுகளையும் விட்டுப் போகவில்லையென்பதும், திருத்தணி, காளஹஸ்தி, திருப்பதி போன்ற தலங்களில் இன்றும் தங்கி வாம் தருகின்றன என்பதும் இந்துக்களின் நம்பிக்கை.

தமிழின் மிகப் பழைய நூல் என்று கருதப்படும் தொல்காப்பியம், முருகக் கடவுளை வழிபட்டவர்கள் மலைவாசிகள் என்று குறிப்பிடுவதோடு, விஷ்ணுவை வழிபட்டவர்கள் காடுகளிலும் காடு சார்ந்த இடங்களிலும் உள்ளவர்கள் என்றும் குறிப்பிடுகிறது. எனவே, விஷ்ணு கோவில்கள் ஆதியில் காட்டுப்பக்கங்களிலே அமைந்திருந்தன என்று கருதலாம்.

அப்படி அமைந்திருந்த புராதனமான தலங்களில் திருப்பதி, திருமாலிருஞ்சோலை, ஸ்ரீரங்கம் ஆகிய மூன்று தலங்களும் முக்கியமானவை. இவற்றுள் திருப்பதியும் திருமாலிருஞ்சோலை என்ற அழகர்மலையும் மலைக் காடுகள்; ஸ்ரீரங்கம் காவேரிக்கிடையே ஓர் அற்புதமான பூஞ்சோலை.

ஸ்ரீரங்கத்தில் சயனத்திருக்கோலமாயிருக்கும் திருமாலே திருப்பதியில் நின்ற திருக்கோலமாகக் காட்சி தருகிறாரென்று

Koviloor Digital Library

சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. முதலாழ்வார்களின் காலத்திற்கும் முற்பட்டது சிலப்பதிகார காலம்.

ஆழ்வார்களின் காலத்திற்கு முன்பும் திருமலை, திருவரங்கத்தைப்போல் பாகவத தர்மத்தின் வளர்ப்புப் பண்ணையாக இருந்தது. முதலாழ்வார்கள் காலத்திலே திருவரங்கத்தைக் காட்டிலும் திருமலை பிரசித்தமாக இருந்தது என்றுகூட ஊகிக்கலாம்.

குலசேகரருக்குத் திருவரங்கத்தின்மீது அளவிறந்த அதிசய அன்பு ஏற்பட்டதுபோல் திருமலைமீதும் ஏற்பட்டு விட்டது. இவர் திருமலையைப் பார்த்திருக்கிறார். அந்தக் காட்சிகளின் தெய்விக செளந்தரியங்களை அநுபவித்து, அப்பெருமானையும் தரிசித்திருக்கிறார் என்பதில் ஐய மில்லை.

இயற்கையின் தெய்விக அழகு

திருமலையில் நித்தியவாசம் செய்துவிடலாமே என்ற ஆசைகூட இவருக்கு ஏற்பட்டது. இங்குள்ள 'கோனேரி' என்ற சுவாமி புஷ்கரிணியின் அழகிலும் ஈடுபட்டு,

> கோனேரி வாழும்
> குருகாய்ப் பிறப்பேனே!

(குருகு - நாரை)

என்று பாடுகிறார்.

திருமலையில் சந்நிதிக்கு அருகிலுள்ள முக்கியமான தீர்த்தமாகிய இக்கோனேரி, குலசேகரர் காலத்தில் இயற்கை யழகுகளுக்கிடையே அமைந்த ஒரு வசீகரமான நீர்நிலையாக இருந்திருக்கவேண்டும். இங்கே குலசேகரரின் பக்திக் கண்கள் தெய்விக செளந்தரியத்தை அநுபவித்திருக்க வேண்டும்.

'நாரையாகப் பிறப்பேன்!' என்றவர், 'ஒரு மீனாகப் பிறக்கும் பாக்கியம் கிடைத்தாலும் போதும்' என்கிறார்.

Koviloor Digital Library

கோனேரியில்தான் பிறக்கவேண்டும் என்பதில்லை; திரு வேங்கடமலையில் ஏதாவது ஒரு சுனையில் மீனாய்ப் பிறந்தாலும் போதும் என்கிறார்.

நாரைக்கு இறகு இருப்பதால் திருமலையை விட்டு வேறு இடத்திற்குப் பறந்து போகவும் கூடுமே! எனவே,

தேனார் பூஞ்சோலைத்
திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும்
விதிஉடையேன் ஆவேனே!

(தேன் ஆர் பூஞ்சோலை - தேன் மிக்க மலர்கள் உள்ள சோலைகள். திருவேங்கடச் சுனையில் - திருவேங்கட மலையிலிருக்கும் சுனைகளிலே.)

ராஜபோகம் வேண்டாம், தேவபோகம் வேண்டாம்; நாரையாகவோ, அதற்கு இரையாகும் மீனாகவோ இந்த மலையிலே பிறவி எடுத்தால் போதும் என்று சொல்லு கிறாரென்றால், திருமலைமீது இவருக்குள்ள பக்திக் காதலை என்னென்பது! ரஸிகத்தன்மையைத்தான் என்னென்பது!

கலாரஸிகர் ஒருவர், 'எனக்கு ராஜபோகமும் தேவையில்லை; கற்பகக் கா நிழலில் இருந்து அநுபவிக்கும் தேவபோகமும் தேவையில்லை; ராமனது வீரத் திருக் கதையைக் கம்பன் பாடியிருக்கிறானே, அந்தக் கவியமுதமே போதும்' என்ற கருத்தமையப் பாடியிருக்கிறார். பக்த ரஸிகரான குலசேகரரோ,

ஆனாத செல்வத்(து)
அரம்பையர்கள் தற்சூழ
வான்ஆளும் செல்வமும்
மண்அரசும் யான்வேண்டேன்;
தேனார் பூஞ்சோலைத்
திருவேங் கடச்சுனையில்

Koviloor Digital Library

மீனாய்ப் பிறக்கும்
விதிஉடையேன் ஆவேனே!

(ஆனாத - அழியாத, தற்சூழ - தன்சூழ; தன்னைச் சூழ்ந்து நிற்க.)

என்று பாடுகிறார்.

'ஆனாத செல்வம்' என்பதற்கு யௌவன சம்பத்து என்றும் பொருள் கூறலாம். தெய்வரம்பை முதலானவர்களின் யௌவன சம்பத்தைக் காட்டிலும், அத்தகைய மேலுலகம் ஆளும் ஆட்சியைக் காட்டிலும் திருமலைவாசம் இனிமை யான தென்று கருதுகிறவர் திருமலை யெம்பெருமானுக்கு அந்தரங்க கைங்கரியம் செய்யப்பெறுவதே பெரும்பேறு, பெருஞ்செல்வம் என்கிறார்.

திருமலையிலே அக்காலத்திலும் பெருமானைத் தரிசிப் பதற்குக் கூட்டம் கூடியது என்று இவரது வாக்கிலிருந்தே தெரியவருகிறது. மிகுதியாகக் கூடியுள்ள அக்கூட்டத்தின் நடுவிலே இந்திரன், பிரமன் முதலான தேவர்களும் சிக்கி நெருக் குண்டு உள்ளே போக முடியாமல் தடுமாறித் தத்தளிக் கிறார்கள்.

அந்தக் கோயில் வாசலில் குலசேகரர், 'கூர்வேல் குலசேகரன்' என்று தம்மை அறிவித்துக்கொண்டு உள்ளே புக விரும்பவில்லை; பகவானுடைய அந்தரங்க கிங்கரர்களில் ஒருவனாகிச் செல்ல ஆசைப்படுகிறார்.

கோவிலில் மட்டுமா இறையழகு காண்கிறார்? 'செல்வம் மல்கு செண்பகம்' என்று சம்பந்தர் பாடியிருக்கும் செண்பக மரத்தின் அழகுதான் கொஞ்சமோ? அந்தச் செண்பக மரங்களில் ஒன்றாக நிற்கும் பாக்கியம் கிடைத்தாலும் போதுமே என்கிறார். அதுவே தாம் விரும்பும் செல்வம் - அரம்பையருலகின் அழியாத செல்வமல்ல என்கிறார்.

Koviloor Digital Library

செண்பகமாய் நின்றால் திருவடிகளை அலங்கரிக்கும் புஷ்ப கைங்கரியத்திற்குப் பயன்பட்டுப் பேறு பெறவும் கூடுமே!

பண்பகரும் வண்டினங்கள்
பண்பாடும் வேங்கடத்துச்
செண்பக மாய்நிற்கும்
திருஉடையேன் ஆவேனே!

(பண்பகரும் - இசையைப் பேசுகிற. வண்டினங்கள் - வண்டுகளின் கூட்டங்கள்.)

திருவடிகளில் பூவாக விழுந்து அவற்றை அந்த 'மலர்க்கண்க'ளால் கண்டு அநுபவிக்கலாமே!

செண்பகமரமாய் நிற்க விரும்புகிறவர், 'இம்மலையில் ஒருபுதராக நின்றாலும் போதுமே!' என்கிறார். சண்பக மலருக்கு நல்ல மணம் உண்டு என்று பாராட்டுகிறார்கள்; அந்தப் பாராட்டும் வேண்டாம் என்பதற்காக ஒரு புதராய் இருந்தாலும் போதும் என்பர்.

ஆடம்பரமாக அரசுபுரியும் வைபவம் ஒன்றும் வேண்டாம்; திருவேங்கடம் போகவேண்டும்; கூடுமானால் அங்கேயே தங்கிவிடுவோம் என்ற மனநிலையைத்தான் எவ்வளவு அழுத்தமாகப் பிரதிபலிக்கிறது இந்தப் பாடல்:

கம்ப மதயானைக்
கழுத்தகத்தின் மேல்இருந்து
இன்(பு)அமரும் செல்வமும்
இவ்அரசும் யான்வேண்டேன்;
எம்பெருமான் ஈசன்
எழில்வேங் கடமலைமேல்
தம்பகமாய் நிற்கும்
தவம்உடையேன் ஆவேனே!

(கம்ப மதயானை - நடுக்கத்தை விளைவிக்கும்படி மதங்கொண்ட யானை; கம்பத்திலே கட்டப்படுகிறயானை.

Koviloor Digital Library

கழுந்து அகத்தின்மேல் - கழுத்தின்மீது. இன்பு அமரும் - இன்பங்களைப் பொருந்தி அநுபவிக்கும்படியான. எழில் வேங்கட மலைமேல் - அழகிய திருமலையிலே. தம்பகம் - (இங்கே) புதர்.)

திருமலையில் புதராக இருந்தாலும் போதுமே என்று எண்ணியவர் சற்று ஆலோசித்தபின், தீய்ந்து மறைந்து விடக்கூடிய புதராகத் தோன்றுவதைக் காட்டிலும் திருமலையின் இன்றியமையாத ஒரு பகுதியாக இருக்க ஆசைப்படுகிறார். 'இம்மலையில் ஓர் அழகிய சிகரமாக அமைந்தேனில்லையே!' என்கிறார்.

திருமலையின் இயற்கை அழகு மாட்சிகளில் மூழ்கிக் கிடந்த உள்ளம் இது என்று ஊகிக்கலாம். 'பொற்குவடாம் அருந்தவத்தன் ஆவேனே!' - என்ன அதிசய சிந்தனை!

அருந்தவம் புரிவோர் அசையாமல் மலையோடு மலையாய்ச் சேர்ந்திருப்பதுபோல் நிர்விகல்ப சமாதி நிலையில் தோற்றம் அளிப்பதும் உண்டு. அத்தகைய கோர மான தவங்களில் குலசேகரருக்கு நம்பிக்கை கிடையாது. எனினும், 'இத்திருமலையின் சிகரத்தோடு சிகரமாய் அமைவ தற்காகவாவது அந்த அருந்தவமும் செய்யக்கடவேன்!' என்பர்.

'திருமலையில் ஒரு சிகரமாக அமைந்துவிட்டால் என்ன?' என்று கனாக்கண்டவர், ஒரு காட்டாற்றைக் கண்ணுற்று, 'நானும் இப்படி இம்மலையில் ஒரு கானாறாகப் பெருகிப் பாய ஆசைப்படுகிறேன்' என்கிறார். மனோபாவம் இப்போது காட்டாறுபோல் கட்டுக்கடங்காது பாய்ந்து செல்லுகிறது.

இம் மனோபாவத்திலிருந்து பிறக்கும் பாட்டு, இந்தச் சிந்தனைவெள்ளதின் ஒரு சிற்றலை, இது.

வானாளும் மாமதிபோல்
வெண்குடைக்கீழ் மன்னவர்தம்

Koviloor Digital Library

கோனாகி வீற்றிருந்து
கொண்டாடும் செல்(வு) அறியேன்;
தேனார்பூஞ்சோலைத்
திருவேங் கடமலைமேல்
கானாறாய்ப் பாயும்
கருத்துடையேன் ஆவேனே!

(மாமதி - பூர்ணசந்திரன். மன்னவர் தம் கோனாகி - ராஜாதி ராஜனாகி. செல்வு - செல்வம்.)

பாதையாகவும் படியாகவும்

ஜீவ யாத்திரைக்கு ஒரு நல்ல வழி காணவேணுமென்று ஆசைப்படுகிறவர் இப்போது தாமே இந்த மலைமேல் ஒரு வழியாகக் கிடக்க விரும்புகிறார்! அப்படியானால் அந்த வழியாகத் திருவேங்கடமுடையானைச் சேவிக்க வருகிற பக்தர்களின் பாததூளிபடுமே!

தாம் வழி காண முயலும்போது தாமே பிறருக்கு வழியாகக் கிடந்தாலும் போதும் என்ற நினைவு வருகிறது. 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்!' என்ற மனநிலைதான்.

வெறியார் தண்சோலைத்
திருவேங் கடமலைமேல்
நெறியாய்க் கிடக்கும்
நிலையுடையேன் ஆவேனே!

(வெறிஆர் தண்சோலை - வாசனை மிகுந்த குளிர்ந்த சோலைகள். நெறி - வழி.)

'பாதையாய்க் கிடப்பேன்' என்றவர், அடியார்கள் மிதித்து ஏறிக் கோயிலுள் சென்று பகவானைத் தரிசிக்கும்படி இந்தக் கோயிலில் வாசற்படியாகக் கிடக்கவும் ஆசைப் படுகிறார்.

Koviloor Digital Library

நெடியானே! வேங்கடவா!
நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும்
அரம்பையரும் கிடந்(து)இயங்கும்
படியாய்க் கிடந்துஉன்
பவளவாய் காண்பேனே!

(நெடியானே - பெரியோனே. அரம்பையரும் - ரம்பை முதலான தெய்வப்பெண்களும். கிடந்து இயங்கும் - இடைவிடாது சஞ்சரிக்கப்பெற்ற.)

என்ற வாக்கைக் கருத்தூன்றிப் பாருங்கள்.

அடியார் மட்டும் அல்ல, பிறரும் நம்மை மிதித்து ஏறிப் பேறு பெறவேண்டும் என்கிறார். எல்லாரும் இடை விடாது மிதித்துச் செல்லும்படி வாசற்படியாகக் கிடந்து இறைவனது திருவாயைக் காண விரும்புகிறார்.

வழியாகக் கிடந்தாலும் திருமலைக்குப் போகும் வழிகளில் ஒன்றாகத்தானே கிடக்க முடியும்? கோயிலின் வாசற்படியாகக் கிடந்தால் எல்லாருக்கும் பயன்படுவது நிச்சயமல்லவா?

கோயிலுக்குள் வாசற்படியாகக் கிடந்தால் இறைவன் கண்முகப்பிலே இருந்து எல்லாருக்கும் பணிபுரிந்து பேறு பெறலாமல்லவா? பெருமாள் கோயிலின் உள்வாசற்படியைக் குலசேகரப்படி என்று கூறுவது உண்டு.

இப்படிப் பணிபுரிந்து கிடக்கும்போது, அடியார்களின் யோக க்ஷேமத்தை வினவத் துடித்துக்கொண்டிருக்கும் பகவானது அதரங்கள், 'நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? க்ஷேமமாயிருக்கிறாயா?' என்று இவரையும் விசாரிக்கக்கூடும் என்ற குறிப்பை,

'பவளவாய் காண்பேனே'

என்ற வாக்கில் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

Koviloor Digital Library

படியாய்க் கிடந்து முகமண்டல சேவையை அநுபவிக்க லாம் என்று சொன்னவர் கடைசியாகத் தாமாக ஒன்றைக் குறிப்பிட்டு வேண்டிக்கொள்ள விரும்பாமல், எம்பெருமானே தன் இஷ்டப்படி எந்த நிலையில் தம்மை வைத்தாலும் சரி என்ற குறிப்புடன்,

செம்பவள வாயான்
திருவேங் கடம்என்னும்
எம்பெருமான் பொன்மலைமேல்
ஏதேனும் ஆவேனே!

என்கிறார். நமது இதம் நமக்குத் தெரிவதைக் காட்டிலும் தந்தைக்குத் தானே தெரிந்திருக்கும்?

இவரது பொன்னுள்ளம் திருமலையைப் பொன்மலை யாகக் கண்டு பூரித்துப் போகிறது. பேயாழ்வார் மனோபாவம் திருமகளின் பொன்மேனி யொளியில் பகவானுடைய நீலமேனியையும் பொன்மேனியாகக் கண்டுகொண்டது; குலசேகரர் காணும் திருமலையோ இவரது பொன்னுள்ளத்தின் சோபையாலும் பொன்மொழியின் ஒளியாலும் பொன்மலை ஆகிவிடுகிறது!

Koviloor Digital Library

12. தில்லையில் குலசேகரர்

திருவரங்கத்தைப் பெரிய கோயிலென்று வைஷ்ணவர்கள் குறிப்பிடுவதுபோல் சிதம்பரத்தைக் கோயில் என்றே சைவர்கள் சிறப்பித்துப் பேசுகிறார்கள். சிதம்பரத்தைத் தில்லையென்றும், திருச்சிற்றம்பலம் என்றும் கூறுவது உண்டு. கற்பனை கடந்த ஜோதியே கருணை உருவமாகி அற்புத அழகுடன் நடராஜாவாக நடம்புரிகின்றது என்பது சைவர் கொள்கை. இங்கேயே கற்பனை கடந்த கருணைமா முகிலும் அறிதுயில் புரிந்து அழகுடன் அருள் புரிகின்றது என்பது வைணவர் கொள்கை.

செல்வ நெடுமாடங்களில் செல்வர்கள் அருட் செல்வத்துடன் பொருட்செல்வமும் பெற்று வாழும் தலம் என்று தில்லையைத் திருஞான சம்பந்தர் தமது தேவாரத்தில் குறிப்பிடுகிறார். அப்பர் சுவாமிகள் தில்லையின் வளத்தைத் 'தேங்கு நீர் வயல் சூழ் தில்லை' என்று குறிப்பிடுகிறார்.

குலசேகரர் கண்ட தில்லை நகர்

குலசேகராழ்வரும் தில்லை நகரின் வளத்தைக் குறிப்பிடுகிறார்.

> செந்தளிர்வாய் மலர்நகைசேர்
> செழுந்தண் சோலைத் தில்லைநகர்

(செந்தளிர்வாய் - சிவந்த தளிர்களின் நடுவே. மலர்நகைசேர் - மலர்களையும் மகிழ்ச்சி தருகின்ற அழகையும் உடையது. செழுந்தண்சோலை - செழுமையும் குளிர்ச்சியும் உள்ள சோலைகள்.)

Koviloor Digital Library

ஆழ்வார், தில்லை நகரின் உயர்ந்த மதிலையும் குறிப்பிட்டு, 'அம்மதிலைப் பகைவர்கள் கண்ட மாத்திரத்திலே 'இதை 'எப்படிக் கடந்து செல்ல முடியும்?' என்று அஞ்சி ஒதுங்கிப் போய்விடுவார்கள்' என்கிறார்:

தெவ்வர் அஞ்சு நெடும்புரிசை
உயர்ந்த பாங்கர்த் தில்லைநகர்

(தெவ்வர் - பகைவர்கள். அஞ்சு - பயப்படும்படியான. நெடும் புரிசை - பெரிய மதில். உயர்ந்த பாங்கர் - ஓங்கிய மதிற்பக்கத்து இடம்.)

இந்த ஆழ்வார் தில்லைநகர்த் திருச்சித்திர கூடத்தில் எழுந்தருளியிருக்கும் கருணைமாமுகிலைப் பாடுகிறார். இந்தப் பெருமானைக் கோவிந்தராஜர் என்று பிரசித்தமாக இன்றும் கூறுவதுண்டு. இப்பெருமாள் நடராஜர் கோயிலின் புறத்தே கோயில் கொண்டிருக்கிறார். இவரைத் தில்லைவாழ் அந்தணர்களான மூவாயிரவரும் வழிபட்டதாகக் குலசேகரரும் திருமங்கை மன்னனும் பாடியிருக்கிறார்கள்.

தில்லைவாழ் அந்தணர்களின் சமரசம்

தில்லை மூவாயிரவர் சிறந்த சிவனடியார்கள் என்பது பிரசித்தம். இவர்கள் நடராஜாவுக்குப் பக்கத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த பெருமாளைத் திரண்டு துதித்ததாகக் கூறுவர் குலசேகரர்:

அந்தணர்கள் ஒருமூவா யிரவர் ஏத்த
அணிமணிஆ சனத்(து) இருந்த அம்மான் தானே.

(ஏத்த - துதிக்க. அணிமணி ஆசனத்து - அழகிய ரத்தின சிங்காதனத்திலே. அம்மான் - சர்வேச்வரன்.)

பெருமாள் 'அணிமணி ஆசனத்து இருந்த'தாக இவர் குறிப்பிடுகிறார்.

திருமங்கை மன்னனும் திருச்சித்திர கூடத்துப் பெருமாளைத் தில்லைவாழ் அந்தணர்கள் வணங்கியதாகக் கூறியுள்ளார்:

Koviloor Digital Library

மூவா யிரநான் மறையாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதித்
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்றுசேர் மின்களே.

(நான்மறையாளர் - நான்கு வேதங்களையும் அப்பியசிக்கும் அந்தணர்கள். அணங்காய - அழகான. சேர்மின்கள் - சேர்ந்து வழிபடுங்கள்.)

இந்த இரண்டாழ்வார்களும் கூறும் முறையிலிருந்து அவர்கள் காலத்திலே தில்லை மூவாயிரவர் என்ற தில்லைவாழ் அந்தணர்கள் திருச்சித்திர கூடத்துப் பெரு மாளையும் வணங்கி வந்தார்கள், துதித்து வந்தார்கள் என்பது தெரியவருகிறது. ஆனால் இந்தப் பெருமாளைத் தில்லைவாழ் அந்தணர்கள் முறைப்படி பூஜித்து வந்தார்கள் என்று சொல்ல முடியுமா?

தில்லைத் திருமுறைக் கழகத்தார் வெளியீடு ஒன்றில், 'இச்சித்திர கூடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பெருமாளை முற்காலத்தில் முறைப்படி ஆராதித்து வந்தவர்கள், தில்லை மூவாயிரவர் எனச் சிறப்பித்துப் போற்றப் பெறும் தில்லைவாழ் அந்தணர்களே ஆவர். இப்பெருமான் திருவுருவம் நடராஜர் கோயிலைச் சார்ந்த பரிவார தெய்வம் என்ற நிலையிலேயே சைவர்களாகிய தில்லைவாழ் அந்தணர்களால் முறைப்படி பூசை செய்யப்பட்டு வந்ததென்று தெரிகிறது' என்று கூறப்பட்டிருக்கிறது.

'இந்த அபிப்பிராயம் திருமங்கை மன்னனும் குலசேகரரும் அருளிச் செய்த திருவாக்குகளால் வலியுறுதல் காண்க' என்றும் அக்கழகத்தினர் எழுதியிருக்கிறார்கள். இந்த ஊகம் சரியாகுமா? திருமங்கை மன்னன் திருச்சித்திர கூடத்துப் பெருமாளை ஒரு 'பரிவார தெய்வம்' என்று கூறுவதற்கு மாறாகத் 'தேவாதி தேவன்' என்று கூறியிருப்பது கூர்ந்து நோக்கத் தக்கது.

Koviloor Digital Library

எனவே, 'முறையால் வணங்க' என்பதற்கு 'முறைப்படி பூசைசெய்ய' என்று பொருள் கூறுவதும் சரியன்று. தேவாதிதேவனாகத் திருமாலை வணங்க வேண்டிய முறை எதுவோ அந்த முறைக்கிணங்கச் சைவர்களாகிய தில்லைவாழ் அந்தணர்களும் வணங்கினார்கள் என்றே பாட்டின் போக்கிற்கு இசையப் பொருள் கூறுவதுதான் முறையாகும்.

குலசேகரர் வாக்கில் வரும் 'தில்லை மூவாயிரவர் ஏத்த' என்பதற்கும், தில்லைவாழ் அந்தணர்கள் பெருமாள் திருவுருவத்தை 'நடராசர் கோயிலைச் சார்ந்த பரிவார தெய்வம் என்ற நிலையிலேயே... முறைப்படி பூசை செய்தார்கள்' என்று பொருள் கூற முடியாது. 'ஏத்துதல்' என்பது துதித்தல் (திவாகரம்), 'வாழ்த்துதல்' என்றும் பொருள்படும்; 'புகழ்தல்' என்றும் பொருள்படும். மூவாயிரவரும் திரண்டு துதித்தார்கள் என்றே குலசேகரர் கூறியுள்ளார்.

குலசேகராழ்வார் காலத்திலும் திருமங்கையாழ்வார் காலத்திலும் தில்லை மூவாயிரவர் சைவர்களாகவும் நடராஜப் பெருமானது சிறந்த தொண்டர்களாகவும் இருந்தாலும் அப் பெருமானுக்கு அருகேயிருந்த பெருமாளையும் வணங்கும் முறைக்கு இணங்க வணங்கித் துதித்தார்கள் என்று ஊகம் செய்வதே சரியாகும்.

சைவர்களுக்கே விசேஷ உரிமையுடையது நடராஜப் பெருமான் கோயில் என்பதில் ஐயமில்லை. இதைச் 'சைவராஜதானி' என்றே கூறுவது உண்டு. மூவர் தேவாரங் களும் ஏனைய திருமுறைகளும் தில்லைத் திருக்கோயிலையே சிவஸ்தலங்கள் எல்லாவற்றிலும் முதன்மையுடையதாக வைத்துக் கோயில் என்னும் பெயருடன் போற்றியுள்ளன என்பதும் இலக்கியப் பிரசித்தியான செய்திதான்.

பல்லவர் சமரசம்

இந்தத் தில்லைப் பெருங்கோயிலில் திருமால் கோயிலும் இடம் பெற்றதற்குப் பல்லவ மன்னர்களின் சைவ

Koviloor Digital Library

வைஷ்ணவ சமரச உணர்ச்சி காரணமாக இருக்க வேண்டும். ராமன் வனவாச காலத்தில் தங்கியிருந்த சித்திரகூட மலையின் பெயரையிட்டு இக்கோயிலைப் பல்லவ மன்னரில் ஒருவன் ஒரு சித்திரசாலைபோல் அழகாக அமைந்திருக்க வேண்டும்.

பைம்பொன்னும் முத்தும்
மணியும் கொணர்ந்து
படைமன்ன வன்பல்ல வர்கோன் பணிந்த... ...
... ... தில்லைத் திருச்சித்திர கூடம்

என்று திருமங்கை மன்னன் பாடியிருக்கும் பல்லவர்கோன் (நந்திவர்ம பல்லவன்) இப்பெருமாளிடம் விசேஷ பக்தியுள்ளவனாக இருந்தான் என்று ஊகிக்கலாம்.

'பணிந்த கோயில்' என்பதற்கு, 'பணிசெய்து பிரதிஷ்டித்த கோயில்' என்று பொருள் கூறுவோரும் உண்டு. நந்திவர்ம பல்லவன் இக்கோயிலில் பணிசெய்து வழிபட்டான் என்று கருதுவதே பொருந்தும். இப்பல்லவுனை இரண்டாம் நந்திவர்மன் என்பர்.

சித்திரகூடம் - சித்திரசாலை (சீவகசிந்தாமணி); அதாவது தெற்றியம்பலம் (மேட்டிடமாக அமைந்த சித்திரசாலை). சிற்றம் பலமான சிவாலய வழிபாடும் தெற்றியம்பலமான சித்திரகூட வழிபாடும் வெகு சமீபத்தில் முறைப்படி நடைபெறச் செய்திருப்பது அக்காலத்துச் சமரச உணர்ச்சிக்குத் தக்கதொரு சான்றாகும்.

பல்லவ மன்னர்கள் வடமொழியையும் தமிழ் மொழியையும் இரு கண்களாகக் கருதி வந்ததுபோல் ஆனந்த நடனம் ஆடும் பெருமானையும் ஆனந்த யோகநித்திரை புரியும் பெருமானையும் பெரும்பாலும் சமநோக்குடன் வழிபட்டு வந்தனர் என்பது வரலாற்றுச் செய்தி.

சைவ வைணவப் பூசல்கள்

சித்திரகூடத்திலுள்ள திருமாலின் விக்கிரகம் இரண்டாம் குலோத்துங்க சோழனது காலத்திலே கோயிலைவிட்டு

Koviloor Digital Library

அப்புறப்படுத்தப்பட்டது என்பதும் வரலாற்றுச் செய்திதான். சோழ அரசர்கள் சைவர்களே யாயினும் பெரும்பாலும் வைஷ்ணவத் துவேஷம் இல்லாதவர்களே. எனினும் சோழர்களின் ஆட்சிக்காலத்திலே சைவ-வைஷ்ணவ சமயப் பூசல்கள் அதிகரித்தன. இப்பூசல்களின் விளைவால்தான் சைவ சமயத்தில் விசேஷ அபிமானம் உள்ள இரண்டாம் குலோத்துங்கன் திருமாலின் உருவத்தைச் சித்திரகூடத்தி லிருந்து அப்புறப்படுத்தி யிருக்க வேண்டும்.

ராமாநுஜர் கீழைத்திருப்பதியில் கோவிந்தராஜர் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார். இரண்டாம் குலோத்துங்கன் அந்தத் திருவுருவத்தைத் தில்லைக் கோயிலி லிருந்து அப்புறப்படுத்திவிட்டதால்தான் அப்படி ஒரு திருவுருவத்தை ராமாநுஜர் கீழைத்திருப்பதியில் பிரதிஷ்டை செய்தார். ராமாநுஜர் காலத்திலே தில்லைச் சித்திரகூடத்துப் பெருமானுக்குக் 'கோவிந்தராஜர்' என்ற பெயர் பிரசித்தமாயிருந்திருக்கவேண்டும்.

திருச்சித்திரகூடத்திலிருந்து இரண்டாம் குலோத்துங்கன் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் அப்புறப்படுத்திய கோவிந்தராஜர் திருவுருவம் மீண்டும் அதே இடத்தில் பிரதிஷ்டை செய்துவைக்கப்பட்டது என்பதும் வரலாற்றுச் செய்தி.

குலசேகரர் காலத்திலே சிற்றம்பல வழிபாடும் சித்திரகூட வழிபாடும் சமரசமாக நடைபெற்றன என்பது திண்ணம். ஆனால் குலசேகரர் சிற்றம்பல வழிபாட்டைக் குறிப்பிடாமலே தமது இஷ்ட தெய்வமான பெருமாளை மட்டும் போற்றியுள்ளார். தேவாரம் பாடிய மூவரும் சிற்றம்பல வழிபாட்டிலேயே ஈடுபட்டார்கள்; சித்திரகூட வழிபாட்டைக் குறிப்பிடவில்லை.

பிற்காலத்துச் சமயப்பூசல்கள் அந்த நாளில் ஏற்பட வில்லை யென்றாலும்,

Koviloor Digital Library

என்றென் றும்தம(து)
இட்டதெய் வத்தையே
நன்றென்(று) ஏத்திடல்
ஞானிகள் சம்மதம்

என்ற கொள்கை பக்தர்களுக்கு உண்டு. எனவே, 'மறந்தும் புறம்தொழா மாந்த'ராக இஷ்ட தெய்வத்தை வழிபட்டவர் உண்டு.

திருஞானசம்பந்தர் தமது திருச்சிற்றம்பலத்துப் பதிகத்திலே சர்ப்பசயனமூர்த்தியாகிய திருமாலும் பிரம தேவனும் அடிமுடி தேடிக் காணாத நிலையில் தமது இஷ்டமூர்த்தியான சிவபெருமான் கனலாய் ஓங்கிய கதையைக் குறிப்பிடுகிறார். திருமங்கை மன்னனோ தமது சித்திரகூடமூர்த்தியையே 'தேவாதிதேவன்' என்று தொழுகிறார். குலசேகரரும் தமது சித்திரகூடப் பெருமாளை, 'எங்கள் தனி முதல்வன்' என்று போற்றுவதைக் காண்கிறோம்.

தில்லையில் ராமாவதாரம்

ஸ்ரீராமாவதார வைபவத்தில் தம்மை இழந்து அதையே அநுஸந்தித்து வந்த காலத்தில் குலசேகரர் தில்லைத் திருச்சித்திரகூடப் பெருமானை ராமனாகவே பாடியிருப் பதையும் காண்கிறோம். சக்கரவர்த்தித் திருமகன் பிற்காலத்தில் உள்ளவர்களுக்கும் - சிறப்பாகத் தமிழ்ப் பெருமக்களுக்கும் - அருள்புரியவேண்டுமென்று அர்ச்சா விக்கிரக ரூபமாகத் தில்லைத் திருச்சித்திரகூடத்தில் காட்சியளிக்கிறார் என்பது குலசேகரர் கருத்து.

இத்திருப்பதியிலே ராமன் திருக்கதையை அவதாரத் திலிருந்து தொடங்கி முற்றும் தொகுத்துப் பேசி அநு பவிக்கிறார் இந்த ஆழ்வார். இந்தத் திருமொழிப் பதிகத்தைக் குலசேகரர் அருளிய ராம கதைச் சுருக்கம் என்று சொல்லக் கூடுமல்லவா?

Koviloor Digital Library

இவர் தில்லைத் திருச்சித்திரகூடம் 'நெடுமதில் புடைசூழ் அயோத்தி' என்னும் அணிநகரமாக விரிந்து விடுகிறது. பெருமாளின் விக்கிரகம் இந்த ஆழ்வாரின் மனோபாவத்தில் 'உலகனைத்தும் விளக்கும் சோதி'யாக ஓங்குகிறது.

திருஞானசம்பந்தர் நடராஜப்பெருமானைக் 'கனலாய் ஓங்கிய' ஜோதியாகக் கண்டதுபோல், குலசேகரர் தமது பெருமாளைச் சூரியன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடரின் ஒளியும் மின்மினி எனத் தக்க செழுஞ்சுடர்ப் பரஞ்சோதியாகக் காண்கிறார்.

அந்தப் பரஞ்சோதி தன் ஆதியஞ்சோதி உருவை, 'நின்ற வண்ணம் நிற்கவே!' என்று அங்கே வைத்துவிட்டு இங்கே ராமன் என்ற சூரியகுல விளக்காக மக்கள் கண் காண வந்து தோன்றியதென்று ஈடுபடுகிறார்.

ராமனது வீர சரித்திரத்தை இதிகாச வாயிலாக அநுபவித்த ஆழ்வார் 'தில்லை நகரத் திருச்சித்திரகூடம் தன்னுள்... என்று கொலோ கண்குளிரக் காணும் நாளே' என்று தாம் ஆசைப்பட்டதை இப்பதிகத்தின் முதலாவது பாசுரமாக வெளியிடுகிறார்.

ராமாயணத்தில் பிரஸ்தாபிக்கப்படும் சித்திரகூட மலை வடநாட்டில் உள்ளது. அதிலிருந்து வேறுபாடு தோன்றத் 'தில்லைநகர்த் திருச்சித்திரகூடம்' என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார் என்பர். 'அழகிய சிகரம் உடையது' என்பது இந்த வடசொல்லுக்குப் பொருள்.

ஆதியில் காடாக இருந்த தில்லை, குலசேகரர் காலத்தில் செழிப்பான குளிர்ந்த பசுஞ்சோலைகளும் செந்தளிர்களும் பன்னிற மலர்களும் வாய்ந்த அழகுடன், கண்டவர் உள்ளங்களைக் கவர்ந்து மகிழ்வித்தது என்பதற்கும், பெருமதில்கள் முதலான கட்டுக்காவல்களுடன் திகழ்ந்தது என்பதற்கும் இப்பதிகத்திலே சான்று கிடைக்கிறது.

Koviloor Digital Library

திருச்சித்திரகூடத்துப் பெருமாளை அணிமணி யாசனத்தில் 'திருமகளோடு இனிது அமர்ந்த செல்வன்' என்றும், திருச்சித்திரகூடம் தன்னுள் அரசு அமர்ந்திருப்பவன் என்றும் இவர் குறிப்பிடுகிறார்.

'திருச்சித்திரகூடம் தன்னுள் உறைவான்' - அதாவது இந்தத் தில்லை நகர்த் திருப்பதியில் நித்தியவாசம் பண்ணு கிறவன் - என்று குலசேகரர் கூறுவதால், இவர் காலத்திற்கு முன்பே சித்திரகூட வழிபாடு நடைபெற்றிருக்க வேண்டும் என்பது உறுதி.

இக்கருத்தை இன்னும் தெளிவாக விளக்குகிறது 'தில்லை நகர்த் திருச்சித்திரகூடம் தன்னுள் என்றும் நின்றான்' என்று இவர் கூறியிருப்பது. அனுமனுடனே ராமன் திருச்சித்திர கூடத்தில் வீற்றிருப்பதாகவும் குலசேகரர் கூறியுள்ளார்.

தில்லைநகர்த் திருச்சித்ர
கூடம் தன்னுள்
திறல்விளங்கு மாருதியோ(டு)
அமர்ந்தான் தன்னை

(திறல் விளங்கு மாருதி - பராக்கிரமம் விளங்கப்பெற்ற அனுமன்.)

என்று இத் திருமொழிப் பதிகத்தில் வருவதும் கவனிக்கத் தக்கது.

தில்லைச் திருச்சித்திரகூடத்துப் பெருமாளின் அடியார்கள் சஞ்சரிக்கப்பெறுவதால் பூமி தவம் உடையது என்றும் இவர் கூறுவர். எனவே, ஸ்ரீரங்கநாதனின் திருமுற்றத்து அடியார்களைப்போல், தில்லைச் சித்திரகூடத்துப் பெருமாளின் அடியார்களும் நாடெங்கும் திரிந்து பலரையும் நல்வழிப்படுத்தி வந்தனர் என்று ஊகிக்கலாம். 'தில்லைநகர்த் திருச்சித்திரகூடம் தன்னுள் தலைவணங்கிக் கைகூப்பி ஏத்தவல்லார் திரிதலால் தவமுடைத்துத் தரணிதானே!' என்பது இவர் வாக்கு.

Koviloor Digital Library

திருச்சித்திரகூடத்துப் பெருமாளை வணங்கும் அடியார்களுடைய திருவடிகளைத் தாம் வணங்கியதாக, 'இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேனே' என்று இவர் கூறுவதிலிருந்து, இந்த அடியார்களையும் இவர் தமது தலைநகரில் சந்தித்திருக்கக் கூடும் என்று தோன்றுகிறது.

இந்த அடியார்கள் வாயிலாகத் திருச்சித்திரகூடத்துப் பெருமாளுடைய புராண வைபவத்தை இந்த ஆழ்வார் தெரிந்திருக்கக்கூடும். இவர் கேள்விப்பட்ட வைபவம் இப்பெருமாளை ராம சரிதத்துடன் தொடர்புபடுத்தியிருக்கவும் கூடும்.

குலசேகரர் திருமங்கை மன்னனுடனும் தொண்டரடிப் பொடிகளுடனும் சமகாலத்தவராக எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கவேண்டும் என்பது ஆராய்ச்சி அறிஞர்களின் அபிப்பிராயம். இவர் 'திருச்சித்திரகூடம் தன்னுள் என்றும் நின்றான்' என்று பாடியிருக்கும் பெருமாளின் சந்நிதி எட்டாம் நூற்றாண்டிற்கு மிகவும் முற்பட்ட காலத்திலேயே இருந்திருக்க வேண்டும்.

'பூலோக கயிலாயம் என்று புகழப்பெறும் கோயிலில் சிற்றம்பலம் மேய செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே' என்று பக்தர்கள் நீண்டகாலமாக வழிபட்டு வந்ததுபோல், அதே கோயிலில் சித்திரகூடம் மேவிய செல்வனையும் தில்லை மூவாயிரவர் உள்ளிட்ட பக்தர்கள் நெடுங்காலமாக வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

Koviloor Digital Library

13. குலசேகரர் கண்ட காதல் வெள்ளம்

வைஷ்ணவம் ஸாராம்சத்தில் கண்ணன் வழிபாடு தான். மாரன் வழிபாட்டைக் காட்டிலும் கண்ணன் வழிபாட்டையே ஆழ்வார்கள் சிறப்பித்துப் பாடுகிறார்கள். முதலாழ்வார்களும் திருமழிசைப் பிரானும் தொண்டரடிப் பொடிகளும் கிருஷ்ணபக்தியை விசேஷமாக வற்புறுத்தி யிருக்கிறார்கள்.

பத்தே பாடல்கள் பாடியிருக்கும் திருப்பாணரும் இறுதிப் பாசுரத்தில்,

கொண்டல் வண்ணனைக்
கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன்என்
உள்ளம் கவர்ந்தானை

(கொண்டல் - மேகம். கோவலன் - கோபாலன்.)

என்று தமது அரங்கனைக் குறிப்பிட்டு, 'இந்தக் கண்ணனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே!' என்று பாடி முடிக்கிறார்.

இத்திருப்பாணரைக் 'கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல் - பாண்பெருமாள்' என்று ஸ்ரீவேதாந்த தேசிகர் கூறுவது, பாண்பெருமாள் கண்ட அரங்கநகரப்பன் கண்ணன்தான் என்ற கருத்தை வெளியிடுகிறது. ஸ்ரீரங்கராஜ பக்தி முக்கிய அம்சங்களில் கிருஷ்ண பக்திதான்.

Koviloor Digital Library

குலசேகரரின் கிருஷ்ண பக்தி

திருவரங்கத்திற்கு, 'நாளைபோவேன், நாளைப் போவேன்!' என்ற மனநிலையுடன் தீவிர ஸ்ரீரங்க பக்தராகி விட்ட குலசேகரர் ஒரு சிறந்த ராம பக்தராக இருந்தபோதிலும் கிருஷ்ண பக்தியிலும் சிறந்து விளங்கினார் என்பதில் ஐயமில்லை. இவரது பிரபந்தமாகிய 'பெருமாள் திருமொழி'யில் முதல் திருமொழிப் பதிகத்திலேயே கிருஷ்ண லீலைகள் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

மராமரங்களைத் துளைத்துத் தனக்கு வாலியைக் கொல்லும் வல்லமை இருப்பதாகக் காட்டிக்கொண்ட ராம பராக்கிரமத்தைப் பிரஸ்தாபிக்கும்போதே, பசுக்கூட்டங்களை மேய்த்த கண்ணனது எளிமையும் நினைவிற்கு வருகிறது. ராமன் ராடட்சஸ வதம் செய்தானென்று சொல்லும் போதே நப்பின்னைக்காக ஏழு ரிஷபங்களை வலியடக்கிய கிருஷ்ண பராக்கிரமமும் நினைவிற்கு வந்துவிடுகிறது.

ராமனது வீரச்செயல்களைப்போல், கண்ணன் வெண்ணெயையும் பாலையும் தயிரையும் திருடி உண்டு ஆய்ச்சியால் கட்டப்பட்டு ஏங்கிய அந்த எளிமையும் இவரைப் பரவ்சப்படுத்துகிறது.

ஆயனே! அரங்கா!

என்று ஸ்ரீரங்கநாதனைக் கண்ணனாக அழைப்பதிலும் இவருக்குத் திருப்திதான், ஆசைதான்.

ஆய்க்குலப்பெண்கள் கண்ணனைக் காதலித்ததையும் அவனோடு ஊடல் கொண்டதையும் பிரஸ்தாபித்து இந்த நிகழ்ச்சிகள் வாயிலாகத் தமது காதலை வெளியிடு வதில் இவருக்கு விசேஷ திருப்தி. காடு புகுந்த மகனுக் காகத் தந்தை அடைந்த தாபத்தின் வாயிலாக இவர் ஆத்ம தாபத்தை வெளியிட்டுக் கொண்டதுபோல், ஆயச்சிறுமிகளின்

Koviloor Digital Library

காதல் வார்த்தைகளாலும் தமது காதலை வெளியிட்டுக் கொள்கிறார்.

இவர் கண்ட காதல் காட்சிகள்

இதோ ஒரு காதல் காட்சி. கண்ணன் ஒரு பெண்ணை நோக்கி, 'நீ யமுனையாற்றின் மணற்குன்றிலே போய் நில்லு' என்று சொல்லிவைத்தான். அப்படியே அவள் அங்கே போய் விடியும் அளவும் நின்றுகொண்டிருந்தாள், கண்ணன் வருவான் என்று எதிர்பார்த்துத்தான்.

எதிர்பார்த்தபடி அவன் வரக்காணாமல் அவள் திரும்பிப் போய்விட்டாள். மற்றொரு நாள் அவனைக் கண்டதும் ரோஷம் தோன்றப் பேசிவிட்டாள். அந்தப் பேச்சு இவர் காதில் விழுகிறது.

'உன் பொய்யைக் கேட்டு மோசம் போனேனே!' என்கிறாள். 'உனக்குப் பத்தினியாகத் தக்க அழகிற் சிறந்த பெண்கள் பலர் இந்த ஆய்ப்பாடியில் இருக்கும்போது என் ஆசை வீண் ஆசைதான் என்பது எனக்குத் தெரியும்; நெடுநாளாகத் தெரியும். எனினும் உன் பொய்யைக் கேட்டு மயங்கிப் போனேனே!' என்கிறாள்.

அப்படிக் கண்ணன் அவளிடம் என்ன சொன்னான் என்பதும் இவர் காதில் விழுந்துதான் இருக்கவேண்டும். அந்த வார்த்தையை இவர் பாட்டிலே சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறார் - அதாவது, பேசாத பேச்சாக.

'ஏனம்மா இப்படி இருக்கிறாய் நீ? உன்னைத் தவிர எனக்குப் புகல் ஏது?' என்றெல்லாம் தாழ்ந்து பேசினானாம் கண்ணன். (கடவுளும் இப்படிப் பக்தரிடம் சில சமயங்களில் மாயமாக நடந்துகொள்கிறான் என்பது இவரது பக்தியநுபவங் களில் ஒன்று.)

வேறொரு ஆய்க்குலப்பெண் சொல்லுகிறாள்: 'கண்ணா! நீ பொய் சொன்னாய் என்பது எனக்குத் தெரியும்;

Koviloor Digital Library

என்மேல் உனக்கு ஆசையில்லை என்பதும் தெரியும்; என்றாலும் அறிந்தறிந்தே உன்தன் பொய்யைக் கேட்டேன்' என்கிறாள்.

அவன் பொய்யைக் கேட்டு இவள் செய்தது என்ன? பனி, மழைபோல் பெய்கிறதாம். அந்தக் குளிரிலே இவள் என்ன செய்தாள்? அவன் வரவில்லையே என்று திரும்பிப் போய்விட்டாளா?

கூர்மழை போல்பனிக்
கூதல் எய்திக் கூசி நடுங்கி,
யமுனை ஆற்றில்
வார்மணல் குன்றில்
புலர நின்றேன், வாசுதே வா,உன்
வரவு பார்த்தே!

(கூர்மழை - மிக்க மழை. பனிக்கூதல் எய்தி - பனிக்குளிரிலே அகப்பட்டு. வார்மணல் குன்றில் - பெரியதொரு மணல் குன்றிலே. புலர - பொழுது விடியும் வரை.)

என்று இவள் கூறுவதைக் கேளுங்கள்.

குளிரால் நடுங்கிக்கொண்டிருந்ததுடன், 'நம்மை யார் பார்த்து விடுகிறாரோ?' என்று கூசியும் நின்றாளாம். 'அந்த மணற்குன்றிலே அந்த விதமாகப் பொழுது புலரும்வரை நான் காத்து நின்று பரிபவப்பட்டேனே!' என்கிறாள்.

'வாசுதேவா!' என்று கண்ணனை அழைக்கும் இந்தப் பேச்சில்கூட ஏச்சு இல்லாமல் இல்லை. 'வாசுதேவர் பிள்ளையல்லவா நீ; அவர் பொய்யே சொல்லி அறியாரே!' என்பது குறிப்பு.

கண்ணன் வளர வளர அவனோடு அவன் பொய்யும் வளர்ந்துகொண்டே வருகிறதாம்;

Koviloor Digital Library

மரு(து)இறுத் தாய்! உன்
வளர்த்தி யோடே
வளர்கின்ற தால்உன்தன் மாயைதானே!

(மருது இறுத்தாய் - மருத மரங்களை முறித்தவனே. வளர்த்தி - வளர்ச்சி.)

கடவுள் உணர்ச்சி உள்ளத்தில் வளர வளர அவனுடைய மாயையும் கூடவே வளர்ந்து வருகிறது என்பதும் பக்தியநுபவ உணர்ச்சிதான்.

ஆய்ச்சியர் காதல் கண்டு அதிலே தம் பக்திக் காதலையும் கண்டுகொண்டவர், அவர்களுக்கும் தமக்கும் ஒருங்கே காதலனாக வாய்த்த அந்தக் கண்ணனைத்தான் எவ்வளவு தெளிவாக,

செய்ய உடையும் திருமுகமும்
செங்கனி வாயும் குழலும் கண்டு,

[செய்ய உடை - அழகிய பீதாம்பரம். குழலும் - (இங்கே) மயிர் முடியும்.]

தாமும் காதலும் ஊடலும் கொண்டு மகிழ்ந்து போகிறார்!

எற்றுக்கு நீஎன் மருங்கில் வந்தாய்?
எம்பெரு மான்நீ எழுந்தருளே!

(எற்றுக்கு - எதற்காக. மருங்கில் - பக்கத்தில். எழுந்தருளே - நீ போய்விடு.)

என்று அவர்களோடு இவரும் ரோஷம் தோன்ற ஊடிப் பேசுவதைக் கேளுங்கள்.

இன்னும் ஒரு காதல் காட்சி, ஆய்ச்சி ஒருத்தி புல்லாங் குழலுடன் வந்த கண்ணனை நோக்கி, 'வேணுகோபாலா, நீ இப்படி வாயும் குழலுமாக, மாலையும் மார்புமாக, மயிலிறகு சூடிக்கொண்டு பளபளவென்ற மெல்லிய ஆடையைத்

Koviloor Digital Library

தரித்துக்கொண்டு, காதிலே பூங்கொத்தை அணிந்து வருகிறாயே!' என்று பொறாமை தோன்றப் பேசுகிறாள். இவளுக்கு ஏன் இந்தப் பொறாமை?

குலசேகரர் வாக்காலேயே தெரிந்துகொள்வோம்;

மங்கல நல்வன மாலை மார்வில்
இலங்க, மயில்தழைப் பீலி சூடி,
பொங்கின ஆடை அரையில் சாத்திப்
பூங்கொத்துக் காதில் புணரப்பெய்து,
கொங்கு நறுங்குழ லார்க ளோடு
குழைந்து, குழல்இனி(து) ஊதி வந்தாய்;
எங்களுக் கேஒரு நாள்வந்(து) ஊத
உன்குழல் இன்னிசை போத ராதே!

(மங்கல நல்வனமாலை - மங்களகரமான நல்ல வனமாலை. மயில்தழைப்பீலி - மயில் இறகுகள். பொங்கு இன ஆடை - பளபளவென்றிருக்கும் மெல்லிய ஆடை. சாத்தி - தரித்துக் கொண்டு. புணரப்பெய்து - பொருந்தும்படி அணிந்து கொண்டு. கொங்கு நறுங் குழலார்களோடு - நறுமணம் கமழ்கின்ற கூந்தலையுடைய பெண்களோடு. குழல் - புல்லாங்குழல். இனிது ஊதி வந்தாய் - இனிமையாக ஊதிவிட்டு இங்கே வந்தாய். போதராதே - வரமாட்டாது காண்.)

கண்ணனது மேனியழகே வசீகரமாக இருக்க அவன் மயிலிறகு சூடிக்கொண்டு, மங்களமாக மார்பிலே மாலையும், காதிலே பூங்கொத்துமாய், அரையிலே பொன்னாடை. பளபளவென்று அசைய வருகிறானாம். இந்த அழகிற்குத் தோற்ற ஆய்ச்சி, வயிற்றெரிச்சலுடன், 'வேறு பெண்களோடு குழைந்து இனிமையாகப் புல்லாங்குழலை ஊதிக்கொண்டு வந்தாயே; ஒருநாள் எங்களுக்கே ஊதுவதென்றால் அந்தக் குழலில் இசை வரமாட்டாது காண்!' என்று பேசுகிறாள்.

Koviloor Digital Library

இத்தகைய இள ஆய்ச்சிமார்களின் ஊடல் காட்சி களிலும், காதல்காட்சிகளிலும், அரசையே வெறுத்துத் துறந்த நம் வைராக்கிய மூர்த்தி ஈடுபடுவதேன்? அவர்களைப்போல் இவரும் கண்ணபிரானைக் காதலிக்கிறார். பக்திக் காதலிலும் ஊடல் என்ற பிரணய கலகம் உண்டு. கோபிகைகளின் காதல் கதைகளும் பக்திக் காதலின் வசீகரமான தத்துவக் கதைகளே!

'தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்திக்கும்' பக்தி யநுபவமும் காதல் வெள்ளந்தான். குலசேகரர் தம்மைப் 'பித்தர்' என்றும், 'பேயர்' என்றும் சொல்லிக் கொள்கிறாரல்லவா? தமது பக்திக் காதல் வெறியைத்தானே அப்படிக் குறிப்பிடுகிறார்?

அறிவு பகுத்தறிந்துகொண்டே போகும்; ஆனால் அன்பிலே, காதலிலே தேவரகசியத்தை அணுகிக் கொண்டிருப்பது போன்ற உணர்ச்சி ஏற்படக்கூடும். அறிவு திரைக்கு வெளியே இருந்து திரை மறைவில் உள்ள ரகசியம் குறித்து வாதம் செய்துகொண்டிருக்கும்; உள்ளே புகுந்து பார்க்கக் கூசி நிற்கும். அன்போ திரைக்கு அப்பால் சென்று உண்மையை முகமுகமாய்க் கண்டுகொள்ளும். அறிவும் அன்பைத் தழுவியே பேறு பெற வேண்டும்.

ஞானத்தைப் புருஷன் என்றும், தெய்வபக்தியைப் பெண் என்றும் ராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுவது உண்டு. ஜீவாத்மாக்களெல்லாம் காதலிகள்; புருஷோத்தமன் ஒருவனே காதலன் என்பது பக்தி மதத்தின் ஸாரமான ஒரு பெருங்கொள்கை.

Koviloor Digital Library

14. ஆழ்வாரின் தாயன்பு

கண்ணனின் காதலியாகி ஊடல்கொண்டு பக்திப் பெருங்காதலை வெளியிட்ட குலசேகரர் தமது பாவனா சக்தியால் கண்ணன் தாயுமாகி, அந்தத் தாயன்பு வாயிலாகவும் தமது பக்தியை வெள்ளமிடச் செய்கிறார். கண்ணனுக்குப் பெற்ற தாய் ஒருத்தி; வளர்த்த தாய் ஒருத்தி; 'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய்' வளர்ந்தவனல்லவா? குலசேகரர் யசோதை யாகவில்லை; தேவகியாகிறார்!

குலசேகர தேவகி

தனயன் கான்புகக் கண்டு புலம்பிய தசரதனது சோகத்தின் வாயிலாகத் தமது ராம பக்தியை வெளியிட்டுக் கொண்டவர் இப்போது தாம் பெற்ற குழந்தையைப் பிரிந்து வருந்தும் தேவகி வாயிலாகத் தம் கிருஷ்ண பக்தியை வெளியிட்டுக்கொள்கிறார். 'இவனைப் பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்றாளோ!' என்னும் வார்த்தை கேட்டு மகிழ்ந்திருக்கவேண்டியவள், குழந்தையை வளர்த்துக் களிக்கும் பேறு பெறாமல் தவிக்க நேர்ந்துவிட்டதல்லவா?

'தாயைக் குடல்விளக்கம் செய்ய'த் தோன்றிய குழந்தையின் விளையாடல்களை அந்தத் தாய் கண்டு களிக்கவில்லை. மக்கள் அறுவரைக் கம்ஸன் கொடுமையால் இழந்தவள், கண்ணனைத் தாலாட்டிச் சீராட்டிக் கொஞ்சி மகிழவில்லை. வசுதேவனின் சித்தம் பிரியாத தேவகி தங்கள் இன்னுயிர்க்குழந்தையைக் குலவிளக்காக வைத்து வளர்த்துப் பேணப் பெற்றாளில்லை. இந்தத் தேவகியின் பேச்சு வாயிலாகத் தமது கிருஷ்ண பக்தியை வெளியிட ஆசைப்படுகிறது குலசேகரர் உள்ளம்.

Koviloor Digital Library

'பத்து மாதம் வயிற்றிலே சுமந்து பெற்ற குழந்தை' என்று சாதாரணமாய்ச் சொல்லுகிறார்க ளல்லவா? கண்ணனையோ தேவகி பன்னிரண்டு மாதம் வயிற்றில் சுமந்து பெற்றாளாம்! பெற்றதும் ஆய்ப்பாடிக்குப் போக்கிவிட்டதால் கண்ணனைத் தொட்டிலில் விட்டுத் தாலாட்டுதல் முதலிய ஆனந்த அநுபவங்களைத் தான் பெறவில்லையே என்கிறாள். பின்பு கண்ணனைக் கண்டபொழுது தேவகி இப்படி யெல்லாம் கழிவிரக்கத்துடன் பேசினாளாம்.

இந்தப் பேச்சு எப்படியோ நமது பக்த குலசேகரர் காதில் வந்து விழுகிறது; கவிதையாகிறது. பிள்ளையைக் காட்டுக்கு அனுப்பிய தந்தையின் வயிற்றெரிச்சலைப் பகிர்ந்து கொண்ட குலசேகரர், இந்தத் தாயின் வயிற்றெரிச்சலையும் பகிர்ந்து அநுபவிக்கிறார்.

முதல் முதல், 'உன்னைத் தாலாட்டும் இன்பத்தை இழந்துவிட்டேனே அப்பா!' என்று தேவகி கண்ணனை நோக்கிக் கூறுவதைக் கேட்போம்:

'ஆலை நீள்கரும்(பு) அன்னவன் தாலோ;
அம்பு யத்தடங் கண்ணினன் தாலோ;
வேலை நீர்நிறத்(து) அன்னவன் தாலோ;
வேழப் போதகம் அன்னவன் தாலோ;
ஏல வார்குழல் என்மகன் தாலோ;
என்றென்(று) உன்னைஎன் வாயிடை நிறையத்
தால்ஒ லித்திடும் திருவினை இல்லாத்
தாய ரில்கடை ஆயின தாயே!

(ஆலைநீள் கரும்பு அன்னவன் - ஆலையில் இடத்தக்க நீண்ட கரும்புபோல் இனியனாகிய கண்ணனே. தாலோ - உனக்குத் தாலாட்டு; தாலேலோ. அம்புயத்தடங்கண்ணினன் - தாமரை போன்ற விசாலமான கண்களை உடையவனே. வேலை நீர் நிறத்து அன்னவன் - கடலின் நிறம் போன்ற நிறத்தை உடையவனே. வேழப்போதகம் அன்னவன் - யானைக்குட்டி போன்றவனே. ஏலவார் குழல் என் மகன் - பரிமளம் மிகுந்த நீண்ட மயிர்முடியையுடைய என் மகனே.

Koviloor Digital Library

என்று - என்று இப்படிப் பல தடவையும் சொல்லி. என் வாயிடை நிறைய - என் வாய் திருப்தி அடையும்படி. தால் ஒலித்திடும் திருவினை - தாலாட்டுகையாகிற செல்வத்தை. தாயரில் - தாய்மார்களில். கடை ஆயின தாய் - கடையாகிய தாயாக இருக்கிறேன் நான்.)

தாலாட்டும் பாக்கியத்தை மட்டுமா இழந்தாள் இவள்? - குழந்தை தொட்டிலில் கிடக்கும் அழகைப் பார்த்து அநுபவிக்கவும் முடியவில்லையே! அந்த அழகைத் தாய் மாத்திரமே அநுபவிக்கிறாள் என்பதில்லை; ஊர்ப்பெண்களில் எவரும் வந்து பார்த்து அநுபவிக்கக்கூடும். அந்த அநுபவங்கூட எனக்குக் கிடைக்கவில்லையே என்கிறாள் தேவகி.

குழந்தை தொட்டிலில் கிடக்கும்போது அண்ணாந்து பார்க்கும் அல்லவா? அது உற்று நோக்குவதற்காக மேற்கட்டியில் கிளி முதலான அழகிய பொருள்களைத் தொங்கவிட்டு வைப்பார்கள். அந்தப் பொருள்களில் ஒன்றைக் குழந்தை இனிதாக உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கும் அல்லவா?

அஞ்சனம் எழுதிய செம்மலர்க் கண்களால் இனிதாகப் பார்த்துக்கொண்டிருக்கும்போது அந்தக் குழந்தையையும் அதன் கண் மலர்களையும், அந்தப் பார்வையையும் பார்ப்பதே ஓர் இனிமையான காட்சி, முக்கியமாகப் பெண்களுக்கு; சிறப்பாகத் தாய்க்கு.

அந்த மலர்ச்சிறு கால்களை முடக்கிக்கொண்டு, மேற்கட்டியைப் பார்த்துக்கொண்டு, அழகிய சிறு விரல்களை யெல்லாம் உள்ளங்கையிலே அடங்கும்படி முடக்கிப் பிடித்துக்கொண்டு குழந்தை கிடக்குமல்லவா? குழந்தைக் கிருஷ்ணனோ, 'ஆனைக் குட்டி கிடக்கிறதோ! ஒரு மேகக்குழந்தைதான் கிடக்கிறதோ!' என்று அதிசயிக்குமாறு படுத்திருப்பானாம்.

'அந்தக் கிடக்கை யழகைக் காணப் பெற்றே னில்லையே'! என்கிறாள் தேவகி;

Koviloor Digital Library

கிடக்கை கண்டிடப் பெற்றிலேன் அந்தோ!
கேச வாகெடு வேன், கெடு வேனே!

'கெடுவேன், கெடுவேனே!' என்று இருமுறை சொல்லுகிறா ளல்லவா? 'முன்பு மலடு நின்று இழந்தேன்; பின்பு பெற்றுவைத்தே அநுபவிக்கப் பெறாதே இழந்தேன்; இரண்டானும் மகாபாபியிறே நான்' என்பது வியாக்கியானம்.

குழந்தையை எடுத்து மடியில் வைத்துக்கொண்டு, 'கண்மணியே! என் அப்பனே!, என் செல்வமே!' என்றெல்லாம் கொஞ்சி, 'உன் அப்பா யார்? காட்டு' என்று கேட்பார்கள். அப்போது குழந்தை தன் விரலால் மட்டுமா அப்பாவைச் சுட்டிக் காட்டும்? விரலாலும் கடைக் கண்ணாலும் காட்டுமல்லவா? இந்த நினைவு வருகிறது. தேவகிக்கு.

ஆனால் குழந்தைக் கிருஷ்ணன் பெற்ற தகப்பனாகிய வசுதேவனை அப்படிச் சுட்டிக்காட்ட முடியாதே; நந்த கோபனையல்லவா தந்தையாகக் காட்டியிருப்பான்!

உந்தை யாவன்என்(று) உரைப்ப,நின் செங்கேழ்
விரலி னும், கடைக் கண்ணினும் காட்ட
நந்தன் பெற்றனன்; நல்வினை இல்லா
நங்கள் கோன்வசு தேவன்பெற் றிலனே!

(உந்தை யாவன் - உன் தந்தை யார். என்று உரைப்ப - காட்டு என்று சொன்னதும். நின் செங்கேழ் விரலினும் - உன்னுடைய சிவந்து சிறந்த விரலினாலும். நங்கள்கோன் - என்னுடைய கணவன்.)

'பாவியான என்னைக் கைப்பிடித்த கொடுமையால் வசுதேவன் அந்த இன்பத்தை இழந்தான். பாக்கியமுள்ள யசோதையைக் கைப்பிடித்த அதிருஷ்டத்தால் நந்தகோபன் அந்தப் பேறு பெற்றான்!' என்ற தேவகியின் வயிற்றெரிச்சலில் குலசேகரரின் கிருஷ்ண பக்தி ஜொலிக்கக் காண்கிறோம்.

'கண்ணன் குழந்தையா யிருக்கும்போது அந்த முகம் பூர்ணசந்திரன்போல் இருக்குமே' என்று எண்ணமிடும் தேவகி,

Koviloor Digital Library

'அந்தக் கைகள் எப்படி இருக்கும்? மார்பு எப்படியிருக்கும்? தோள்கள் எப்படியிருக்கும்? நெற்றி எப்படியிருக்கும்? கண்கள் எப்படியிருக்கும்?' என்றெல்லாம் நினைத்து நினைத்து,

அளவில் பிள்ளைமை இன்பத்தை இழந்த
பாவி யேன்என(து) ஆவிநில் லாதே!

(அளவில் - அளவில்லா.)

என்று புலம்புகிறாள்.

தேவகி தன் கற்பனைக் கண்கொண்டுதான் குழந்தைக் கண்ணனின் விளையாடல்களைப் பார்க்கவேண்டியிருக்கிறது! கண்ணனுடைய நெற்றியிலே சுட்டி என்ற ஓர் அணி காணப்படுகிறது. அந்தச் சுட்டிதான் அந்த நெற்றிக்கு எவ்வளவு இசைவாக அமைந்து விளங்குகிறது!

அந்தச் சுட்டி அசையும்படி அவன் ஆடி அசைந்து வந்து முத்தம் கொடுக்கும்போது, 'இந்த நெற்றியிலே கூடப் பிறந்தாற் போல் இசைந்து அசைகிறதே இந்தச் சுட்டி!' என்று தோன்றுகிறதாம். ஆனால் அவன் இப்போது முத்தம் கொடுப்பது யாருக்கு? - தேவகிக்கா?

'அப்படி நீ உன் அழகிய வாயால் முத்தம் கொடுக்கும் போது, உன்னுடைய தந்தையின் சாயலை நான் உன்னிடம் கண்டுகொண்டு என் உள்ளம் உள்ளே குளிரப் பெற்றிருக்க வேண்டாமா? அப்படி நான் உன் முகத்தை மகிழ்ந்து பார்த்து நிற்கும்போது நீ விரல்களை வாய்க்குள்ளே வைத்துக்கொண்டு கோபத்தோடு என்ன என்னவோ மழலைச் சொற்களைச் சொல்லுவாயே, அந்தச் சொற்களையோ, அந்தக் குழந்தைக்கோபத்தையோ ஒன்றையும் நான் அநுபவிக்கும் பாக்கியம் அற்றவளாகப் போய்விட்டேனே!' என்கிறாள்.

தாய் பாராட்டுவதுகூடப் புரியாமல் குழந்தை கோபித்துக் கொள்கிறானாம். குழந்தை ஏதேதோ வெளியிடப் பார்த்து அது தாய்க்குப் புரியவில்லையென்று கோபித்துக் கொள்வதும் உண்டு. இந்தக் குழந்தை வெகுளியை அநுபவிப்பதும் தாய்க்கு இன்பந்தானே.

Koviloor Digital Library

இந்தக் குழந்தைச் சித்திரம் பொருள் பொதிந்த சின்னஞ்சிறு விவரங்களுடன் எவ்வளவு அழகாய் எவ்வளவு இசைவாய் அமைந்திருக்கிறது பாருங்கள்:

மருவும் நின்திரு நெற்றியில் சுட்டி
அசைத ரமணி வாயிடை முத்தம்
தருதலும், உன்தன் தாதையைப் போலும்
வடிவு கண்டுகொண்(டு) உள்ளம்உள் குளிர,
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து
வெகுளி யாய்நின்(று) உரைக்கும்அவ் வுரையும்
திருவி லேன்ஒன்றும் பெற்றிலேன்; எல்லாம்
தெய்வ நங்கைய சோதைபெற் றாளே!

(மருவும் - பொருந்தி யிருக்கிற. அசைதர - அசையும் படி. மணிவாயிடை - அழகிய வாயினால். தருதலும் - தருவதும். தாதை - தந்தை. செஞ்சிறு வாயிடை - சிவந்த சிறிய வாயிலே. வெகுளியாய் - கோபமாய். திரு இலேன் - பாக்கியம் இல்லாதவளான நான்.)

'திரு இலேன் ஒன்றும் பெற்றிலேன்; எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்றாளே!' என்ற தேவகி வாக்கிலே தூய தாயன்புடன் சற்றுப் பொறாமை கலந்த பெண்மை யுள்ளத்தையும் காண்கிறோம்.

குழந்தையின் கண்ணழகைப் பார்த்துக் கொண்டி ருந்தாலும் கலி தீர்ந்துபோகுமே. செம்மண்ணிலே புழுதி யளைந்து விளையாடுகிறது; அந்தக் கோலத்தோடு வந்து தாய் மார்பைக் கட்டிக்கொள்கிறது. 'அந்தத் தாய், பெற்ற தாயாகிய நான் இல்லையே!' என்று கதறுகிறது தாயுள்ளம்:

தண்ணந் தாமரைக் கண்ணனே! கண்ணா!
தவழ்ந்(து) எழுந்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணில் செம்பொடி ஆடிவந்(து) என்தன்
மார்வில் மன்னிடப் பெற்றிலேன்; அந்தோ!

(தன் அம் தாமரை - குளிர்ந்த அழகிய தாமரை. தளர்ந்தது ஓர் நடையால் - தட்டுத் தடுமாறி நடக்கிற ஓர்

Koviloor Digital Library

நடையால். மண்ணில் செம்பொடி - செம்மண் பொடியில்; சிவந்த புழுதி மண்ணில். ஆடி - விளையாடி. மன்னிட - பொருந்தி அணைய.)

'மக்கள் மெய்தீண்டல் உடற்கு இன்பம்' என்ற அந்த இன்பம் தனக்குக் கொடுத்துவைக்கவில்லையே என்கிறாள். 'இத்தகைய இன்ப அநுபவங்களையெல்லாம் இழக்கும் படியாகக் கொடிய வினையை நான் செய்திருக்கவேண்டும்; ஐயோ!' என்று பெருமூச்சு விடுகிறாள்.

குழந்தைக்குப் பால் கொடுக்கும் அந்த இன்ப அநுபவங்கூடத் தனக்குக் கிடைக்கவில்லையே என்கிறாள்:

குழகனே! என்தன் கோமளப் பிள்ளாய்!
கோவிந் தா!என் குடங்கையில் மன்னி,
ஒழுகு பேரெழில் இளஞ்சிறு தளிர்போல்
ஒருகை யால்ஒரு முலைமுகம் நெருடா,
மழலை மென்னகை இடையிடை அருளா,
வாயி லேமுலை இருக்க,என் முகத்தே
எழில்கொள் நின்திருக் கண்ணிணை நோக்கம்
தன்னை யும்இழந் தேன்இழந் தேனே!

(குழகன் - எல்லாரோடும் இணங்கிப் போகிறவன். கோமளப்பிள்ளாய் - அழகிய பிள்ளையே. குடங்கை - உள்ளங்கை; (இங்கே) முழங்கை. மன்னி - பொருந்தியிருந்து. ஒழுகு பேர் எழில் - பேரழகு ஒழுகுகின்ற; பேரழகு வெள்ள மிடுகிற. நெருடா - நெருடிக்கொண்டு. மென்னகை இடை யிடை அருளா - நடுநடுவே புன்சிரிப்புச் செய்துகொண்டு. எழில்கொள் - அழகிய. நின் திருக்கண் இணை நோக்கம் தன்னையும் - உன்னுடைய இரண்டு கண்களாலும் பார்க்கிற அந்தப் பார்வையையும்.)

யசோதை பெற்ற பேரின்பம்

குலசேகரதேவகியின் மனக்கண்முன் கண்ணன் வெண்ணெய் திருடும் காட்சியும் வருகிறது. திருடித் தப்பிவிடும் காட்சி அல்ல, திருடி அகப்பட்டுக்கொண்ட காட்சிதான்.

Koviloor Digital Library

குடத்திலே வெண்ணெயைப் பார்த்துவிட்டான். 'அம்மா, பக்கத்தில் எங்கேயாவது இருக்கிறாளா?' என்று நாலுபக்கமும் பார்த்துவிட்டுத்தான் வெண்ணெய்க் குடத்தை நெருங்கினான்.

வெண்ணெயில் உண்டான ஆசையால் கை முழுதும் குடத்திலே புகுந்துவிட்டது. ஆழ அமுக்கி எடுத்தாலும் இந்த இளஞ்சிறு தளிர்க்கையில் எவ்வளவு வெண்ணெய் வந்துவிடப்போகிறது!

வெண்ணெயைத் தொட்டுத் தொட்டு அளைந்து அளைந்து சாப்பிடவேணும் என்ற ஆசை. இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருப்பதால் அம்மா வருகிறாளே என்பது தெரியவில்லை.

அவளோ தயிர் கடையும் தாம்புக்கயிற்றுடன் வந்து நிற்கிறாள். அடிப்பதுபோலவும் பாவனை காட்டுகிறாள். குழந்தையோ கூசித் தன்மேல் அடிவிழாமல் ஏய்த்துவிடப் பார்க்கிறான்.

வெண்ணெய் திருடுகிறான் என்றுதானே வந்தாள்? இப்போது கண்ணன் தன்னை நோக்கி முகத்தைத் திருப்பிக் கொண்டதும் வேறொரு திருட்டுக்கும் சாட்சி கிடைத்து விடுகிறது. அதுதான் தயிர்த் திருட்டு.

வெண்தயிர் தோய்ந்த அந்தச் சிவந்த வாயைப் பார்த்து விடுகிறாள். ஏற்கெனவே ஒரு சமயம் தயிர்க்களவைக் கண்டு பிடித்தவள்தான். அப்போது ஒரு சிறு கோலை எடுத்துக் கொண்டாள். அதற்குள்ளே கண்ணன் வருந்தி ஓடித் தயிருண்ட வாயை நன்றாகத் துடைத்துக்கொண்டு தாய்க்கு எதிரே வந்து நின்றுவிட்டான், ஒன்றும் அறியாதவன் போல!

இப்போதோ அப்படிச் செய்வதற்கு அவகாசம் கிடைக்கவில்லை. அவசரமாகத் துடைத்துக்கொள்ள முயன்றதில் கிடைத்த பலன் வாயெங்கும் தயிரைப் பூசிக்கொண்டதுதான்.

தாய் தாம்புக்கயிற்றை ஓங்கியதும் கூசி வருந்தி அழத்தொடங்கிவிடுகிறான். அஞ்சினாற்போல அவளை

Koviloor Digital Library

நோக்குகிறான். அப்பொழுது, 'அந்தச் சிறு வாயை நெளிப்பதே எவ்வளவு அழகாயிருக்கிறது!' என்று ஈடுபடு கிறாள் குலசேகர தேவகி.

அந்தச் சிவந்த அழகிய சிறுவாய் துடிக்க அழுது கொண்டே தாயைக் கும்பிடுகிறான். அப்படித் தாய்க்குக் கோபம் வந்துவிட்டதா, என்ன?

அந்த அழுகையும் தொழுகையும், அஞ்சி நோக்கும் அந்த நோக்கும், அணிகொள் செஞ்சிறு வாய் நெளிப்பதுவும் ஆகிய குழந்தைநாடகம் கண்டு ஒரே இன்பந்தான்!

குழந்தை யின்பம் தாய்க்குப் பேரின்பந்தானே? ஆனால் இந்த இன்பத்தை, பெற்ற தாயான தேவகி அநுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லை. கொடுத்துவைத்த பரம பாக்கிய சாலியான யசோதை கண்ணனின் அந்தப் பால லீலையை அப்படியே அநுபவித்துக்கொண்டு பரமானந்த சிகரத்தில் நிற்பதைத் தன் அகக்கண்ணுக்கு எதிரே பார்த்துவிடுகிறாள்.

இத்திருமொழிப் பகுதியின் சிகரமான பாட்டு இது; குலசேகரர் கவிதையின் பொற்சிகரங்களில் ஒன்று:

முழுதும் வெண்ணெய் அளைந்துதொட்(டு) உண்ணும்
முகிழ்இ ளஞ்சிறுத் தாமரைக் கையும்
எழில்கொள் தாம்புகொண்(டு) அடிப்பதற்(கு) எள்கு
நிலையும், வெண்தயிர் தோய்ந்தசெவ் வாயும்,
அழுகை யும், அஞ்சி நோக்கும்அந் நோக்கும்.
அணிகொள் செஞ்சிறு வாய்நெளிப் பதுவும்,
தொழுகை யும்;இவை கண்ட அசோதை
தொல்லை இன்பத்(து) இறுதிகண் டாளே!

(முகிழ் இளந்தாமரை - தாமரை மொட்டு. எள்கு நிலை - கூசி வருந்தி நிற்கும் நிலை. அணிகொள் - அழகிய. தொல்லை இன்பம் - பரமபத இன்பம்; பரமானந்தம்.)

'பிள்ளையின் விளையாட்டுகளில் ஒன்றையும் என் நெஞ்சு குளிர நான் கண்ணாரக் காணப் பெற்றேனில்லையே!' என்று துடிக்கிறாள் தேவகி. அந்தக் குழந்தைப் பருவம் கடந்த

Koviloor Digital Library

நிலையில்தான் இப்போது கண்ணனைக் காண்கிறாள். 'அந்தச் சேஷ்டைகளை யசோதைக்குக் காட்டினையே; பாவியேன் கண்ணுக்கு நீ ஒன்றையும் காட்டவில்லையே!' என்கிறாள்.

'நடந்து கழிந்துபோன அந்த லீலைகளை யெல்லாம் தனக்காக மறுபடியும் ஒரு தடவை அவன் செய்து காட்டக் கூடுமோ?' என்று அலந்து கிடக்கிறது தாயுள்ளம். ஆனால் அணை கடந்த காலவெள்ளம் அது!

தாயின் கண்ணீர் தமிழாகிறது!

பெற்ற தாய்போல் வந்து விஷப்பால் ஊட்ட முயன்ற அந்தப் பேய்மகளின் நினைவும் வருகிறது. 'அந்தப் பாலை உண்டும் நீ உயிர் தப்பிப் பிழைத்து இப்படி வளர்ந்திருக்கிறாய்; என்மேல் கிருபை செய்துதானே?' என்று ஆச்சரியப்படுகிறாள். அந்தப் பேய்மகளின் பாலைக் கண்ணன் சுவைத்து உண்பதை அப்படியே பிரத்தியட்சமாகக் காண்பதுபோல் உடல்நடுங்க, 'அந்தோ!' என்கிறாள்.

'அப்பா, கண்ணா! உன்னை ஒழிய எனக்கு வேறு புகல் ஏது? என்றைக்காவது உன்னைக் கண்ணால் காணலாம் என்ற ஆசையால்தான் இந்தப் பிராணனை வலியப் பிடித்துவைத்துக் கொண்டிருக்கிறேன். என்ன, கண்ணா! உனக்குப் பால் வேணுமானால் என்னையும் விட்டு, யசோதையையும் விட்டு அந்தப் பேய்மகளைப் பிடித்துக்கொண்டாயே!' என்றெல்லாம் கொஞ்சுகிறாள்.

பாக்கியம் பண்ணின யசோதையைத் 'தெய்வ நங்கை யசோதை' என்று குறிப்பிட்டாள் தேவகி. அந்தப் பாக்கியம் தனக்குக் கிடைக்கவில்லையே என்று புலம்பிய தேவகியைத் 'தெய்வத் தேவகி' என்று கொண்டாடுகிறது, இப்பதிகத்தின் பலச்ருதிப் பாட்டு.

தெய்வத் தேவகியின் ஆவேச பீடமாகி அவள் புலம்பிய புலம்பலை, முத்து முத்தாய்க் கோத்த அந்தக் கண்ணீர் மாலையுடன் 'நல்லிசைத் தமிழ் மாலை' யாகக் கோத்து நமக்குத் தந்திருக்கிறார் குலசேகரர்.

Koviloor Digital Library

15. யாத்திரை பூர்த்தியானது

குலசேகரர் இளவரசாக இருந்த காலத்திலே நால்வகைச் சேனையுடன் தமது தலைநகரை விட்டுப் புறப்பட்டுப் போய்ச் சோழனையும் பாண்டியனையும் வேறு அரசர்களையும் வென்று அவர்களைத் தமது ஆட்சிக்கு உட்படுத்திக்கொண்டார் என்று கருதலாம். சேரநாடு, சோழ நாடு, பாண்டி நாடு ஆகிய தமிழ் நாடுகள் மூன்றுக்கும் இவர் தலைமை பூண்டிருந்தார் என்பதற்கு,

கொல்லி காவலன் கூடல் நாயகன்
கோழிக் கோன்குல சேகரன்

என்ற விருதுகளைச் சான்றாகக் காட்டலாம்.

அந்தத் திக்விஜய யாத்திரையில் இவர் திருவரங்கத்தைப் பார்த்திருக்கக்கூடும். சோழர் தலைநகராகிய உறையூரைக் கைப்பற்றிக் கொண்டபோது அருகிலுள்ள திருவரங்கத்தைப் பார்க்காமலா இருந்திருப்பார்?

உணர்ச்சி யுலகின் ராஜதானி

ஆனால் போர் வீரரான குலசேகரர் அந்த வெறியிலே அவசரமாகப் பார்த்து வந்த திருவரங்கம் வேறு; பின்னாளில் திருவரங்கத்திலிருந்து தம் தலைநகருக்கு வந்து சேர்ந்த அடியார்கள் வாயிலாக இவர் தெரிந்துகொண்ட திருவரங்கம் வேறு. ராமாவதார, கிருஷ்ணாவதாரங்களில் அந்த அடியார் களின் கூட்டுறவால் இவருக்கு ஈடுபாடு ஏற்பட்டதுபோல் இறைவனது அர்ச்சாவதாரம் (விக்கிரக வழிபாடு) உள்ள திவ்யஸ்தலங்களில் திருவரங்கத்தின்மீது காதல், வெள்ளமாகப் பெருகலாயிற்று.

Koviloor Digital Library

ராமாயண காலட்சேபத்தையே பொழுது போக்காகக் கொண்டிருந்த காலத்திலும் அந்த ராமனைச் சயனத் திருக்கோலத்திலே தரிசிக்க வேண்டும் என்ற ஆசைக்குக் குறைவில்லை. ஏழு மராமரங்களை ஒருங்கே துளைபடச் செய்தது, அரக்கர்களை அழித்தது முதலான வீரச் செயல்கள் செய்த களைப்பு நீங்கும்படி காவிரியாறு அடிவருட அரங்க நகரில் அந்த ராமன் போய்க் கண் வளர்வதாகவே இவருக்கு எண்ணம்.

ஸ்ரீ கிருஷ்ண சரித்திரத்தில் ஈடுபட்டிருக்கும்போதும் திருவரங்கத்தின் நினைவிற்குக் குறைவே இல்லை. அந்த ராஜகோபாலன் பால லீலைகள் பல செய்தும், துஷ்ட அசுரர்களை வதைத்தும், பசுக்களை மேய்த்தும், நப்பின்னையை மணந்து கொள்வதற்காக ஏழு காளை மாடுகளை வலியடக்கியும் களைத்துப் போயிருப்பா னல்லவா? சிரமபரிகாரமாக அரங்க நகரில் வந்து கண் வளர்கிறான் என்றே இவர் நம்பியதாகக் கருதலாம்.

பகவானுடைய திவ்ய சரித்திரங்களைக் கேட்பதில் ஆசை கொண்டிருந்த குலசேகரர் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தின் மகிமை குறித்த ஸ்தல புராணக் கதைகளையும் கேட்டிருக்க வேண்டும். அரங்கன் திருமுற்றத்தில் அடியார்கள் ஆடிப்பாடி ஆனந்த பஜனை செய்வது குறித்த செய்தியை விவரமாகக் கேள்விபட்டிருக்க வேண்டும்.

திருவரங்கம் நோக்கிப் பிரயாணப்படுவோம் என்று தீர்மானித்ததும் சோதனையாக அரசியல் தொல்லைகள் பல ஏற்பட்டன என்று ஊகிப்பது சரியே. 'நாளைப் போவேன், நாளைப் போவேன்!' என்று நாள் தோறும் தீர்மானம் செய்துகொண்டேயிருந்தவருக்கு, 'நாளை' என்பது ஒரு போதும் வாராதோ?' என்ற எண்ணமும் தோன்றியிருக்கக் கூடும்.

Koviloor Digital Library

'நமது அரசர், தலைநகரை விட்டுத் திருவரங்கம் போய் அந்தப் பெருமாளையும் அந்த அடியார்களையும் பார்த்து விட்டால் திரும்பி வருவது அரிது!' என்ற எண்ணத்துடன் அமைச்சர்கள் அந்த யாத்திரையைத் தடுப்பதற்குச் செய்த முயற்சிகளும் சூழ்ச்சிகளும் அந்த யாத்திரைக்கே பெருந் தூண்டுகோலாயின.

இவர் கண்கள் எதிரே நின்ற அமைச்சர்களையும் பிறரையும் பார்த்ததைக் காட்டிலும், இவரது அகக்கண் அரங்கநகர் அப்பனைத் தெளிவாகப் பார்க்கத் தொடங்கியது. தமது கொல்லிநகர் என்ற ராஜதானியைக் காட்டிலும் அந்த ஸ்ரீ வைஷ்ணவ ராஜதானியாகிய திருவரங்கப் பெருநகர், தான் அணிந்திருக்கும் அழகிய காவிரி மாலையுடன், தெளிவாகத் தோற்றமளித்தது; 'வா, வா' என்று சொல்லிக்கொண்டே இவர் ஊருக்கு ஓடிவந்துவிட்டது!

அந்த மானஸிகப் பெருநகரில் அந்தக் காவிரி மாலைக்கு இடையே ஒளிரும் கருமணியைக் கோமளத்தை மனம் உருகி உருகிப் பாடுகிறார்.

கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்(டு)என்
கண்இணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே?

என்று பாடிப் புறக் கண்களால் தரிசிக்கும் பேறு விரைவில் கிடைக்குமாறு அழகிய மணவாளன் அருள்புரிய வேணுமென்று பிரார்த்திக்கிறார்.

சர்ப்ப சயனக் காட்சி

அந்தச் சயனத் திருக்கோலத்தில் ஈடுபடுகின்ற உள்ளம், கடல்அலைகள் அடிவருடக் கண்வளரும் அழகனைப் பொய்கையாழ்வார் கண்டுகொண்டதுபோல், காவிரியாறு தன் அலைகளாகிற கைகளால் அடிவருடப் பள்ளிகொள்ளும் இந்த அழகனைக் கண்டு பேறு பெற ஆசைப்படுகிறது: அவர்

Koviloor Digital Library

கண்டது தியானக் காட்சிதான். இவரோ நேரில் போய்ப் பிரத்தியட்சமாகத் தரிசிக்க ஆசைப்படுகிறார்.

அவரைப்போல் இவரும் அரவணைமேல் (அனந்த சயனத்தின்மீது) தம் அழகனைக் கண்டு களிக்க விரும்புகிறார். அவர் வருணிக்காத சர்ப்ப சயனத்தை இவர் எவ்வளவு தெளிவாக அகக் கண்ணால் கண்டு வருணிக்கிறார்!

அனந்தன் என்ற அறிவுப் பெருஞ்சோதியைத்தான் சர்ப்பராஜாவாகிய ஆதிசேஷன் என்று சொல்லுகிறார்கள். ஆயிரம் தலையும் இரண்டாயிரம் நாவும் அனந்த ஞானத்திற்கு அறிகுறி. ஒவ்வொரு தலையிலும் ஒரு மாணிக்க மணி; ஒரு மணியின் சுடரே இருள் அனைத்தையும் புறங்காட்டி ஓடச் செய்கிறதாம்.

அனந்தன் என்ற பெருஞ்சோதியை மெத்தையாகக் கொண்டு கண் வளரும் பரம்பொருளைப் பரமபதக் காட்சியாகப் பார்ப்பதைக் காட்டிலும் திருவரங்கத்திலே பார்ப்பதில் இவருக்கு ஆசை அதிகம். 'இருள்தரு மாஞாலம்' என்று சொல்லப்படும் இவ்வுலகத்திலே திருவரங்கத்தில் கண்வளரும் ஜோதி இவர் கண்ணையோ கருத்தையோ கூசச் செய்யாமல் இருட்டறையில் விளக்குப்போல் இனிது விளங்குமல்லவா?

குலசேகரரின் மனோபாவம் மேலே மேலே பறக்கிறது. சுத்தமான ஸத்வகுணத்திற்கும் ஸாத்விக தர்மத்திற்கும் ஓர் அறிகுறியாகப் பால்போல் வெளுத்திருக்கும் அனந்தன் உடம்பிலே 'கருமணி' யைச் சயன நிலையில் காண விரும்பு கிறார் இவர்.

இந்தக் 'கருமணியைக் கோமளத்தை' (ஸத்யமாகவும் ஸௌந்தர்யமாகவும் திகழும் பரம்பொருளை)ப் பாது காப்பதில் தான் எவ்வளவு சிரத்தை அனந்தனுக்கு! அசுர ராட்சச

Koviloor Digital Library

இருள் அணுக முடியாதபடி எப்போதும் வாயிலிருந்து செந்தீயைக் கக்கிக் கொண்டிருக்கிறானாம்.

இந்த அக்கினிச் சுவாலை அனந்தனுடைய தலைகள் மேல் கிளம்பி அங்கிருந்து பரவி, 'அழியாத செம்மலர்களால் ஒரு மேற்கட்டி கட்டியிருக்கிறதோ பள்ளி கொண்ட பெருமாளுக்கு!' என்று பிரமிக்குமாறு தோற்றம் அளிக்கிற தாம்.

ஒரே நெருப்பாக ஜொலிக்கும் இந்த மேற்கட்டியின் கீழ், நீல மலர் மாலையொன்று வாடாத அழகுடன் கிடப்பதுபோல் கிடக்கிறானாம் அழகிய மணவாளன். இவனைச் சூழ்ந்து காக்கும் சுடர்ச்சுவாலை துஷ்டர்களுக்குத் தீ; சூது வாது களையும் கள்ளங் கவடுகளையும் சுட்டெரிக்கும் தீ; மெய்யன்பர்களுக்கோ எத்தனையோ உண்மைகளை, ரகசியங்களை, தெய்வீக அழகுகளைக் காட்டும் ஞானாக்கினி!

இந்த நிலையில் அழகிய மணவாளனைச் சேவிக்கும் போது இந்த அன்பருள்ளம் ஒரே பக்தி பரவசமாகிவிடும் அல்லவா? நெஞ்சுருகிக் கண் சுழல, தரித்து நிற்க முடியாத நிலையும் ஏற்படுமாம். 'அப்போது அழகிய மண வாளனுடைய திருக்கண்நோக்கத்தில் உள்ள திருமணத் தூண்கள் இரண்டையும் பற்றிக்கொண்டு தரித்து நிற்பேன்!' என்கிறார்.

அழ்கிய மணவாளனது அருள் நோக்காகிய அமுதப் பெருவெள்ளம், அநுபவிக்க இறங்கிய அன்பர்களை நிலையாக நின்று அநுபவிக்க முடியாதபடி அசைத்துத் தூக்கித் தள்ளுகிறதாம்; அப்போது அவர்கள் பற்றிக்கொண்டு நிற்பதற்காக நாட்டியிருக்கும் இரண்டு தூண்கள்போல நிற்கின்றன திருமணத் தூண்கள் இரண்டும்! பகவானது நீல மலர் மாலை போன்ற அழகுமேனியின் திருமணமே இரண்டு தூண்களாக உருவெடுத்து நிற்பதாகக் கூறுவதுண்டு.

Koviloor Digital Library

இறைவனது அழகு வெள்ளத்தை அநுபவிக்கும்போது அடியவர்களோடு சேர்ந்து அநுபவிக்கவேண்டும் என்பது குலசேகரரின் ஆசை.

> அடியவரோ(டு) என்று கொலோ
> அணுகும் நாளே?

(அணுகும் நாள் - நெருங்கி வாழும் நாள். என்றுகொலோ - என்றைக்கோ.)

என்று இவர் தம்மைத்தாமே கேட்டுக்கொள்ளும் கேள்வியில், திருமணத் தூணைப் பற்றிக்கொண்டு அழகு வெள்ளத்தையும் அருள் வெள்ளத்தையும் அநுபவிக்கும்போது அடியவர்களை யும் பற்றி நிற்பது நலம்; அது நிலையும் நீச்சும் கடந்த அந்த வெள்ளத்தை அச்சமின்றி அநுபவிப்பதற்கு வசதி அளிக்கும் என்பது குறிப்பு.

குலசேகரர் மானஸிகமாகக் காணும் திருவரங்கம் பெரிய கோயிலில் மக்களோடு பிரமன் முதலிய தேவர்களும் நெருக்கிக் கலந்து வழிபாடு செய்கிறார்களாம். அவர்கள் கண்ணாரக் கண்டு களிக்கிறார்கள், வாயார வாழ்த்து கிறார்கள். பிரமதேவன் தன்னுடைய நான்கு நாவினாலும் துதிக்கிறானாம்; தன்னுடைய எட்டுக் கண்களாலும் பெருமாளின் அழகை எல்லாப் பக்கங்களிலும் கண்டு களிக்கிறானாம்.

'நான்முகனுடைய பாக்கியமே பாக்கியம்; அவன் நான்கு நாவினாலும் நான்கு முகம் கொண்டு வாழ்த்துகிறானே; அந்தப் பேறு ஒரு முகமும் ஒரு நாவும் உடைய நமக்குக் கிடைப்பது அரிதாகுமே!' என்கிறார் குலசேகரர். மேலும் வாக்குத் தேவியைப் பிரமன் தன் மனைவியாகக் கொண்டிருப்பதால் பகவானைத் துதிப்பதற்கு வேண்டிய வாக்குப் பிரவாகமும் அவனுக்கு எளிதாகக் கிடைத்து விடுகிறதாம்.

Koviloor Digital Library

அத்தகைய பெரிய கோயிலில் ஆனந்தன்மீது சாய்ந்தருளும் பெரிய பெருமாளை ஆராதிக்கும் அடியவர்களின் பாக்கியத்தைத்தான் என்னென்பது? தனிப்பெரும் பணிவுடன் சரணாகதி செய்து ஆராதிப்பவர்களாதலால் தேவர்களைக் காட்டிலும் நிலத் தேவர்களான அடியார்கள் பாக்கியசாலிகள் என்பது குலசேகரர் கருத்து.

ஸ்ரீகிருஷ்ணாவதாரத்திலே அரங்க நகரப்பன் செய்தருளிய துஷ்டநிக்கிரக லீலைகள் நினைவிற்கு வருகின்றன. கோவர்த்தனக் குன்றைக் குடையாக ஏந்திப் பசுக்களையும் கோபாலர்களையும் காப்பாற்றியது போன்ற லோகோபகார லீலைகளும் நினைவிற்கு வருகின்றன. அந்தக் கண்ணனே திருவரங்கத்தில் கடல் வண்ணனாகப் பள்ளிகொண்டிருக்கிறானாம்.

தெய்வக் காதலும் தமிழ்க் காதலும்

கடலைக் கண்டதும் தாபம் தீர்ந்து கண்ணும் கருத்தும் குளிர்ச்சி அடைவதுபோல் அழகுக் கடலாகிய அழகிய மணவாளனைக் கண்டதும் தமது ஆத்ம தாபம் தீர்ந்து போகும் என்கிறார். அந்தப் பேரின்பத்திற்கு உபமானமாகத் தமிழ்ப் பாட்டின் இன்பத்தைத்தான் சொல்ல முடியும் என்கிறார்.

பக்திக் காதல்போல் தமிழ்க் காதலும் குலசேகரருக்கு உண்டு. 'அந்தமிழின் இன்பப் பாவினை' என்று அழகிய மணவாளனைக் குறிப்பிடுகிறார். தமிழ்க் கவிதை யின்பத்தை எப்படி அநுபவித்திருக்கிறார் குலசேகரர்! தாமும் அழகிய தமிழ்மொழியின் இன்பப் பாடல்களைக் கொண்டுதானே இறைவனை ஆராதிக்கிறார்?

குலசேகரர் தமிழின்பத்திற்கு அடுத்தபடியாக வடமொழியையும் பாராட்டுகிறவர். தம் இஷ்டமூர்த்தியை, 'அந்தமிழின் இன்பப் பாவினை' என்று கூறுவதுபோல் 'அவ்வட மொழியை' என்றும் போற்றுகிறார். தமிழ்ப்

Koviloor Digital Library

பாடல்கள்போல் வடமொழியிலுள்ள ஸ்ரீராமாயணம் முதலிய நூல்களும் இவருள்ளத்தைக் கவர்ந்தன என்பது குறிப்பு.

வேத நூல்களாகிற தோத்திரங்களால் பிரமதேவன் துதிக்கிறானாம். வீணாகானத்தால் தும்புரு நாரத முனிவர்கள் துதிக்கிறார்களாம். குலசேகரரோ அழகிய மலர்களை இறைவன் அடிமலர்களில் இட்டும், வாடாத இன்பத் தமிழ் மலர்களைச் சூட்டியும் வழிபட விரும்புகிறார்.

நாமும் பூமாலையால் தமது முடியை அணிசெய்து கொண்டு அந்த மணிவண்ணனின் மலரடிகளில் வணங்க ஆசைப்படுகிறார். காதலன் உகப்பிற்காகக் காதலி தன்னை அழகு செய்துகொள்வது போலத்தான் பக்தர்களும் பகவானை வழிபடும் போது தங்களை அணிசெய்து கொள்கிறார்கள்.

இவரது மானஸக ஸ்ரீரங்கத்திலே தெளிந்த ஞானமுள்ள வர்களும் பலனைக் கருதி வழிபாடு செய்கிறவர்களும் ஒருவரையொருவர் நெருக்கித் தள்ளிக்கொண்டு பகவானை ஆராதிக்கிறார்களாம். தேவர்கள் தங்கள் பதவிகளும் போகமும் நீங்காமல் இருக்க வேண்டுமேயென்று வழிபடுகிறார்கள். பரமஞானிகள் தங்கள் ஞான சம்பத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்கிற பெருநோக்குடன் வழிபடுகிறார்கள். ரம்பை முதலிய தேவ மாதர்கள் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள அழகிய மண வாளனை வழிபடுகிறார்கள்.

அவர்களெல்லாம் சோலை சூழ்ந்த கோயிலுக்கு வரும்போது உபய காவேரிக்கு நடுவேயுள்ள அந்த ஸ்தலம் முழுமையும் புண்ணிய பூமியென்று கருதி, பார்த்த பார்த்த இடமெங்கும் மலர்களை வாரி இறைக்கிறார்களாம். அந்தக் கூட்டத்திலே, 'அடியேனும் நெருக்குண்டேன், தள்ளுண்டேன்' என்ற அநுபவம் பெறுவதற்கு ஆசைப் படுகிறார் குலசேகரர்.

Koviloor Digital Library

அவர்களெல்லாம் பசியன் விலையுயர்ந்த முத்துக்களை உணவுக்கு மாற்றிக்கொள்வதுபோல் தாம் தாம் விரும்பிய விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கிறார்கள். குலசேகரருக்கோ பகவானுடைய அழகிய கண்களையும் திருமுக மண்டலத்தையும் கண்ணாரக் கண்டு உள்ளம் உருகப் பெறுவது தவிர வேறு நோக்கம் கிடையாது. 'கடல் வண்ணர் கமலக் கண்ணும், ஒளிமதிசேர் திருமுகமும் கண்டுகொண்டு, என் உள்ளம் மிக என்றுகொலோ உருகும் நாளே?' என்பதுதான் இவர் ஆசை.

தொண்டர் மீது காதல்

தொண்டர்களுக்குப் பக்தியும் தொண்டும் தவிர வேறு நோக்கம் இல்லாததால் அவர்கள் சாதனங்களையோ உபாயங்களையோ நாடுவதில்லை. 'இந்திரிய ஜயம் செய்ய வேண்டுமே? வஞ்சமும் கொடுமையும் உள்ள மனத்தை ஒழிக்க வேண்டுமே' என்றுகூட இவர்கள் சாதனங்களை மேற்கொள்வதில்லை.

இறைவனைத் துதிக்கும் இன்பத்தோடு இன்பமாகவே இந்திரிய ஜயமும் இவர்களுக்குக் கைகூடுகிறது. 'மறம் திகழும் மனம்' தானே ஒழிந்து 'அறம் திகழும் மன' மாகிறது. வஞ்சம் மாறிக் குழந்தையுள்ளம் வந்துவிடுகிறது. வன்புலன்கள் பட்டி மேயாது தாமே அடங்கிப் பணிபுரிகின்றன.

இந்த நிலையில் துன்பத்தின் சுமையை உதறித் தள்ளுவது எளிதாகிறது. இந்தத் தொண்டர் நெறியை 'எல்லையில்லாத் தொன்னெறி' என்கிறார் குலசேகரர்.

இந்த நெறியில் நிலை நிற்பது தொண்டர்குலம். இக்கூட்டத்தினருக்குத் கதியாவான் இறைவனே. இத் தொண்டர்கள் தனிமையாகப் பக்தி செய்வதைக் காட்டிலும் கூட்டமாகத் தொழுவதில் பெரு விருப்பம் உள்ளவர்கள். இத்திருக்கூட்டத்தைத்தான் அணி அரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள் 'இன்பமிகு பெருங்குழுவு' என்று குலசேகரர் குறிப்பிடுகிறார்.

Koviloor Digital Library

பகவானது அருட்செல்வம் தவிர வேறு செல்வம் இல்லாதவர்களும், பல்வேறு வகுப்பினருமான ஒரு கூட்டந்திலே அரசர் கோனாக முடி சூடப் பெற்றிருந்த குலசேகரரும் புகுவதென்றால், பிறர் என்ன நினைப்பார்கள் என்பது ஒருபுறம் இருக்க இவருள்ளந்தான் இசைந்திருக்க முடியுமா? திருவரங்க யாத்திரையில் விருப்பம் அதிகரிக்க அதிகரிக்க அந்த அடியார் குழுவுடன் இசைந்து கலந்து அங்கேயே அவர்களுடனேயே தங்கிவிட வேண்டும் என்று தீர்மானித்துவிடுகிறார்.

உண்மையில், திருவரங்க யாத்திரையின் பெருநோக்கம் ஸ்ரீரங்கநாதனைக் கண்ணாரக் கண்டு வழிபடுவது மட்டும் அல்ல; இந்தக் காதலுடன் அந்தத் திருமுற்றத்து அடியார்களுடைய நட்புக் காதலுக்கும் உடையராகி அவர்களுக்குப் பணிபுரிவதும்தான்.

அடிசூடும் அரசுதான் இவர் விரும்பிய பேரரசு; ஆரம்பத்திலே விரும்பியது இறைவன் அடிசூடும் அரசு. ஆனால்,

நாத்த ழும்பெழ 'நாரணா!' என்(று)
அழைத்து மெய்தழும் பத்தொழு(து)
ஏத்தி இன்புறும் தொண்டர் சேவடி
ஏத்தி வாழ்த்தும் என்நெஞ் சமே!

(நாத்தழும்பு எழ நாரணா என்று - 'நாராயணா! நாராயணா!' என்று நாக்கில் தழும்பு உண்டாகும்படி பல தடவை கூப்பிட்டு. மெய் தழும்பத் தொழுது - உடம்பில் தழும்பு ஏற்படும்படி தொழுது. ஏத்தி - தோத்திரம் செய்து. சேவடி - திருவடிகளை.) என்று இவர் கூறுவதால் கடைசியாக அடியார்களின் அடிசூடும் அரசு பெறுவதே இவரது தனிப்பெரு நோக்கம் எனக் கருதலாம்.

Koviloor Digital Library

16. குலசேகரப் பெருமாளும் சேரமான் பெருமாளும்

மலை நாடாகிய சேர நாடு திருமாலின் மெய்யடியாரான ஆழ்வார் ஒருவரைத் தந்ததுபோல் சிவநேசச் செல்வரான சேரமான் பெருமாள் நாயனாரையும் தந்து பேறுபெற்றிருக்கிறது. குலசேகராழ்வாரைக் குலசேகரப் பெருமாள் என்று சொல்வதுபோல் பெருமாக் கோதையார் என்ற் பிள்ளைப் பெயர் பெற்றிருந்த சிவநேசச் செல்வரையும் சேரமான் பெருமாள் என்று கூறுவதுண்டு.

ஒற்றுமையும் வேற்றுமையும்

சேரமான் பெருமாளும் பேராண்மையுள்ளவர்; பெருங் கொடை நலமும் உடையவர். குலசேகரரைப்போல் அடியார்கள்மீது பேரன்பு கொண்டவர். பாணபத்திரர் என்ற அடியார் மதுரையிலிருந்து வந்துசேர்ந்ததும் சேரமான் பெருமாள் தலைமீது குவித்த கையினராய் எதிர்கொண்டு வந்து வணங்கினார். அந்த அடியாரைத் தமது அரண்மனையில் பல நாள் வைத்துக்கொண்டு விருந்து செய்து வேண்டிய அளவு பொருள் கொடுத்து உதவினார்.

சேரமான் பெருமாள் யானைமேல் ஏறி நகர்வலம் வரும்போது வண்ணான் ஒருவன் உவர்மண் மூட்டையைச் சுமந்து கொண்டு எதிரே வந்தான். மழையில் நனைந்த உவர்மண் ஒழுகி அவன் உடம்பை வெளுத்த வடிவாகச் செய்திருந்தது. சிவ பக்தரான சேரமான் பெருமாளின் கண்களுக்கு அந்தத் தோற்றம் திருநீற்றைத் தூளாகப் பூசிக்கொண்டிருந்த சிவனடியாரின் திருக்கோலத்தை

Koviloor Digital Library

ஒத்திருந்தது. உடனே சேரமான் பெருமாள் யானையிலின்றும் இறங்கி விரைந்து சென்று அவனைக் கைதொழுதார்.

சேரர்பெருமான் தன்னைத் தொழக் கண்டதும் சிந்தை கலங்கிய வண்ணான் அரசரை வணங்கி, 'அடியேனை யாரென்று எண்ணிவிட்டீர்கள்? அடியேன் அடி வண்ணான் (அடிமை வண்ணான்)' என்றான். சேரர்பிரானும், 'அடியேன் அடிச்சேரன் (அடிமையான சேரன்). திருநீற்றுக் கோலத்தை நினைப்பித்தீர்; வருந்தாது செல்வீர்' என்று பதில் சொன்னார். குலசேகரர் திருமால் அடியார்மீது கொண்டிருந்த அளவற்ற நம்பிக்கையையும், பக்தியையும் சேரமான் பெருமாளின் இந்த வரலாறும் நினைவூட்டுகிறதல்லவா?

சேரமான் பெருமாள் சிவபெருமானிடத்தும் சிவனடியாரிடத்தும் பேரன்பு பூண்டவராயிருந்ததை அமைச்சர் முதலாயினோர் வியந்து பாராட்டினார்கள். குலசேகரப் பெருமாளின் அமைச்சர்களோ இவருள்ளத்திலே அடியார்கள் மீது வெறுப்பு உண்டாக்கும் முயற்சிகளை மேற்கொண்டார்கள். அதனால்தான் குலசேகரர் முடிசூடும் அரசைத் துறந்தால் ஒழிய அடிசூடும் அரசில் ஊன்றி நிற்க முடியாது எனத் துணிந்தார். சேரமான் பெருமாளோ சிவத்தொண்டிற்குச் சிறிதும் குறைவின்றி ஆட்சி நடத்துவதை மேற் கொண்டிருந்தார்.

குலசேகரப்பெருமாள் அடியார்களையே நண்பர்களாகக் கொண்டிருந்தார். 'எந்தப் பிறவியிலும் தொண்டர்கள்மீது காதலை எனக்கு அருளவேண்டும்' என்று பகவானைப் பிரார்த்தித்தார். சேரமான் பெருமாளும் அடியவர்களின் நட்புக் காதலைப் பெரிதும் போற்றி வாழ்ந்ததால்தான் இவருக்கும் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் பெருநட்பு உண்டாயிற்று.

சுந்தரமூர்த்தி நாயனாருடன் சேரமான் பெருமாள் இறைவழிபாடு செய்வதை விரும்பிப் பல சிவப்பதிகளான திருப்பதிகளுக்கும் சுந்தரமூர்த்தி அடிகளுடன் சென்றார். அப்படியே குலசேகரரும் தொண்டரடிப்பொடியார் முத

Koviloor Digital Library

லானவர்களுடன் சேர்ந்து திருவரங்கம் பெரிய கோயிலில் இறைவழிபாடு செய்தாரென்று ஊகிக்கலாம்.

குலசேகரர் பெருமாள் திருமொழிப் பதிகங்களைப் பொதுவாகத் தமிழிலக்கியத்திற்கும் சிறப்பாகப் பக்தி இலக்கியத்திற்கும் தந்து தாய் மொழியையும் பக்தி நெறியையும் ஒருங்கே வளமுறச் செய்திருக்கிறாரல்லவா? அப்படியே சேரமான் பெருமாளும் பக்தி கொழிக்கத் தமிழ் செழிக்கப் 'பொன் வண்ணத்தந்தாதி', 'திருவாரூர் மும்மணிக் கோவை', 'திருக்கயிலாய ஞானவுலா' என்ற நூல்களை இயற்றியிருக்கிறார். குலசேகரர் பாசுரங்கள் திவ்யப் பிரபந்தத்தில் இடம் பெற்றிருப்பதுபோல், சேரமான் பெருமாளின் நூல்கள் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றிருக்கின்றன.

இருவருக்கும் உள்ள உறவு

சேரமான் பெருமாளுக்கு முன் சேர நாட்டை ஆண்டவர் குலசேகரர் என்று ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு.மு. இராகவையங்கார் அபிப்பிராயப்படுகிறார். சேரர் குடியில் தோன்றிய 'பெருமாக் கோதையார்' என்ற சேரமான்பெருமாள் சிவபெருமானிடம் பக்தி மிகுதியினால் தொண்டு புரிந்து கொண்டிருந்த காலத்திலே சேர நாட்டைப் பொறையன் என்னும் சேரமன்னன் ஆண்டு வந்ததாகச் சேக்கிழார் தெரிவிக்கிறார். குலசேகரப்பெருமாளைத்தான் 'பொறையன்' என்று சேக்கிழார் குறிப்பிடுகிறாராம்.

'பொறையன்' என்ற சேரர் பெருந்தகை 'தரணி நீத்துத் தவம் சார்ந்த' பின் அமைச்சரும் பிறரும் பெருமாக் கோதையாரை (சேரமான் பெருமாளை)த் தங்கள் மன்னராகத் தேர்ந்தெடுத்தார்கள் என்றும், பெருமாக் கோதையார் தமது சிவத்தொண்டு என்ற அன்பு நிலைமைக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஆட்சியை மேற்கொண்டார் என்றும் சேக்கிழார் தெரிவிக்கிறார். ஆட்சி செய்வதற்கு உரியவர் யார்

Koviloor Digital Library

என்பதை ஆராய்ந்தே அமைச்சர்கள் சேரமான்பெருமானை அழைத்து வந்து முடிசூட்டியதாகவும் 'பெரிய புராணம்' தெரிவிக்கிறது. பொறையனைச் 'செங்கோல் பொறையன்' என்றும் குறிப்பிடுகிறது சேக்கிழார் வாக்கு.

முடிதுறந்த 'பொறையன்' என்ற சேர மன்னரை இன்ன சமயத்தவர் என்று சேக்கிழார் குறிப்பிடவில்லை. இம்மன்னர் 'ஏழு, எட்டாம் நூற்றாண்டினரான திருமங்கை மன்னனுக்குச் சமகாலத்தவராகவும், தம் அரசு துறந்தவராகவும் தெளியப் பட்ட நம் குலசேகரப்பெருமாள்' என்று திரு.மு. இராக வையங்கார் ஊகிப்பது பொருத்தமுடையதே.

குரு பரம்பரை வரலாறுகளில், குலசேகரர் தம் புதல் வருக்கு முடிசூட்டிவிட்டுத் துறவு பூண்ட செய்தியைத்தான் கேட்கிறோம். பின் பட்டம் எய்துவதற்கு உரிமை கொண்டிருந்த சேரமான் பெருமாளையே புதல்வராகக் குருபரம்பரைக் கதைகள் உபசரித்துக் கூறுகின்றன என்று கருதுவதும் தவறாகாது.

குலசேகரர் அரச இன்பம் துறந்து அணியரங்கன் திருமுற்றம் அடைந்து அடியார்களில் ஒருவராகக் கலந்து கொண்டதையே,

தரணி நீத்துத்
தவம் சார்ந்தான்

என்று சேக்கிழார் கூறியிருக்கக்கூடும்.

திருமால் அடியார்கள் 'வாழும் சோம்ப' ராய் அநுஷ்டித்து வந்த பிரபத்தி நிஷ்டையைத் 'தவம்' என்று குறிப்பிடுவதற்கும் ஆதாரம் உண்டு.

சேரமான் பெருமாள் 'மகோதை' என்னும் பெயருள்ள கொடுங்கோளூரில் தோன்றியவர். குலசேகரரின் தலை நகரமோ கொல்லிநகர். 'கொல்லிநகர்க்கு இறை' என்று குலசேகரர் தம்மைத் தாமே கூறிக்கொள்கிறார். சேர

Koviloor Digital Library

வேந்தர்களுக்குப் பழைய துறைமுக நகரம் கொடுங்கோளூர் என்பதும் பாண்டியர்களுக்குக் கொற்கையும் சோழர்களுக்குக் காவிரிப் பூம்பட்டினமும் போலக் கொடுங்கோளூர் தலை நகரத்திற்கு அடுத்தபடியாக மதிக்கப்பெற்ற பேரூர் என்பதும் சரித்திர ஆராய்ச்சி தெரிவிக்கும் செய்திகள்.

சேர நாடு என்பது குடகு மலையாள தேசங்களுடன் கோயம்புத்தூர் சேலம் ஜில்லாக்களையும் அடக்கிக்கொண்ட தமிழகப் பகுதியாகும். வஞ்சிமாநகர் என்ற கருவூரே சேரர் பேரூர் அல்லது தலைநகர். இந்நகரை உள்நாட்டுத் தலைநகராகக் கொண்டிருந்த சேர மன்னர்கள், தங்கள் துறைமுகமான கொடுங்கோளூரைக் கடல் மலை நாடான மலையாளத் தலைநகரமாகக் கொண்டிருந்தனர்.

கொங்கு நாட்டுக் கொல்லிமலைப் பக்கத்திலுள்ள கருவூரைக் கொல்லிநகர் என்று குலசேகரர் கூறியிருப்பதாகக் கருதலாம். குலசேகரர் உள்நாட்டுத் தலைநகராகிய கொல்லி என்ற கருவூரிலிருந்து சோழ மண்டல ஆட்சி நடத்தியவர். இவருக்குப் பின் வந்த சேரமான் பெருமாளோ, தாம் உகந்த கொடுங்கோளூரைத் தலைநகராகக் கொண்டு சேர மண்டலத்தை ஆண்டு வந்தார்.

குலசேகரர் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்; சேரமான் பெருமாள் அதே நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர் எனலாம்.

சேக்கிழார் பெருமானின் திருவாக்கிலே சேரமான் பெருமாள் சைவ உலகின் காதலுக்கு உரிய ஒரு பெருந் தொண்டராக நம் மனக்கண் முன் தோன்றுகிறார். 'பொன் வண்ணத் தந்தாதி' யால் கூத்தப்பிரானின் அழகைப் பாடியவர் இவர். மதுரைச் சோமசுந்தரக் கடவுளே இவ்வரசர் பெருமானது கொடைச் சிறப்பையும் ஆட்சிச் சிறப்பையும் ஒரு திருமுகப் பாசுரத்தில் பாராட்டிப் பாடியிருக்கிறார் என்பது சைவர்களின் நம்பிக்கை.

Koviloor Digital Library

குலசேகரர் மீது வைஷ்ணவ உலகத்திற்கு உள்ள காதலை ராமாநுஜரே ஒரு தனியனில் பாடியிருக்கிறார்:

இன்னமுதம் ஊட்டுகேன்; இங்கேவா பைங்கிளியே!
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள், - பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள், சேரலர்கோன், எங்கள்
குலசே கரன்என்றே கூறு

(பொன் அம்சிலை சேர் நுதலியர் வேள் - பொன்போல் அருமையும் அழகும் வாய்க்கப்பெற்ற புருவத்தை நெற்றியில் உடைய மாதர்களுக்கு மன்மதன் போன்ற மனோஹரன்.)

காதலியானவள் தன் காதலன் பெயரைக் கிளிக்குக் கற்பித்து, அக்கிளி வாயிலாக அப்பெயரைக் கேட்க ஆசைப் படுவதுண்டு. குலசேகரப் பெருமாளை நினைக்கும்போது யதிராஜரான ராமாநுஜரே ஒரு காதலியின் தன்மையை அடைந்து பாடுகிறார்.

அரங்கநகர்ப் பெருமாளைப் பாடவல்ல பெருமாள் என்கிறார். 'எங்கள் குலசேகரன்' என்கிறார். பாகவதர்களின் பெருங்காதலுக்கு உரியவர் குலசேகரர் என்பதைத்தான் 'பொன்னஞ் சிலைசேர் நுதலியர் வேள்' என்று எவ்வளவு ஆசையோடு பேசுகிறார்!

Koviloor Digital Library

17. பக்தி உலகிற்குக் குலசேகரர் செய்தி

அன்பர் பணியையும் அன்பர்களிடம் பரிபூர்ண நம்பிக்கையோடு கூடிய நட்புக் காதலையும் குலசேகரர் வாழ்க்கையின் ஸாராம்சமாகக் கொள்ளலாம். அடியார்மீது அமைச்சர்கள் பழி சுமத்தியது கண்டு, 'இறைவனுடைய அன்பர்கள் ஒரு போதும் அது செய்யார்!' என்று பாம்புக் குடத்தில் அவர்களுக்காகத் தாமே கையிட்டுச் சத்தியம் செய்தார் என்ற கதை பக்தி உலகில் குலசேகரரை ஓர் இமயச் சிகரமாகக் காட்டுகிறது.

குலசேகரர் வழியும் குலசேகரப் படியும்

இத்தகைய நம்பிக்கையையும் நட்புக்காதலையும் இன்றைய நாகரிகம் இழந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். பரஸ்பர நம்பிக்கைக்கு மாறாகப் பரஸ்பர சந்தேகமும் பரஸ்பர பயமும் மேலிட்டிருப்பதைக் காண்கிறோம். கறுப்பு மனிதனை வெள்ளையன் நம்புவ தில்லை; ஒரு நாட்டாரை வேறொரு நாட்டார் நம்புவதில்லை; ஒரு வகுப்பு மற்றொரு வகுப்பை நம்புவதில்லை.

கூனி கைகேயியை நோக்கி, 'உன் துரதிர்ஷ்டத்துக்குக் காரணம் கோசலையின் வாழ்வுதான்; அவள் வாழ்ந்தாள்; நீ வீழ்ந்தாய்! நீ வாழ வேண்டுமானால் அவளை வீழ்த்தித்தான் ஆக வேண்டும்!' என்று ஆலோசனை கூறியதாகக் கம்பன் பாடுகிறான். இந்தக் கூனி மனப்பான்மையை இன்றும் காண்கிறோம். அதனால்தான் நம் தமிழ் நாட்டில் சிலரிடையே, 'வீழ்க!' என்ற கோஷம் 'வாழ்க!' என்ற கோஷத்துடன் முழங்குவதைக் கேட்கிறோம்.

ஒருவனை மிதித்துத் தள்ளித்தான் ஒருவன் வாழ்க்கை நடத்த முடியும் என்ற கொள்கை எத்தனை போர்களுக்குப் பூசல்களுக்கும் சொற்போர்களுக்கும் காரணமாகிறது! 'அடி

Koviloor Digital Library

பிடி, உடை, உதை!' என்ற அடாநெறிப் பாதையை விட்டு இன்றைய உலகம் உண்மையாகவே முன்னேற வேண்டு மென்றால், குலசேகரரின் வாழ்க்கையிலும் பாசுரங்களிலும் காணப்படும் அன்பு வழியையும் நம்பிக்கை வழியையும் இன்றைய வாழ்க்கை நிலைக்கு இசைவித்துக் கொள்ள வேண்டியதுதான்.

அவநம்பிக்கை, அவசரம், கவலை என்ற மூன்று தொத்து நோய்கள் நாகரிக மக்களைப் பிடித்துப் பீடிக்கின்றன என்று கூறலாம். 'தெய்வம் வேண்டாம்; பழைய மும்மூர்த்திகளை மகுட பங்கம் செய்துவிட்டோம்!' என்று இறுமாந்து பேசும் பகுத்தறிவு வாதிகளும் மேலே சொன்ன மூன்று தொத்து நோய்களையும் புதிய மும்மூர்த்திகளாகப் பயபக்தியுடன் ஆராதிக்கிறார்களோ என்று தோன்றுகிறது. இந்த நிலையில் குலசேகரர் காட்டிய வழியை இன்றைய சூழ்நிலைக்குத் தக்க விதமாகப் பயன்படுத்திக்கொள்வது எல்லாருக்கும் நன்மை தரும் என்பதில் ஐயமில்லை.

சமயத் தலைவர்கள் இந்த வழியைச் சமரஸ உணர்ச்சி யுடன் கையாண்டால் சமயப் பூசல்கள் ஒழிந்து ஆன்மநேய ஒருமைப்பாடு உலகிலே தோன்றக்கூடும். சீர்திருத்தக்காரர்கள் இந்த நெறியை மேற்கொண்டு ஒழுகினால், அவசியமான சீர் திருத்த முயற்சிகளில் நாம் புரட்சிகரமாக வெற்றி பெறக்கூடும்.

கல்விமான்களும் கலைஞர்களும் குலசேகரரின் வழியைத் தழுவி நடப்பதால் கல்வித் துறையையும் கலைத் துறையையும் சுத்தமாக்கிக் கொள்வார்கள். இத்தகைய கல்வியறிவின் பயனாக உண்மையான பண்பாடு வளர்ந் தோங்கி உலக மக்களை இனவெறியின்றி, மொழிவெறியினறி, நிறவெறி முதலான வெறிகளும் இன்றி ஒரு குலமாக இணைக்கவும் கூடும்.

விஞ்ஞானிகளுக்கும் குலசேகரரின் அன்பு வழி அவசியமானதே. பக்தியும் மகா விசுவாசமும் விஞ்ஞானத் துறையிலும் இடம் பெற்றுவிட்டால் விஞ்ஞானம் மெய்ஞ் ஞானமாகிச் சண்டை சச்சரவுகளுக்குச் சாதனமாகாது, சமாதானத்திற்கே வழி காட்டுவதாகும்.

Koviloor Digital Library

அரசியல் துறையிலும் நம்பிக்கையை உயிர்நிலையாகக் கொண்ட அன்பு வழிதான் நல்ல வழி. இந்த வழியைப் பின்பற்றும் சட்டசபையினர் உண்மையான நாட்டுத் தொண்டராகிவிடுவார்கள். வஞ்சத்தை ராஜ தந்திரமாகக் கொள்வதை விட்டு அமைச்சர்கள் முதலானவர்களும், லஞ்சத்தை ஒரு பிழைப்பாகக் கொள்வதைவிட்டுப் பிறரும் கள்ளங் கபடற்ற குழந்தையுள்ளத்துடன் தேச காரியங்களை நடத்தி வைப்பார்கள்.

சேரர் பெருந்தகையான குலசேகரர் அருளிச் செய்த 105 பாசுரங்களையும் பெருமாள் திருமொழி என்கிறார்கள். குலசேகரரைக் குலசேகரப்பெருமாள் என்று கூறுவதுண்டு. இப்பாசுரங்களில் தாம் பெரிதும் விரும்பிக் கைக்கொண்ட அன்புப் பெருநெறியைத்தான் 'தீதில் நன்னெறி' என்கிறார். 'படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே!' என்ற அந்த மனப்பான்மையும் 'தீதில் நன்னெறி'யைச் சார்ந்ததே.

'தொண்டர் அடிப்பொடி ஆட நாம்பெறில்' என்று இவர் கூறுவதிலிருந்து, தொண்டரடிப்பொடியாழ்வாரைத் தம் உள்ளத்திலே கொண்டு இத்தொடரை இவர் வழங்கியிருக்கலாம் என்று ஊகம் செய்வோரும் உண்டு. அப்படி இல்லாவிட்டால் இவர் வழங்கிய இத்தொடரை விப்பிர நாராயணர் என்ற அப்பெரியார் தமது தொண்டு நெறிக்கு அறிகுறியான புதுமைப் பெயராக (தாஸ்ய நாமமாக) அமைத்துக்கொண்டார் என்பர்.

இது எப்படி இருந்தபோதிலும், 'அணி அரங்கன் திருமுற்றத்து அடியார்' களின் திருக்கூட்டத்தில் தொண்டரடிப்பொடியாழ்வார் ஒருவராக இருந்தார் என்பதும், இதே கூட்டத்தில் குலசேகரரும் கலந்துகொண்டார் என்பதும் நிச்சயம். குலசேகரரும் தொண்டரடிப்பொடிகளும் திருமங்கையாழ்வாரும் சம காலத்தவர்கள் என்பது ஆராய்ச்சிப் பேரறிஞரான திரு.மு. இராகவையங்காரின் அபிப்பிராயம். இது சரியென்றால் திருமங்கையாரும் 'அணி அரங்கன் திருமுற்றத்து அடியவர் திருக்கூட்ட' த்தினராகத் தொண்டாற்றி வந்தார் எனலாம்.

Koviloor Digital Library

திருக்கூட்டத்தின் தேவை

இத்திருமுற்றத்து அடியவர் குழுவினர் 'பாகவத ராஜதானி' யான அரங்க நகரினின்றும் நாடெங்கும் சஞ்சரித்து, முதலாழ்வார்களும் பிறரும் ஏற்றி வைத்த மொழி விளக்கின் உதவியால் அறியாமையிருளைப் போக்கி வந்தனர். இவர்கள் தங்கள் வாழ்க்கையாலும் உபதேசத்தாலும் 'தீதில் நன்னெறி' காட்டிச் சாதி வரையறையின்றி மக்களைத் திருத்திப் பாவிகளை உய்வித்து வந்ததாகக் குலசேகரர் தெளிவாகக் கூறியுள்ளார்.

இத்தகைய அடியவர் திருக்கூட்டம் இன்றும் தேவை தான்; என்றும் தேவைதான். இன்றைய சூழ்நிலைக்குத் தக்கவாறு இத்தகைய திருக்கூட்டங்களைத் திருவரங்கம், தில்லை போன்ற முக்கியமான கோயில்களில் கூட்டி வைத்து உயர்ந்த லட்சியங்களை உபந்நியாச வாயிலாகவும் காலட்சேப வாயிலாகவும் மக்களிடையே பரப்புவது நலமாகும்.

இக்கூட்டத்தினர் நம் தமிழ் மொழியிலுள்ள பக்திப் பிரபந்தங்கள் வாயிலாக நம் மக்களை நெறிப்படுத்துவது எளிதாகும். நாளடைவில் இவர்கள் தமிழகத்திற்கு அப்பாலும் சென்று 'தீதில் நன்னெறி'யைப் பரப்ப முயலலாம்; தமிழ்ப் பிரபந்தங்களிலுள்ள சிறந்த கொள்கைகளை உலகமறிய எடுத்துக்காட்டிச் சமாதானம் எங்கும் நிலைபெறச் செய்யலாம்.

இத்தகைய பாகவதர்களுக்கு மேகங்களை ஒப்பிடுகிறார் நம்மாழ்வார்; 'மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?' என்றவாறு பாகவதர்களும் 'உயிர்க்குலம் ஒன்றே!' என்ற உணர்ச்சியுடன் பணி புரிவார்களாம். மேகமானது தான் அறவே பெய்து உலகை வாழ்விப்பதுபோல் பாகவதர்களும் மக்களை வாழ்விப்பர் என்பது நம்மாழ்வார் கருத்து.

இந்த அடிப்படைக் கொள்கைக்கு இணங்க ஒரு புதிய பாகவத தருமத்தைப் பரந்த உலகின் இன்றைய தேவைக்குத் தக்கபடி பரப்புவதற்கு உரிய தொண்டர் குழாம் தேவைதான். இத் திருக்கூட்டத்தை அமைப்பதில் பக்தியுள்ள தமிழர்கள் முன் நின்று விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்வதும்

Koviloor Digital Library

பொருத்தமானதே. இக்கூட்டத்தினர் இன்றைய விஞ்ஞானத்துடன் தங்கள் உரிமைச் செல்வமாகிய மெய்ஞ்ஞானத்தையும் இசைத்துப் பிரசாரம் செய்வதும் பொருத்தமே.

உண்மையில், பகுத்தறிவுக்கும் பக்திக்கும் முரண்பாடு இல்லை. ஏனென்றால் பக்தி வேறு, மூடபக்தி வேறு. மூடபக்தியைப் பகுத்தறிவு வெறுப்பதுபோல் பக்தியும் வெறுத்து விலக்க வேண்டியதுதான். பகுத்தறிவுடன் தங்கள் பக்தியை இணைத்துக்கொள்ள மறுப்பவர்களை மூடபக்தி பீடிக்கிறது. அப்படியே பகுத்தறிவுவாதிகள் பக்தியுடன் தங்கள் பகுத்தறிவை இணைத்துக்கொள்ள மறுக்கும்போது ஜடமாயா வாதம் (*Materialism*) என்ற நோய் இவர்களைத் தொத்திக் கொள்கிறது.

குலசேகரரின் பக்தி மதத்தில் மூடபக்திக்கு இடமில்லை. பக்தர்களின் ஸத்ஸங்கம் (நல்லார் தோழமை) கிடைத்துவிட்டால் கங்காஸ்நானமும் தேவையில்லை என்று குலசேகரர் கூறுகிறாரல்லவா? 'விரதமே, பரமாக வேதியரும் சரதமாகவே சாத்திரம் காட்டினர்' என்ற மாணிக்கவாசகரின் மனநிலையை விரதங்கள், சடங்குகள் விஷயமாகக் குலசேகரர் முதலான பக்தர்களிடத்திலும் காண்கிறோம்.

அன்பு நெறியே தியாகப் பெருநெறியாகும். வாழ்க்கை அன்பு மயமாகிவிட்டால் அன்பின் கனியாகத் தொண்டும் தியாகமும் கிடைத்துவிடும் என்ற உண்மையையும் குலசேகரர் வாழ்க்கையில் காண்கிறோம். தம் அரச வாழ்க்கை மெய்யில்லாத வாழ்க்கை என்று கண்டுகொண்டதும் கிரீடத்தை அநாவசியமான தலைச்சுமை யென்று தள்ளிவிட்டாரல்லவா?

பட்டம் பதவிகளில் அட்டைபோல் ஒட்டிக்கொள்ளும் இந்நாளிலே குலசேகரரின் தியாகம் பொருளற்றதாகவும் தோன்றக்கூடும். எனினும் சிறந்த செல்வர்களைக் காட்டிலும் துறந்த செல்வர்களே உலக சரித்திரத்தை உருவாக்கி யிருக்கிறார்கள்.

சேர சோழ பாண்டிய மண்டலங்களுக்குத் தலைவராயிருந்த குலசேகரர் உறையூர், மதுரை, கொல்லிநகர்களில்

Koviloor Digital Library

திருமாளிகை கட்டி ராஜ்யபாரம் செய்து வந்ததாகவும், முடிவாக எல்லாம் துறந்து தம்முடைய அருமைப் புதல்வி யான சோழ வல்லி என்பவளையும் அழகிய மணவாளப் பெருமாளுக்கு உரிமையாக்கியதாகவும் திருவரங்க வரலாறு கூறும் 'கோயிலொழுகு' என்ற நூல் தெரிவிக்கிறது. இத்தகைய பரம தியாகத்தால் குலசேகரர் 'தீதில் நன்னெறி' என்ற உத்தம தருமத்தை உன்னத நிலைக்கு வளர்த்துவிட்டார் எனக் கருதலாம்.

சாதாரணப் பயிரைத் தண்ணீர் விட்டு வளர்க்கிறோம். குலசேகரர் தமது லட்சியப் பயிரைக் கண்ணீராலும் இதயத்துச் செந்நீராலும் வளர்த்தார் என்பதற்கு இவர் பாசுரங்களில் சான்று கிடைக்கிறது. நம் தமிழ் நாட்டிலே வேறு ஆழ்வார்களும் சிவநேசச் செல்வர்களும், வடநாட்டுப் பக்த மணிகளும் இதே தருமப் பயிரையும் தியாகப் பயிரையும் வளர்த்து வந்திருக் கிறார்கள். நமது நாடு சிறப்பாக வளர்த்து வந்திருக்கும் இப்பயிரைப் பிற நாடுகளிலும் பக்த மணிகள் கண்ணீர் சொரிந்து வளர்த்திருக்கிறார்கள்.

'ஸாத்விக தர்மம்' என்ற இந்தத் தியாகப் பயிரை அழிக்க முடியாது. இதை அன்புருவாகிய இறைவனே வேலியிட்டுப் பாதுகாப்பவன். இதை மனிதர் உய்யத் தொண்டர் வாழத் துயரகலச் சுகம் வளர வளர்த்து வரவேண்டும். இதற்கு எத்தகைய தியாகமும் பெரிதன்று என்பது குலசேகரர் செய்தி.

'சுகம் வளர அகமகிழும் தொண்டர் வாழ' என்ற குலசேகரர் வாக்கிலே, உலகத்திலே மக்களிடையே சுகம் வளரக் காண்பது தொண்டர்களின் அகமகிழ்ச்சிக்குக் காரணம் என்ற குறிப்பைக் காண்கிறோம். 'தொண்டர் வாழக் கடவுள் உண்டு, உலகம் வாழத் தொண்டர்வேண்டும்' என்பதையும் குலசேகரர் உலகிற்கு அளித்திருக்கும் செய்தியாகக் கருதலாம்.

Koviloor Digital Library

18. பெருமாள் திருமொழி

முதல் திருமொழி

அரங்கனை என்று கண்டு மகிழ்வேன்?

இருள்இரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி அணிபணம்ஆ யிரங்கள் ஆர்ந்த
அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை அணையை மேவித்
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்(டு)என்
கண்இணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே? (1)

[இரிய - நிலைகெட்டு ஓட. இமைக்கும் - விழிக்கும்; (இங்கே) விளங்கும். நெற்றி - (இங்கே) தலை. இனத்துத்தி - சிறந்த புள்ளி; துத்தி - படத்தின் மேலுள்ள புள்ளி. அணிபணம் ஆயிரங்கள் ஆர்ந்த - அழகான ஆயிரம் படங்களை யுடைய. அனந்தன் - ஸர்ப்ப ராஜாவாகிப் பெருஞ்சோதியையுடைய அரவரசப் பெருஞ்சோதி அனந்தன். அணை - படுக்கை. மேவி - பொருந்தி. தெண்ணீர்ப்பொன்னி - தெளிந்த நீரையுடைய காவிரி. திரைக்கை - அலைகளாகிய கைகள். கோமளத்தை - சயனத் திருக்கோலத்திலிருக்கும் அரங்க நகரப்பனை.] அதாவது, உபய காவேரி மத்தியில் அறி துயிலமர்ந்த அழகிய மணவாளனைக் கண்ணாரக் கண்டு களிக்கும் பேறு அடியேனுக்கு என்று வாய்க்குமோ? என்கிறார்.

அறிதுயில் அமர்ந்த அழகிய மணவாளனைக் காவிரித் திருநதியிலே துயிலும் கருணை மாமுகில் என்று குறிப்பிடு வதும் உண்டு.

Koviloor Digital Library

இந்தத் தெய்வ அழகும் கருணையும் அறிதுயில் புரிகின்ற 'அரவரசப் பெருஞ்சோதி அனந்த'னை 'ஜோதிப் பணா முடி ஆயிரம் கொண்ட தொல்லறிவு என்னும் ஓர் பாம்பு' என்பர் பாரதியார். இந்தத் 'தொல்லறிவும்', 'சென்றால் குடையாம்; இருந்தால் சிங்காதனமாம்; நின்றால் மரவடியாம்...' என்றவாறு கைங்கரியத்தில் தன்னை முற்றும் இழந்திருக்கிறது.

வாயார என்று வாழ்த்துவேன்?

வாய்ஓர் ஈரைஞ்ஞூறு துதங்கள் ஆர்ந்த
வளையுடம்பின் அழல்நாகம் உழிந்த செந்தீ
வீயாத மலர்ச்சென்னி விதான மேபோல்
மேன்மேலும் மிகஎங்கும் பரந்த தன்கீழ்,
காயாம்பூ மலர்ப்பிறங்கல் அன்ன மாலை,
கடிஅரங்கத்(து) அரவணையில் பள்ளி கொள்ளும்
மாயோனை, மணத்தூணே, பற்றி நின்(று),என்
வாயார என்றுகொலோ வாழ்த்தும் நாளே! (2)

[வாய் ஓர் ஈர்ஐஞ்ஞூறு - ஓராயிரம் வாய்களில். துதம் - தோத்திரம். ஆர்ந்த - நிறைந்த. வளை உடம்பின் - வெளுத்த உடம்பையுடைய். அழல் நாகம் - நெருப்பையுடைய ஆதிசேஷன். வீயாத - அழிவில்லாத; என்றும் வாடாத. மலர்ச்சென்னி விதானமேபோல் - மலர்களால் அமைந்ததொரு மேற்கட்டி போல. காயாம்பூ - ஒரு வகை நீலமலர். பிறங்கல் - மாலை. அன்ன - போன்ற. கடி அரங்கத்து - அரணோடு கூடிய அரங்கத்திலே. அரவணையில் - ஸர்ப்ப சயனத்திலே. மாயோனை - மாயவனை; ஆச்சரிய சக்திகளையுடைய இறைவனை. மணத்தூணேபற்றி - கர்ப்பக்கிரகத்திற்கு அண்டையி லிருக்கும் திருமணத்தூண்கள் என்ற இரண்டு தூண்களையும் பற்றிக் கொண்டு.]

ஆயிரம் வாய்களாலும் ஆயிரம் திருப்பெயர்களை ஓதிய வண்ணம் பணி செய்கிறான் ஆதிசேஷன். பால்போல் வெளுத்த உடம்பு சுத்த ஸத்வ குணத்தின் அறிகுறி.

Koviloor Digital Library

அசுர இருள் நீங்க ஆதிசேஷன் கக்கும் செந்தீஜ்வாலை ஒரு செம்மலர் மேற்கட்டியாக அமைய, அதன் கீழே நீலமலர் மாலை ஒன்று கிடப்பதுபோல் அரவணையில் கிடக்கிறான் அறிதுயில் அமர்ந்த அழகன். இந்தக் காட்சியால், 'கால் ஆழும்; நெஞ்சு அழியும்; கண் சுழலும்!' என்ற நிலை அன்பர்களுக்கு ஏற்படுகிறது. அழகிய மணவாளனின் அழகு வெள்ளம், அந்தத் திருக்கண்ணோக்கிலே பிறக்கும் கருணை வெள்ளம், தரித்து நிற்க முடியவில்லையாம்; தூக்கித்தள்ளி எறியப்படும் உணர்ச்சி ஏற்படுகிறதாம்.

அடியவரோடு என்று அணுகி நிற்பேன்?

எம்மாண்பின் அயன்நான்கு நாவி னாலும்
எடுத்தேத்தி ஈரிரண்டு முகமுங் கொண்டு
எம்மாடும் எழில்கண்கள் எட்டி னோடும்
தொழுதேத்தி இனி(து) இறைஞ்ச நின்ற செம்பொன்
அம்மான்தன் மலர்க்கமலக் கொப்பூழ் தோன்ற
அணியரங்கத்(து) அரவணையில் பள்ளி கொள்ளும்
அம்மான்தன் அடியிணைக்கீழ் அலர்கள் இட்டு, அங்(கு)
அடியவரோ(டு) என்றுகொலோ அணுகும் நாளே. (3)

[எம்மாண்பின் அயன் - எல்லா வகையாலும் மாண்புடைய பிரமன். ஈர்இரண்டு - நாலு. எம்மாடும் - எல்லாப் பக்கங்களிலும். எழில் கண்கள் - அழகிய கண்கள். செம்பொன் அம்மான்தன் - செம்பொன்போல் அருமையான சுவாமியின். மலர்க் கமலக் கொப்பூழ் - கமல மலர் போன்ற திருநாபி. அலர் - மலர்.]

அயனுக்கு எம்மாண்பும் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் வாக்குத் தேவியை நாவில் தரித்திருப்பதும், அந்த வாக்கினை அழகிய மணவாளன் புகழை எடுத்து ஏத்துவதற்கு உபயோகிப்பதும், தன் கண்கள் எழில் பெறத் தொழுவதும் ஆகும். அழகிய மணவாளனைத் தரிசித்துத் தொழுவதால் அழகும் மாட்சியும் பெறலாம் என்பதும், அவன் திருப்புகழை

Koviloor Digital Library

நாவினால் எடுத்து ஏத்துவதால், நாவன்மை பெறலாம் என்பதும் குறிப்பு.

நாவும் முகமும் கொண்டு நான்முகன் தோத்திரம் செய்தான் என்பது கவனிக்கத் தக்கது. 'நாக்கு மட்டுமா துதித்தது? உள்ளமும் துதித்தது, உயிரும் துதித்தது' என்ற நிலையில் துதிக்கும்போது, அந்த அகத்தின் அழகு முகத்திலே பிரதிபலித்ததால், நாவும் முகமும் கொண்டு தோத்திரம் செய்ததாயிற்று எனலாம்.

நாபிக் கமலம் நன்கு விளங்குவது படைப்பின் விளக்கத்திற்கும் உயிர்ச் சக்திக்கும் அறிகுறி.

என்று வழுத்தி மலர்தூவிக் கைகூப்புவேன்?

மாவினைவாய் பிளந்(து)உகந்த மாலை, வேலை
வண்ணனை, என் கண்ணனை, வன் குன்றம் ஏந்தி
ஆவினை அன்(று) உயக்கொண்ட ஆயர் ஏற்றை,
அமரர்கள்தம் தலைவனை, அந் தமிழின் இன்பப்
பாவினை, அவ்வடமொழியைப் பற்(று)அற் றார்கள்
பயில்அரங்கத்(து) அரவணையில் பள்ளி கொள்ளும்
கோவினைநா உறவழுத்தி என்தன் கைகள்
கொய்ம்மலர்தூய் என்றுகொலோ கூப்பும் நாளே. (4)

[மாவினை - குதிரையை; குதிரை வடிவங் கொண்டு வந்த கேசியென்ற அசுரனை. மாலை - திருமாலை, பெருமானை. வேலை வண்ணனை - கடல் நிறக் கடவுளை. வன்குன்றம் - வலிய கோவர்த்தனக் குன்று. ஆவினை உயக் கொண்ட - பசுக்களைக் காப்பாற்றிய. ஆயர் ஏற்றை - ஆயர்களின் தலைவனை. அமரர்கள் - தேவர்கள்; நித்திய சூரிகள். அம் தமிழின் இன்பப் பாவினை - அழகிய தமிழின் இன்பக் கவிதையை. பற்று அற்றார்கள் பயில் அரங்கத்து - பற்று இல்லாதவர்கள் வசிக்கிற திருவரங்கத்தில். கோவினை - தலைவனை. நாவுற வழுத்தி - நாவால் மிகவும் துதித்து. கொய்மலர் தூய் - கொய்த மலர்களைத் தூவி. கூப்பும் - கைகூப்பும்; அஞ்சலி செய்யும்.]

Koviloor Digital Library

கடலைக் கண்டால் தாபம் நீங்குவதுபோல், அழகுக் கடலான பகவானைத் தாம் உகந்த வடிவில் பக்தர்கள் தங்கள் மனக்கண்முன் கண்டு தாபம் தீரப்பெறுவர் என்பது 'வேலைவண்ணன்' என்ற சொற்றொடரின் புதைபொருள்.

'அந்தமிழின் இன்பப் பாவினை' என்று தம் இஷ்ட மூர்த்தியைக் குறிப்பிடுவதில் குலசேகரரின் தெய்வக் காதலுடன் தாய்மொழிக் காதலையும் காண்கிறோம். இதே மூச்சில், 'அவ் வடமொழியை' என்றும் கூறுவதால், வடமொழியையும் தமிழ் மொழியையும் ஒருங்கே மதித்தவர் குலசேகரர் என்று தெரிந்து கொள்கிறோம்.

என்மலர்ச் சென்னி என்று வணங்கும்?

இணையில்லா இன்னிசையாழ் கெழுமி இன்பத்
தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்த,
துணையில்லாத் தொன்மறைநூல் தோத்தி ரத்தால்
தொன்மலர்க்கண் அயன்வணங்கி ஓவா(து) ஏத்த,
மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ
மதிள்அரங்கத்(து) அரவணையில் பள்ளி கொள்ளும்
மணிவண்ணன் அம்மானைக் கண்டு கொண்(டு), என்
மலர்ச்சென்னி என்றுகொலோ வணங்கும் நாளே. (5)

[இன்னிசை யாழ் கெழுமி - இன்னிசையை யாழில் நிறைத்து. துணையில்லா - ஒப்பில்லாத. தொல்மறை நூல் தோத்திரத்தால் - பழைய வேத நூல்களான தோத்திரங்களால். தொல் மலர்க்கண் அயன் - அநாதியான நாபிக் கமலத்திலுள்ள பிரமதேவன். ஓவாது ஏத்த - இடைவிடாது துதிக்க. மணிமாட மாளிகைகள் - இரத்தினம் போல் அழகு வாய்ந்த மாடமாளிகைகள். மல்கு செல்வ மதிள் அரங்கத்து - நிறைந்த செல்வத்தையும் மதிலையும் உடைய திருவரங்கத்திலே. மணிவண்ணன் அம்மானை - நீலரத்தினம் போன்ற திருநிறத்தையுடைய சுவாமியை. மலர்ச்சென்னி - மலர் சூடிய தலை.]

Koviloor Digital Library

இறைவனை யாழ்கொண்டு தோத்திரத்தாலும் தொழலாம்; மொழியும் இன்றி இசையும் இன்றி அடிகளில் விழுந்தும் தொழலாம்.

இன்னிசை யாழும் வீணையும் கொண்டும், வேதநூல் தோத்திரம் இயம்பியும் தொழப்படுகிற இறைவனைத் தமது தலையில் மலர் சூடிப்போய் அடி வணங்க ஆசைப்படுகிறார் குலசேகரர்.

இக் கருத்துடன் பின்வரும் மணிவாசகப் பெருமான் வாக்கிலுள்ள கருத்தை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இன்னிசை வீணையார் யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்.

கண்ணும் முகமும் என்று கண்டு உருகுவேன்?

அளிமலர்மேல் அயன், அரன், இந் திரனோ(டு)ஏனை
அமரர்கள்தம் குழுவும்அரம் பையரும், மற்றும்
தெளிமதிசேர் முனிவர்கள்தம் குழுவும் உந்தித்
திசைதிசையில் மலர்தூவிச் சென்று சேரும்
களிமலர்சேர் பொழில்அரங்கத்(து) உரகம் ஏறிக்
கண்வளரும் கடல்வண்ணர் கமலக் கண்ணும்
ஒளிமதிசேர் திருமுகமும் கண்டு கொண்(டு)என்
உள்ளம்மிக என்றுகொலோ உருகும் நாளே. (6)

[அளிமலர் மேல் அயன் - வண்டுகள் படிந்திருக்கும் தாமரைப் பூவிலுள்ள பிரமன். அரன் - சிவன். ஏனை அமரர்கள் தம் குழுவும் - மற்றைத் தேவர்களின் கூட்டமும். அரம்பையரும் - ரம்பை முதலிய தேவமாதர்களும். தெளிமதிசேர் - தெளிந்த ஞானத்தையுடைய. உந்தி - ஒருவரை ஒருவர் நெருக்கித் தள்ளிக்கொண்டு. களிமலர் சேர் பொழில் அரங்கத்து - தேனையுடைய மலர்களுள்ள சோலைகளோடு கூடிய திருவரங்கத்திலே. உரகம் - பாம்பு; ஆதிசேஷன்.

Koviloor Digital Library

ஒளிமதிசேர் திருமுகமும் - ஒளியுள்ள சந்திரமண்டலம் போன்ற திருமுக மண்டலமும்.]

குலசேகரரின் அகக்கண்ணுக்கு இலக்காகும் திருவரங்கம் தமிழர்களுக்கு மட்டும் உரியதன்று; தென்னாடும் வடநாடும் அபேதமாய்க் கலந்து தொழும் கோயில் மட்டும் அன்று. இப்பெரிய கோயில் தென்னாட்டில் இருந்த போதிலும் எந்நாட்டவர்க்கும் உரியது; விண்ணாட்டவர்க்கும் உரியது என்பர் குலசேகரர்.

தெளிந்த மதியுள்ள முனிவர்களும் பிறரும் 'திசை திசையில் மலர்தூவி' வந்து வழிபடுகிறார்களாம். திக்கெல்லாம், கண்ணாக நோக்கும் தேவர்களும் தெய்வப் பெண்களுடன் வந்து வழிபடுகிறார்களாம்.

அயனும் அரனும் இந்தப் பூலோக வைகுந்தத்திலே இருட்டறையில் ஒளிபோல் முகம் காட்டும் பெருமானைத் தரிசிக்க வருகிறார்களாம். 'அந்தக் கண்ணையும் முக சந்திரனையும் கண்டு உள்ளுருகப் பெறுவது என்றோ?' என்ற மனநிலையில், உடம்பு கொல்லி நகரில் இருந்தாலும், உள்ளம் ஜீவ யாத்திரையில் எவ்வளவு தூரம் முன்னேறிச் சென்று விடுகிறது.

வைஷ்ணவ லட்சணம்

மறம்திகழும் மனம்ஒழித்து, வஞ்சம் மாற்றி,
வன்புலன்கள் அடக்கி, இடர்ப் பாரத் துன்பம்
துறந்(து),இருமுப் பொழு(து)ஏத்தி, எல்லை இல்லாத்
தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான
அறம்திகழும் மனத்தவர்தம் கதியைப், பொன்னி
அணியரங்கத்(து) அரவணையில் பள்ளி கொள்ளும்
நிறம்திகழும் மாயோனைக் கண்(டு), என் கண்கள்
நீர்மல்க என்றுகொலோ நிற்கும் நாளே? (7)

[மறம் - (இங்கே) கொடுமை. வன்புலன்கள் - கொடிய புலன்கள். இடர்ப்பாரத் துன்பம் - மேன்மேலும் இடர் தருகிற

Koviloor Digital Library

பெருஞ்சுமையான துன்பம். இருமுப்பொழுது - ஐந்து காலங்களிலும். பொன்னி அணி அரங்கத்து - காவிரியாறு அணி செய்யும் அரங்கத்திலே. நீர்மல்க - ஆனந்தக்கண்ணீர் ததும்ப.]

பக்த லட்சணம் கூறப்படுகிறது இச்செய்யுளில். 'அறம் திகழும் மனத்தவர்' - தொண்டர்கள் - அதாவது, நன்னெறி யாளர்கள் (ஸாத்விக தர்மிகள்).

'தீதில் நன்னெறி' யாகிய அறம் இனிது திகழ்வதற்கு, 'மறம் திகழும் மனம்' ஒழிய வேண்டும் - அதாவது, ஹிம்ஸை நெறியைப் பற்றி ஒழுகும் மனம் ஒழியவேண்டும். 'மாறிப் பிறந்துவிட்டோம்; இன்று புதிதாய்ப் பிறந்தோம்!' என்ற புதிய மனநிலை ஏற்படவேண்டும். கள்ளங்கபடற்ற குழந்தை யுள்ளம் பிறக்கவேண்டும்.

இந்த மனத்திலே வஞ்சனைக்கு இடமில்லை. வன்புலன்கள் தாமே அடங்கிப்போகும். துன்பச்சுமை, கவலைச் சுமைகள் விழுந்துவிடும்.

'இருமுப்பொழுது' என்ற ஐந்து காலங்கள், பகற் பொழுதைச் சூரியோதயம் முதல் அவ்வாறு நாழிகையாகப் பிரித்துக் கொண்டு இறைவனை ஏத்துகிற ஐந்து சிறுபொழுது களாகும். இப்படிப் பொழுதை வரையறுத்துக்கொண்டு நியமமாகப் பகவானை ஆராதிப்பவர்களைப் 'பஞ்சகால பராயணர்' என்பர்.

அதுவன்றோ காதல் வாழ்வு!

கோல்ஆர்ந்த நெடுஞ்சார்ங்கம், கூன்நற் சங்கம்,
கொலைஆழி, கொடுந்தண்டு, கொற்ற ஒள்வாள்,
கால்ஆர்ந்த கதிக்கருடன் என்னும் வென்றிக்
கடும்பறவை இவைஅனைத்தும் புறம்சூழ் காப்ப,
சேல்ஆர்ந்த நெடுஞ்கழனி, சோலைசூழ்ந்த
திருவரங்கத்(து) அரவணையில் பள்ளி கொள்ளும்
மாலோனைக் கண்(டு)இன்பக் கலவி எய்தி
வல்வினையேன் என்றுகொலோ வாழும் நாளே? (8)

Koviloor Digital Library

[கோல் ஆர்ந்த - அம்புகளோடு கூடிய. நெடுஞ்சார்ங்கம் - சார்ங்கம் என்னும் வில். கூன்நற்சங்கம் - வளைந்து அழகாயிருக்கும் பாஞ்சஜந்யம் என்னும் சங்கு. ஆழி - சக்கரம். தண்டு - கதாயுதம். கொற்ற ஒள்வாள் - வெற்றிபெற்று ஒளிவீசும் வாள், காலார்ந்த கதி - வாயுவேகம் போன்ற நடை. வென்றிக் கடும் பறவை - வெற்றியும் விரைவுமுள்ள பட்சி. புறம்சூழ் காப்ப - நாற்புறமும் சூழ்ந்து காவல் செய்ய. சேல் ஆர்ந்த - மீன்கள் நிரம்பிய. நெடுங்கழனி சோலை சூழ்ந்த - பெரிய கழனிகளும் சோலைகளும் சூழ்ந்த. மாலோனை - திருமாலாகிய பெருமானை. கலவி - கலந்திருத்தல். வல்வினையேன் - கொடிய வினையையுடைய அடியேன்.]

திருமாலின் ஐந்து ஆயுதங்கள்: சார்ங்கம் என்ற வில், பாஞ்சஜந்யம் என்ற சங்கு, சுதர்சனம் என்ற சக்கரம், கௌமோதகி என்ற கதாயுதம், நாந்தகம் என்னும் வாள். இந்தப் பஞ்சாயுதங்களும் கருடனும் பெருமாளுக்குத் திருமேனிக் காவல் என்பர். சேனையர்கோனாகிய விஷ்வக்ஸேநன் பணிகேட்டு நிற்பதாகவும் கூறுவர்.

அறிதுயில் அமர்ந்த அழகிய மணவாளனுக்கு இந்தக் காவல் அவசியமா? பிரேம மிகுதியால் ஏற்பட்ட காதல் காவல் இது என்பர். இத்தகைய காவலில் இருக்கும் அழகிய மணவாளன் மீது காதல் குலசேகரருக்கு.

இறைவனைத் தரிசித்துப் பணிபுரிவதை 'இன்பக் கலவி' யென்று குறிப்பிடுகிறார், பக்திப் பெருங் காதலுடன்.

ஆராத களிப்பும் தூராத காதலும்

தூராத மணக்காதல் தொண்டர் தங்கள்
குழாம் குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி
ஆராத மனக்களிப்போ(டு) அழுத கண்ணீர்
மழைசோர நினைந்(து)உருகி ஏத்தி நாளும்
சீர்ஆர்ந்த முழவோசை பரவை காட்டும்
திருவரங்கத்(து) அரவணையில் பள்ளிகொள்ளும்

Koviloor Digital Library

பேர்ஆழி அம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே? (9)

[தூராத - எவ்வளவு அநுபவித்தாலும் திருப்தி பிறவாத. குழாம் குழுமி - திருக்கூட்டத்திலே சேர்ந்து. ஆராத - (அவ்வளவிலும்) திருப்தி பெறாத. மழை சோர - மழைபோல் சொரிய. சீர் ஆர்ந்த முழவு - சிறந்த வாத்தியங்கள். பரவை காட்டும் - கடல்போல் முழங்கும். போர் ஆழி - பகைவர்களோடு போர்புரியும் சக்கராயுதம்.]

தொண்டர்களின் பக்தியைத் 'தூராத மனக்காதல்' என்றும், பக்தியால் வரும் இன்பத்தை 'ஆராத மனக்களிப்பு என்றும் கூறுவது கவனிக்கத்தக்கது.

மருந்தையும் விருந்தோடு சாப்பிடவேணும் என்று சொல்வதுண்டு; பக்தர்கள் பகவானையும் தனியே அநுபவிப் பதைக் காட்டிலும் திருக்கூட்டத்திலே கலந்து அநுபவிப்பதை விரும்புவர்.

துள்ளிக் கூத்தாடி அநுபவிப்பதில் விசேஷ விருப்ப முள்ளவர்கள் பக்திக் கவிஞர்கள். அரசனைப்போல் கௌரவ மாகச் சிங்காதனத்தில் கொலுவிருந்தோ, வணிகனைப்போல் லாப நஷ்டக் கணக்கைப் பார்த்தோ அநுபவிக்க முடியாத கலை பக்தி.

எந்த உயர்ந்த கலை அநுபவமும் சாராம்சத்தில் பக்தியநுபவம் போன்றதுதான்.

அடியார் குழுவுடன் இசைந்து வாழ்தல்

வன்பெருவா னகம்உய்ய, அமரர் உய்ய,
மண்உய்ய, மண்ணுலகில் மனிசர் உய்ய
துன்பம்மிகு துயர்அகல, அயர்(வு)ஒன்(று) இல்லாச்
சுகம்வளர, அகமகிழும் தொண்டர் வாழ,
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத்(து) அடியார் தங்கள்
இன்பம்மிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே என்றுகொலோ இருக்கும் நாளே? (10)

Koviloor Digital Library

(வன்பெரு வானகம் - சொர்க்கம் முதலிய மேலுலகங்கள்.)

அழகிய மணவாளன் தென்திசை நோக்கிப் பள்ளிகொண்டிருப்பது, விண்ணும் மண்ணும் உய்வதற்காகவே என்பர். மண்ணில் மனிதர் உய்வதை முக்கியமாகக் கொண்டு காவிரியை மாலையாக அணிந்துகொண்டு பகவான் பள்ளி கொண்டிருக்கிறானாம்.

துயரம் போகவேண்டும். உண்மையான சுகம் வளர வேண்டும். உலகத்திலே துயரம் போகச் சுகம் வளரத் தொண்டர் வாழவேண்டும். இதற்காகவே தொண்டர் நாதனான அணி அரங்கன் பள்ளிகொண்டிருக்கிறான்.

'அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும் அணி அரங்கன்' என்று குலசேகரர் கூறுவதுடன்,

தென்பால் உகந்தாடும்
தில்லைச்சிற் றம்பலவன்

எனறு மணிவாசகப்பெருமான் கூறுவதை ஒப்பிடலாம். தென்திசைமீது விசேஷ அன்புடன் எந்நாட்டவர்க்கும் இறைவனாக நடராஜாவையும் அணி அரங்கனையும் இந்த இரண்டு பக்தமணிகளும் குறிப்பிடுவதிலிருந்து, இவர்களது தென்னாட்டபிமானம் இனிது புலனாகும்.

பலச்ருதிப் பாட்டு

திடர்விளங்கு கரைப்பொன்னி நடுவு பாட்டுத்
திருவரங்கத்(து) அரவணையில் பள்ளி கொள்ளும்
கடல்விளங்கு கருமேனி அம்மான் தன்னைக்
கண்ணாரக் கண்(டு)உகக்கும் காதல் தன்னால்,
குடைவிளங்கு விறல்தானைக் கொற்ற ஒள்வாள்
கூடலர்கோன் கொடைக்குலசே கரன்சொற் செய்த
நடைவிளங்கு தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலம்திகழ்நா ரணன் அடிக்கீழ் நண்ணு வாரே! (11)

Koviloor Digital Library

[திடர் - மணற்குன்றுகள். நடுவு பாட்டுத் திருவரங்கம் - நடு இடத்திலுள்ள திருவரங்கம். கடல்விளங்கு - கடல்போல் விளங்குகிற. குடை விளங்கு - அரசாட்சிக்கு அறிகுறியான கொற்ற வெண்குடை விளங்குகிற. விறல்தானை - திறமை மிகுந்த சேனை. கூடலர்கோன் - மதுரையில் உள்ளவர்களுக்குத் தலைவன். சொற்செய்த - சொன்ன; அருளிச் செய்த. நடை - தமிழ் நடை.]

இது இப்பதிகத்தின் பலச்ருதிப் பாட்டு; இத்திரு மொழியை ஓதுகிறவர்கள் நாரணன் அடிக்கீழ் நண்ணுவதாகிய பயனைப் பெறுவர் என்று தெரிவிக்கிறது. இந்தப் பலச்ருதிப்பாட்டைத் திருநாமப்பாட்டு என்று கூறுவதும் உண்டு.

குலசேகரர் வாக்கல்ல இந்தப் பலச்ருதிப்பாட்டு என்று கருதுவோரும் உண்டு. இவர்கள், ஆழ்வார்களில் திருமங்கை மன்னன் ஒருவரே பலச்ருதி பாடியிருக்கிறார் என்பர்.

நிறைந்தது

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 26733